# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 433 பிலவ வருடம், தை மாதம் 07ஆம் திகதி வியாழக்கிழமை (20.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகீர் - 16, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## இந்திய குடியரசு தின கொழும்பு நிகழ்வின் அதிதியாக பெசில்



**டக்ளஸின் கோரிக்கையை ஏற்றது அமைச்சரவை** 02 பக்கம்


## நாட்டின் பல பகுதிகளில் தொடர் மின்சாரத் தடை



02 பக்கம்

# மக்கள் ஆணையை மீறமாட்டோம்!

### கோட்டாவுக்கு சுமந்திரன் பதிலளிப்பு; ஜனாதிபதியின் உரை மோசமென்கிறார்



வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு மக்கள் வழங்கிய ஆணையை மீறமாட்டார்கள். அவர்கள் தமது சித்தாந்தங்களை கைவிடப்போவதில்லையென்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். ஜனாதிபதியின் அக்கிராசன உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கூறியதாவது,

அரசின் கொள்கை விளக்கவுரையில் ஜனாதிபதி என்ன கூறினார் என்பது புரியவில்லை. நாடோ அல்லது மக்களோ எந்தப் பாதையில் செல்லவேண்டும் என்ற தெளிவான வழிகாட்டுதல்கள் அவரது பேச்சில் இல்லை.

பிரச்சினைகளை தீர்க்கும் எந்த வழிமுறையும் இல்லை. நாடு பிச்சைப் பாத்திரத்தை ஏந்தி நிற்கிறது. அந்தப் பாத்திரத்திற்கு 500 மில்லியன் டொலர் கிடைத்திருக்கிறது. பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டிருந்தால்... 02 பக்கம்

## ஜனாதிபதியின் புதிய செயலாளராக காமினி செனரத் நியமனம்

**பிரதமரின் செயலாளராக டீ.எம்.அநுர திசாநாயக்க**

**நீர்ப்பாசன அமைச்சின் செயலாளராக கே.டபிள்யூ.ஐவன் டீ சில்வா**

**அமைச்சுகளின் செயலாளர்களுக்கு பாரிய பொறுப்பு - ஜனாதிபதி தெரிவிப்பு**




இலங்கை நிர்வாகச் சேவையின் சிரேஷ்ட அதிகாரியான காமினி செனரத், ஜனாதிபதியின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம், ஜனாதிபதியினால் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முற்பகல், காமினி செனரத்திடம் கையளிக்கப்பட்டது.

இலங்கை நிர்வாகச் சேவையில் விசேட தர அதிகாரியான காமினி செனரத், ஐந்தாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மேலதிகச் செயலாளராகவும் பணிக்குழாம் பிரதானியாகவும், 2004 – 2005, 2019ஆம்... 02 பக்கம்

## சாத்தியமானதை ஏற்றுக்கொண்டு சாதிக்கும் வல்லமையோடு பயணம்

### அமைச்சர் டக்ளஸ் சபையில் தெரிவிப்பு



தமிழ் மக்களுக்கான சுபீட்சமான எதிர்காலத்தினை உருவாக்குவதற்கு வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையின் அர்த்தத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில்... 02 பக்கம்

## ஈஸ்டர் தாக்குதல் உண்மையை உடனடியாக வெளிப்படுத்துக!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை



02 பக்கம்

## எட்டு நாட்களுக்குத் தேவையான டீசல் மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது

### மின்துண்டிப்பு வருமாயின் முன்கூட்டியே மின்சார சபை அறிவிக்கும் என்கிறார் கம்மன்பில



*யோ.தர்மராஜ்*

கடற்பரப்பில் நங்கூரமிட்டிருந்த இரு கப்பலிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசலில் 10 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை மின்சார உற்பத்திக்காக, மின்சார சபைக்கு வழங்குவதற்கு பெற்றோலியக்... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..





## பன்முகத்தன்மையான பங்களிப்பை இலங்கை மற்றும் இங்கிலாந்து ஏற்பு

### வெளிநாட்டமைச்சர் பீரிஸ், பிரித்தானிய இராஜாங்க அமைச்சர் விம்பிள்டன் தாரிக் சந்திப்பு



ஜனநாயகப் பாரம்பரியங்கள் மற்றும் வரலாற்று உறவுகளின் மீது தாபிக்கப்பட்டு, இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம் அனுபவித்த தனித்துவமான, பன்முகத்தன்மையுடைய பங்காளித்துவத்தை வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

பிரித்தானியாவின் தெற்காசியா, ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய இராஜாங்க அமைச்சரான விம்பிள்டன் பிரபு தாரிக் அஹ்மத்துடன் வெளிநாட்டு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். 02 பக்கம்

### உஷ்



ஜனாதிபதியின் அக்கிராசன உரை இடம்பெற்ற தினத்தன்று ஆளுங்கட்சியின் இருவர் சமுகமளிக்கவில்லை.

ஒருவர் விஜேதாச ராஜபக்ஷ. மற்றையவர் நீதியமைச்சர் அலி சப்ரி.

ஜனாதிபதியின் உரையை கேட்க விரும்பவில்லையென தெரிவித்து விஜேதாச வரவில்லையாம். அமைச்சர் சப்ரி கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் வெளிநாட்டு பயணம் ஒன்றில் இருந்தபோது தொற்றுக்குள்ளானதால் அங்கேயே தனிமைப்படுத்தப் பட்டுள்ளாராம்.

## 13 அமுலாக்கம் குறித்து ஜனாதிபதியுடன் பேசுக!

### மோடியுடன் பேசக்கூடாதென்கிறார் அமைச்சர் உதய கம்மன்பில

*யோ.தர்மராஜ்*

இலங்கை இறைமையுள்ள நாடு. இந்தியாவின் ஒரு பகுதியில்லை. ஆகவே, 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியுடன் பேசவேண்டுமே தவிர மோடியுடன் அல்ல என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தவேண்டும் எனக் கோரி தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளமை குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். 02 பக்கம்

## மூன்றாவது தடுப்பூசியை பெறுமாறு கோரிக்கை!

### அமைச்சரவை இணைப் பேச்சாளர் வலியுறுத்து



*யோ.தர்மராஜ்*

ஒமிக்ரோன் திரிபு உலகளவில் பரவிச் செல்லும் நிலையில், துரதிர்ஷ்டவசமாக நாட்டில் இதுவரை 5 மில்லியன் வரையான மக்களே மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர். எனவே, உங்களுக்கு அருகிலுள்ள தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்று மூன்றாவது... 02 பக்கம்

## உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது; தேவையற்ற அச்சம் வேண்டாம்

### அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

*யோ.தர்மராஜ்*

உணவுத் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால், நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். 02 பக்கம்






LKNewspapers Viber Community

## பன்முகத்தன்மையான

உணர்வுகளை மறுபரிசீலனை செய்த அஹ்மத் பிரபு, ஒத்துழைப்பிற்கான உத்வேகத்தை வழங்கும் கூட்டாண்மையின் நிலையான தன்மையை ஒப்புக்கொண்டார்.

உலகளாவிய பிரிட்டன் என்ற ஐக்கிய இராச்சியத்தின் நோக்கின் பின்னணியில் இருதரப்பு உறவுகளை ஆழப்படுத்துவதற்கான வாய்ப்பை ஒப்புக்கொண்ட இரு தரப்பினரும் அரசியல் உறவுகள், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா, இந்து சமுத்திரத்திலான ஒத்துழைப்பு, பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு, காலநிலை மாற்றம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கல்வி மற்றும் ஸ்டெம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் ஆர்வத்தை வெளிப்படுத்தினர். பரஸ்பர நலன் சார்ந்த விடயங்கள் குறித்து 2021 ஒக்டோபரில் லண்டனில் இடம்பெற்ற பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் எலிசபெத் ட்ரஸுடனான தனது இருதரப்புச் சந்திப்பை அமைச்சர் பீரிஸ் நினைவுகூர்ந்தார்.

இரண்டு வெளிநாட்டு அமைச்சுகளுக்குமிடையே உத்தியோகபூர்வ அளவிலான ஆலோசனைகளைத் தொடங்குவதன் முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் சுட்டிக்காட்டினர். மக்களுக்கு இடையிலான தொடர்புகளின் வலிமையைக் கருத்திற்கொண்டு, தற்போதைய கூட்டாண்மைக்கு ஏற்றவகையில் இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை நினைவுகூரும் வகையிலான கலந்துரையாடல்களும் இதன்போது மையப்படுத்தப்பட்டன.

நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஊக்குவித்தல், சுயாதீன ஆணைக் குழுக் களின் செயற்பாடுகள், பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அதன் சீர்திருத்தச் செயற்பாடுகள் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்கு சபை மற்றும் பொது நிறுவனங்கள் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்துவதில் நிலையான அபிவிருத்தி இலக்கு 16இற்கான வழிநடத்தல் குழுவின் செயற்பாடுகள் ஆகியவற்றில் முன்மொழியப்பட்ட திருத்தங்களை வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ், அஹ்மத் பிரபுவிடம் விளக்கினார்.

அனைத்தையும் உள்ளடங்கிய வகையில், உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயன்முறை மற்றும் மனித உரிமைகள் பேரவை உட்பட ஐ.நா. அமைப்புடனான தொடர்ச்சியான ஆக்கப்பூர்வமான ஈடுபாடு ஆகியவற்றுக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை அமைச்சர் பீரிஸ் மீண்டும் வலியுறுத்தினார்.

ஐக்கிய இராச்சியத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாக தடை செய்தமை உட்பட பயங்கரவாத எதிர்ப்புத்துறையில் வழங்கப்பட்ட ஆதரவிற்காக அரசாங்கத்தின் ஆழ்ந்த பாராட்டுகளை வெளிநாட்டு அமைச்சர் தெரிவித்தார்.





திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்கிய தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்புப் பேரணி நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இந்தப் பேரணி மருதானை, டெக்னிக்கல் சந்தியிலிருந்து கோட்டை புகையிரத நிலையம் வரையில் பயணித்தது. (படப்பிடிப்பு:- பிரதீப் தம்பரகே)



## மூன்றாவது தடுப்பூசியை

தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு அனைவரிடமும் கோரிக்கை விடுப்பதாக அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (19) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ளவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி வழங்குவதற்கான ஜனாதிபதி முன்னெடுத்த வேலைத்திட்டத்திற்கமைய, நாட்டுக்குத் தேவையான தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனினும், துரதிர்ஷ்டவசமாக நாட்டில் இதுவரை 5 மில்லியன் வரையான மக்களே மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர். ஆனால், தற்போது ஒமிக்ரோன் திரிபு உலகளவில் பரவிச் செல்வதால் தடுப்பூசிகள் மூலம் மக்களை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

எனவே, உங்களுக்கு அருகிலுள்ள தடுப்பூசி நிலையங்களில் மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டு, உங்களுடைய மற்றும் உங்கள் உறவுகளின் உயிரை பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரிடம் கோரிக்கை விடுக்கின்றோம். மேலும், மூன்றாவது தடுப்பூசி பெற்றுக்கொள்வதற்கு முக்கியத்துவம் கொடுக்குமாறும் கோருகின்றோம் - என்றார்.

## நாட்டின் பல பகுதிகளில்...

எரிபொருள் இன்மையால் களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி கட்டமைப்பிலுள்ள இரண்டு மின்னுற்பத்தி நிலையங்கள் செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதனால் தேசிய மின் கட்டமைப்பிற்கான 282 மெகா வோட் மின்சாரம் இழக்கப்பட்டுள்ளதாக களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி கட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர், மேலதிக பொது முகாமையாளர் அன்ரூ நவமணி தெரிவித்துள்ளார்.

அத்துடன், நேற்று பிற்பகல் கோரிக்கைக் கேற்ற விநியோகத்தை மேற்கொள்வதில் தடை ஏற்பட்டுள்ளதுடன், நாட்டின் பல பகுதிகளில் மின்சார விநியோகத்தை தடை செய்ய நேரிடும் என அவர் கூறியுள்ளார்.

களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி தொகுதிக்கு தேவையான எரிபொருளை இன்று வழங்குவதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், எரிபொருள் கிடைத்த தன் பின்னர் மின்பிறப்பாக்கிகளை செயற்படுத்துவதற்கு மேலும் சில மணித்தியாலங்கள் செல்லும் என்பதுடன், அந்த காலப்பகுதியில் தேசிய மின்கட்டமைப்புடன் இணைப்பதற்கு தேவையான மின்சாரம் இல்லையெனவும் அன்ரூ நவமணி கூறியுள்ளார்.

## ஈஸ்டர் தாக்குதல்...

தேர்தல் வெற்றிக்காக அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஈஸ்டர் தாக்குதலுக்கான பிரதான சூத்திரதாரிகளை கண்டறிவதும் அதில் முன்னிலைக் காரணியாக இருந்தது எனவும், இந்த ஆர்வ உறுதிமொழி பெரும் குழப்பத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பொரளையிலுள்ள அனைத்து புனிதர்களின் தேவாலய கட்டடத்தில் வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக அண்மையில் தகவல் வெளியாகியிருந்ததோடு, இது தொடர்பில் ஆராய்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் நேற்று (19) காலை தேவாலயத்திற்குச் சமூகமளித்தார்.

தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உயிர்களைப் போன்று அவர்களின் இரத்தத்திலும், பிணத்திலும் ஆட்சிக்குவந்த அரசாங்கத்திற்கு இவ்வாறான ஈஸ்டர் சூழ்ச்சியாளர்களை கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்புள்ளது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஆனால், நடப்பது மந்தமான மற்றும் சந்தேகத்திற்குரிய விசாரணை செயல்முறையாகும் எனவும் தெரிவித்தார்.

## இந்திய குடியரசு....

இந்தியாவின் 73ஆவது குடியரசு தினத்தையொட்டி கொழும்பில் அதன் உயர்ஸ்தானிகராலயம் நடத்தவுள்ள நிகழ்வுக்கு அதிதியாக நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவை அனுப்ப அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்திய குடியரசு தினத்தையொட்டி கொழும்பில் அதன் உயர்தானிகராலயம் நடத்தும் நிகழ்வுக்கு அரசின் சார்பில் அதிதியொருவர் அழைக்கப்படுவார். அப்படியான அழைப்புக் கேற்ப இம்முறை அனுப்பவேண்டிய பிரதிநிதி குறித்து நேற்றுமுன்தினம் கூடிய அமைச்சரவை கூட்டத்தில் பேசப்பட்டது.

இந்தியாவுடன் நெருக்கமாக செயற்பட்டுவரும் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவை இந்த நிகழ்வுக்கு அனுப்புவதே பொருத்தமானதாக இருக்குமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் தெரிவித்துள்ளார். இதனை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை, மேற்படி நிகழ்வுக்கு நிதியமைச்சர் பெசிலை அனுப்ப தீர்மானித்தது.

## 13 அமுலாக்கம் குறித்து

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியுடனேயே பேசவேண்டுமே தவிர மோடியுடன் பேசக்கூடாது.

நாங்கள் இறைமையுள்ள நாடு. மாறாக, நாங்கள் இந்தியாவின் ஒரு பகுதி இல்லை என்பதால் அவர்கள் பிரதமர் மோடிக்கு தெரிவிப்பதற்கு பதில் தங்கள் கரிசனைகளை எங்கள் ஜனாதிபதிக்கு தெரிவித்திருக்கவேண்டும்.

எங்கள் தமிழ் சகோதரர்கள் இலங்கையின் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்திடமே தங்களுடைய பிரச்சினைகளைக் கூறவேண்டுமே தவிர, வெளியில் பேசக்கூடாது – என்றார்.

## மக்கள் ஆணையை ...

மேலும் எவராவது வந்து பிச்சையிடுவார்கள். இதுதான் நாட்டின் நிலைவரம். ஜனாதிபதியின் உரை ஆக கீழ்மட்டத்திற்கு சென்றுள்ளது.

நாடு மோசமான நிலையில் சென்றுகொண்டிருக்கிறது. அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் எப்போது நிறுத்தப்படுமென தெரியவில்லை. வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கை போராட்ட மாண்பு கொண்டது.

சுயநிர்ணய உரிமை, சுயாட்சிக்கான உரிமை அதிகாரப்பகிர்வுக்கான உரிமை என்பன அம்மக்களின் சித்தாந்தங்கள். சில அடிப்படை வசதிக்காக அவற்றை விடுமாறு ஜனாதிபதி கூறுகிறார். எமது கட்சியின் கொள்கையானது மக்கள் எமக்கு வழங்கிய ஆணை. அந்த மக்களின் ஆணையை மதிக்க அதன்படி நடக்க கடமைப்பட்டுள்ளோம். ஜனாதிபதியின் உரை ஒரு உரையல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம் - என்றார் சுமந்திரன் எம்.பி.

## எட்டு நாட்களுக்கு...

கூட்டுத்தாபனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது எட்டு நாட்களுக்குத் தேவையான டீசல் மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாக வலுச்சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (19) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சாரம் துண்டிப்பு தொடர்பான பிரச்சினை உள்ளகத்தில் பேசித் தீர்க்கவேண்டிய விடயமாகும். எனினும், அது வெளியில் வந்தது. எங்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதால் அதற்கு நாங்களும் பதிலளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

எது எவ்வாறாயினும் நேற்றுமுன்தினம் மத்திய வங்கியினால் வலுச்சக்தி அமைச்சுக்கு டொலர் வழங்கப்பட்டமையினால், நங்கூரமிட்டிருந்த இரு கப்பலிலிருந்து 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசல் இறக்குமதிசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கிடைத்துள்ள 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசலில் 10 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை மின்சார உற்பத்திக்காக, மின்சார சபைக்கு வழங்குவதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனினும், நாளொன்றுக்கு ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசலையே மின்சார சபை கோரியிருந்தனர். அதன்படி, தற்போது எட்டு நாட்களுக்குத் தேவையான டீசல் வழங்கப்பட்டுள்ளது.

எனக்கும் அமைச்சர் காமினி லொக்குகேவிற்கும் எவ்வித பிரச்சினையுமில்லை. எங்கள் இருவருக்கும் டொலர் பிரச்சினையே இருக்கின்றது. டொலர் இருக்குமாக இருந்தால் எவ்வித பிரச்சினையும் இருக்காது. எரிபொருட்கள் இறக்குமதி செய்யப்படாதிருந்தால் அது எங்கள் அமைச்சின் பக்கமுள்ள தவறாகும். ஆனால், எரிபொருள் கொண்டுவரப்பட்டுள்ள கப்பல் நங்குகூரமிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, வாரத்திற்கு ஒருமுறை நாட்டுக்குத் தேவையான டீசல் கப்பலும் ஐந்து நாட்களுக்கு ஒருமுறை பெற்றோல் கப்பலும் வருகை தருகின்றன. மூன்று வாரங்களுக்கு ஒருமுறை விமானங்களுக்குத் தேவையான எரிபொருள் கப்பல் வருகை தருகின்றது. எனவே, மாதமொன்றுக்குத் தேவையான எரிபொருளை ஒரே கப்பலில் கொண்டுவர முடியாது.

7 நாட்களுக்குத் தேவையான எரிபொருளே எங்களிடமுள்ளது. ஆனால், நேற்று (19) கப்பலிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளினால் கையிருப்பு அதிகரித்துள்ளது. அதன்பின்னர் அது குறையும்போது மீண்டுமொரு கப்பலிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்யப்படும். ஆனால், டொலரை முற்றாக செலுத்தும்போது தேவையான எரிபொருட்கள் எங்களுக்கு கிடைத்துகொண்டிருக்கும். எனவே, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்பது உண்மைக்குப் புறம்பானது.

இதேவேளை, மின்சார துண்டிப்பு ஏற்படுமாக இருந்தால் அதனை முன்கூட்டியே அறிவிப்பதற்கான நேர அட்டவணையும் மின்சார சபை தயாரித்துள்ளது. ஆனால், மின்துண்டிப்பு ஏற்படுமாக இருந்தால் அதனை முன்கூட்டியே மின்சார சபை அறிவிக்கும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

## உணவுத் தட்டுப்பாடு

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ள தேவையில்லை. உணவுத் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பசுமை விவசாய திட்டத்தால் நாட்டில் 20 – 25 வீதமான விளைச்சல் குறைந்துள்ளதால் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேவையான அரிசியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கை – சீனாவிற்கு இடையிலான அரிசி மற்றும் இறப்பர் உடன்படிக்கைக்கு 70 வருடங்கள் பூர்த்தியாவதால் சீனாவினால் 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இலவசமாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. இந்த அரிசி தொகையும் மார்ச் மாதத்தில் நாட்டுக்கு கிடைக்கவுள்ளது.

இதேவேளை, அனைத்து வீடுகளிலும் வீட்டுத்தோட்ட திட்டத்தின்படி கிழங்கு, பழங்கள், புடலங்காய் மற்றும் மரக்கறிகளை விளைச்சல் செய்வதற்கு ஒவ்வொரு வீட்டுக்கும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான விவசாயப் பொருட்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு, நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் இரு வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே, தங்களுடைய வீடுகளில் சிறிய இடமிருந்தாலும் அரசாங்கம் வழங்கும் விவசாய பொருட்களை பெற்று அதனை தங்களுடைய வாழ்க்கைச்சுமையை குறைப்பதற்கான சிறிய விவசாயத்தையேனும் முன்னெடுக்குமாறு அனைவரிடமும் கோரிக்கை விடுக்கின்றோம். எனவே, நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுமென தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை – என்றார்.

## ஜனாதிபதியின்

ஆண்டுக் காலப்பகுதிகள் மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் பிரதமரின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

ஹக்மன மெதடிஸ் கல்லூரி, மாத்தறை ராஹுல மற்றும் காலி ரிச்மன்ட் கல்லூரிகளில் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி பயின்றுள்ள செனரத், களனி பல்கலைக்கழகத்தில் முதல் பட்டத்தைப் பெற்று, இலங்கை நிர்வாகச் சேவையில் இணைந்துகொண்டார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணினித் தொழில்நுட்பத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுள்ள அவர், ஐக்கிய இராச்சியம், ஜப்பான், சிங்கப்பூர், பாகிஸ்தான், ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகளில் பயிற்சிப் பாடநெறிகளிலும் கலந்துகொண்டுள்ளார்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்கள் பலவற்றில் உயர் பதவிகளை வகித்துள்ள செனரத், மக்கள் வங்கி, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், லிட்ரோ கேஸ் நிறுவனம் உள்ளிட்ட பல அரச நிறுவனங்களுக்குத் தலைமைத்துவம் வகித்துள்ளார்.

இதேவேளை, பிரதமரின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள டீ.எம்.அநுர திசாநாயக்கவுக்கான நியமனக் கடிதத்தையும் ஜனாதிபதி வழங்கினார்.

இலங்கை நிர்வாகச் சேவையில் சிரேஷ்ட அதிகாரியான அநுர திசாநாயக்க, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றியுள்ளார். ஏற்கனவே பல அமைச்சுகளின் செயலாளர் பதவிகளை வகித்துள்ள திசாநாயக்க, அரச சேவையில் உயர் பதவிகள் பலவற்றை வகித்த அரச அதிகாரியாவார்.

அநுர திசாநாயக்கவின் புதிய நியமனம் காரணமாக வெற்றிடமாகியுள்ள நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் பதவிக்கு, கே.டபிள்யூ. ஐவன் டீ சில்வா நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கான நியமனக் கடிதத்தையும் ஜனாதிபதி வழங்கினார்.

இதன்போது, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகளின் செயலாளர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டின் அனைத்து விடயங்களும், பொதுச் சேவையை நம்பியே உள்ளன. அதனால், அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் பாரிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் இலக்குகள் என்பன அமைச்சுகளுக்கே வழங்கப்பட்டுள்ளன. அதனால், உரிய அதிகாரிகளை ஊக்கப்படுத்தி, எதிர்பார்த்திருக்கும் இலக்குகளை அடைவதற்கான முழுப்பொறுப்பும் அமைச்சுகளின் செயலாளர்களிடமே உள்ளது என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

மஹா சங்கத்தினர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## சாத்தியமானதை...

கலந்துகொண்டு உரையாற்றும்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியதாவது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த ஆண்டிற்கான ஆரம்ப உரை நாட்டு மக்களுக்கு ஒளி வீசும் நம்பிக்கைகளை விதைத்திருக்கிறது.

வளர்ந்துவரும் நாடாகிய இலங்கைத்தீவு கோவிட்-19 காரணமாக எதிர்கொள்ளும் சவால்களை யதார்த்தமாக தனது உரையில் தெளிவுபடுத்தியுள்ளார். சக கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் சுயங்களை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதும், தனக்கு வாக்களிக்காத மக்களுக்கும் சேவைகள் தொடரும் என்ற அவரது பெருந்தன்மை மிக்க கூற்றுகளும் அவரது அரசியல் நிலைப்பாட்டை பறைசாற்றி நிற்கிறது.

ஜனாதிபதி தனது உரையில், இனவாதத்தை நிராகரிக்கின்றோம் என்றும் நாட்டில் வாழும் சகல பிரஜைகளும் கௌரவத்துடன் வாழ்வதற்கும், அவர்களது அனைத்து உரிமைகளை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்றும் திறந்த மனதுடன் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த விடயங்கள் குறித்து சக தமிழ்க் கட்சி தலைமைகள் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். அதன் அர்த்தத்தை புரிந்துகொண்டு அரசியல் தீர்வு குறித்து நம்பிக்கையோடு செயலாற்ற முன்வர வேண்டும்.

அது மட்டுமன்றி, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கோட்டாபய ராஜபக்ஷவிடம் நாம் உரிமையோடும் தேசிய நல்லிணக்க ஒழுங்கு முறையிலும் முன்வைத்த விடயங்கள் குறித்தும் தனது உரையில் தெரிவித்துள்ளமை எமக்கு நம்பிக்கையை தருகின்றது. காணாமல்போனோருக்கு நீதியும் பரிகாரமும் வழங்குவோம் என தெரிவித்துள்ளார்.

சிறையில் வாடும் கைதிகளை விடுவித்து வருவது குறித்து பேசியுள்ளார். அது மட்டுமன்றி யுத்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தபோது, படையினரின் பயன்பாட்டில் இருந்த 90 வீதமான நிலங்களை விடுவிப்பதற்கு தான் முயற்சி எடுத்தமை குறித்து பேசியுள்ளார்.

இதில் எனது பங்கோடு பல்லாயிரம் ஏக்கர் தமிழர் நிலங்களை அவர் விடுவித்து தந்திருக்கிறார் என்பதை நான் கூறிவைக்க விரும்புகிறேன். இன்னமும் விடுவிக்கப்படாத நிலங்களை விடுவிப்பதாகவும் அவர் தனது உரையில் உறுதியளித்துள்ளார். அனைத்து மக்களின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்களை உருவாக்கிவருவதாகவும் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி சர்வதேச சமூகத்தினரால் முன்வைக்கப்பட்ட அவதானிப்புகள் குறித்தும் நியாமான முடிவுகளை எடுப்போம் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்புகளை தனது உரையில் யதார்த்தபூர்வமாக தெரிவித்திருக்கும் ஜனாதிபதி, வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் வேறுபாடுகளை தற்காலிகமாக தவிர்த்துவிட்டு, தான் எடுக்கும் வடக்கு, கிழக்கு மக்களுக்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குமாறும் கேட்டுள்ளார்.

உரையை முழுமையாக படித்து முடித்தார்களோ, அல்லது செவிமடுத்தார்களோ தெரியாது. அதில் ஒன்றும் இல்லை என்றும், குப்பை என்றும் வழமை போல் கூச்சலிடத் தொடங்கிவிட்டார்கள்.

13ஆவது திருத்தச்சட்டத்தை தும்புத்தடியால் கூட தொட்டும் பார்க்க மாட்டோம் என்று நிராகரித்துவிட்டு, இன்று கடலை ஞானத்தில் அதையே தூசி தட்டி இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைத்தவர்கள் இன்னும் பல ஆண்டுகள் கழித்து ஜனாதிபதியின் இன்றைய கொள்கைப் பிரகடனங்களையும் தூசு தட்டி பார்க்கக்கூடும். அரசியல் வேறுபாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு வாருங்கள். முன்னோக்கி செல்வோம் என்றுதான் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

கொள்கையை ஒருபுறம் வைத்துவிட்டு வாருங்கள் என்று கேட்டதாக அந்த உரையை திரிபுபடுத்தி கூச்சலிடுவோர்களிடம் கேட்கிறேன். முண்டாட்சியில் உங்கள் கொள்கையை விற்று யாரிடம் எதை பெற்றீர்கள்? மக்களிடமிருந்து நீங்கள் அபகரித்த ஆணைக்கு என்ன மதிப்பளித்தீர்கள்?

இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம் தேடி அலையும் ஞானசூனியங்களாக இருப்பதில் அர்த்தமில்லை. கண்மூடித்தனமாக சுயலாப அரசியல் நடத்துவதை தவிர்க்கவேண்டும் என கேட்கிறேன். என்னை கொடுத்தால் எண்ணெய்தான் வேண்டும் என்று அடம் பிடிக்கும் அரசியல் சுயலாபங்களே தமிழ் மக்கள் மீது அவலங்களையும் அழிவுகளையும் சுமத்தியிருக்கின்றன.

சும்மா இருக்க சுதந்திரம் வந்து சேராது. சாத்தியமானதை ஏற்றுக்கொண்டு சாதித்துக் காட்டும் வல்லமையோடு பயணிக்க வேண்டும்.

ஆகவே, ஜனாதிபதியின் உரையின் அர்த்தங்களை புரிந்துகொண்டு தமிழ் பேசும் மக்களின் வாழ்விலும் சுபீட்சமான ஒளி வீசும் காலத்தை உருவாக்க அனைத்து வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தயாராக வேண்டும் என நான் பகிரங்க அழைப்பு விடுக்கிறேன் - என்று தெரிவித்தார்.

LK Newspapers Viber Community

# இன்றைய ராசி பலன்

20.01.2022 வியாழக்கிழமை தை 07

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: மகம்**
காலை 8.24 - 21.01.2022
காலை 9.43 வரை

**யோகம்: ஆயுஷ்மான்**
மாலை 3.45 வரை

**சௌபாக்யம்**
மாலை 3.45 - 21.01.2022
மாலை 3.06 வரை

**திதி: அமர பட்ச திரிதியை**
காலை 8.04 - 21.01.2022
காலை 8.51 வரை

**முற்கரணம்: கரஜம்**
காலை 8.04 வரை

**பிற்கரணம்: வணிஜம்**
காலை8.04 -இரவு 8.31

**சுப நேரங்கள்**
காலை 11.12
- பி.ப 12.22

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
பிற்பகல் 1.50 - 3.18

**குளிகை காலம்**
காலை 9.25 - 10.53

**எமகண்ட காலம்**
காலை 6.28 - 7.57

**துர் முகூர்த்தம்**
காலை 10.24 - 11.11
மாலை 3.07 - 3.54

**லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை ப்ரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**


**மேஷம்:** நிதி பிரச்சினையால் மன சஞ்சலம் ஏற்படலாம். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகளை தவிர்க்க அமைதி தேவை. பிள்ளைகளின் அணுகுமுறை மற்றும் செயல்களில் கவலை தோன்றலாம். ஆன்மீக ஆர்வம் அதிகரிக்கலாம். இறைதியானம் நன்மை.


**ரிஷபம்:** பணியிடங்களில் சில சிரமங்கள் ஏற்படலாம். வாழ்க்கைத்துணையுடன் தவறான புரிந்துணர்வை நீக்க முயற்சி தேவைப்படலாம். வீட்டில் மின்னணு உபகரணங்கள் பழுது அல்லது சேதமடையலாம். இறைவணக்கம் தேவை.


**மிதுனம்:** வணிகத்தில் எதிர்பாரா இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். சமூகதுறை சம்பந்தப்பட்டவர்களுக்கு சிறிய பிரச்சினை தோன்றலாம். உங்கள் மீது சிலருக்கு மனக்கசப்பு நீங்கும் நாளாக அமையலாம். பணிகளில் உங்களுக்கு கீழ் இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்காமல் இருக்கலாம்.


**கடகம்:** சில முக்கிய வேலைகளில் ஏற்படும் தடையால் கவலை தோன்றலாம். ஆன்மீகவாதிகளுடன் நேரத்தை செலவிடுவது மன அமைதி கிடைக்கலாம். சில பெண்களுக்கு சிறிய உடல்நல பிரச்சினைகள் உண்டாகலாம். சில பொய்களால் மதிப்பு குறையலாம்.


**சிம்மம்:** வணிகத்தில் புதிய ஒப்பந்தங்கள் நிறைவேறலாம். காப்பீடு சம்பந்தப்பட்ட வேலைகளில் இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். மனதில் வலு மேம்படும். பொறுப்புகளில் அதிக அக்கறையுடன் இருக்கும் நிலை உருவாகலாம்.



**கன்னி:** சகோதரர்களுக்கு உடல்நலப் பிரச்சினை சிறிய அளவில் ஏற்படலாம். சட்டம் சம்பந்தப்பட்ட முரண்பாடுகள் உண்டாகலாம். சில சங்கடங்கள் உண்டாகலாம். உழைப்புக்கேற்ற பலனும் இன்று கிடைக்காது.


**துலாம்:** வேலைத்தளத்தில் உங்கள் ஆதிக்கம் மேம்படும். அன்புக்குரியவர்களின் ஆலோசனை மற்றும் ஆதரவு கிடைக்கலாம். தொழில் வருவாய் அதிகரிக்கலாம். புதிய வேலை தேடுவதில் சாதகமான நாளாக அமையலாம்.


**விருச்சிகம்:** திருமண உறவில் பாசம் அதிகரிக்கும். பிள்ளைகள் பற்றிய சிறிய கவலை உண்டாகலாம். வணிகத்தில் போட்டி அதிகரிக்கலாம். பிறரிடம் எதிர்பார்ப்பை தவிர்த்து, நீங்கள் விரும்பும் வழியில் உங்கள் செயல்களை திறம்பட செய்யலாம்.


**தனுசு:** கோபத்தில் செயல்படுவதை தவிர்ப்பது நல்லது. பயணத்தால் உடல்நலத்தில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். வேலைத்தளங்களில் சில கடுமையான பணிகளை பெறலாம். **சந்திராஷ்டமம்: உத்தராடம் நட்சத்திரம் பாதம் 1க்கு அ.கா 2.01 - காலை 8.24**


**மகரம்:** பிறருடன் உரையாடுவதில் தெளிவான நிலை தேவைப்படலாம். தலைவலி சிறிய அளவில் உண்டாகலாம். உங்கள் இயல்பற்ற அணுகுமுறை சிலரால் விமர்சனம் செய்யப்படலாம். உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் நன்மை. **சந்திராஷ்டமம்: உத்தராடம் நட்சத்திரம் பாதம் 2/3/4க்கு காலை 8.24 - 21.01.2022 அதிகாலை 3.26 வரை**


**கும்பம்:** வணிகத்தில் பெரிய ஒப்பந்தம் கிடைக்கப் பெறலாம். சில சுபச் செய்திகளால் உற்சாகம் மேம்படும். இல்லத்தில் வளங்கள் நல்ல நிலைபெறும். எதிர்பாரா பண இலாபங்கள் கிடைக்கலாம். இன்று புதிய தொழில் அல்லது வேலை தொடங்கலாம்.


**மீனம்:** உங்கள் பணித்திறனுக்கு வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் சிறந்தமதிப்பு கிடைக்கலாம். திருமண முயற்சி உண்டாகலாம். மாணவர்களுக்கு எதிர்கால தொழில் பற்றிய சிந்தனை உருவாகலாம். இருமல் பிரச்சினை சிறிய அளவில் உண்டாகலாம்.

# பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு வைத்த சம்பவத்துடன் தொடர்புடைய வைத்தியரொருவர் கைது

## துப்பாக்கி உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்களும் கைப்பற்றல்







பொரளை சர்வ புனிதர்கள் தேவாலயத்தில் கைக்குண்டு வைத்த சம்பவத்தில் தொடர்புடைய ஓய்வுபெற்ற வைத்தியரொருவர் பிலியந்தலை பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபரான ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரியின் வீட்டிலிருந்து துப்பாக்கிகள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தெற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகளில் 04 கைத்துப்பாக்கிகள், ரிவோல்வர், இரண்டு வாள்கள், ரம்போ கத்தி மற்றும் அடையாளங்காணப்படாத துப்பாக்கியொன்று என்பன இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

தேவாலயத்தில் கைக்குண்டு வைத்த சம்பவம் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய, பனாமுற பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட தொடர் விசாரணைகளின்போது, குறித்த வைத்தியர் தொடர்பில் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த விசாரணைகளுக்கமைய நேற்று முன்தினம் (18) இரவு குறித்த வைத்தியர் கைதுசெய்யப்பட்டதாக உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# ஏப்ரல் 21 தாக்குதல்: ஹேமசிறியை விடுவிப்பது தொடர்பான தீர்ப்பு பெப்ரவரியில்



ஏப்ரல் 21 தாக்குதல் வழக்கிலிருந்து ஹேமசிறி பெர்னாண்டோவை சாட்சி விசாரணையின்றி விடுதலை செய்வதா, இல்லையா என்பது தொடர்பான தீர்மானத்தை எதிர்வரும் பெப்ரவரி 18ஆம் திகதி அறிவிக்க மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது.

குறித்த வழக்கின் சாட்சி விசாரணைகள் யாவும் நேற்று நிறைவடைந்தன.

நாமல் பலல்லே, ஆதித்ய பட்டபெதிகே மற்றும் மொஹம்மட் இஸர்தீன் உள்ளிட்ட மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதனிடையே, குறித்த நீதிபதிகள் குழாம் முன்னிலையில், ஏப்ரல் 21 தாக்குதலை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின்பேரில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிற்கு எதிரான வழக்கும் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முறைப்பாட்டாளர்கள் சமர்ப்பித்த ஆவணங்களை ஆராய்ந்த நீதிபதிகள் குழாமின் தலைவர் நீதிபதி நாமல் பலல்லே, இந்த வழக்கை தாக்கல் செய்யாமல் இருந்திருக்கலாம் என தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பரஸ்பர ஆவணங்களை வழங்கி, குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகள் தொடர்பில் மக்களின் நம்பிக்கையை சீர்குலைத்துள்ளதாக நீதிபதி ஆதித்ய பட்டபெதிகே இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள 31 ஆவணங்களில், 6 ஆவணங்களில் முதற்பக்கம் இருக்கவில்லையென முறைப்பாட்டாளர் தரப்பில் ஆவணங்களை சமர்ப்பித்து சாட்சியமளித்த பொலிஸ் தலைமையகத்தின் புலனாய்வு அறிக்கையிடல் பிரிவிற்கு பொறுப்பாக செயற்பட்ட பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிமல் சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், இரண்டு ஆவணங்கள் காணாமற்போயுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# முன்னாள் விமானப்படைத் தளபதிக்கு ஜனாதிபதி கோட்டாபய இறுதி அஞ்சலி

இலங்கை விமானப் படையின் முதல் விமானப்படைத் தளபதியான அமரர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் பத்மன் ஹரிப்பிரசாத மெண்டிஸின் பூதவுடலுக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இறுதி அஞ்சலி செலுத்தினார்.

கல்கிஸை பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் மலர்ச்சாலை ஒன்றில் இறுதி அஞ்சலிக்காக அவரது பூதவுடல் வைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று (19) அங்கு சென்ற ஜனாதிபதி இறுதி அஞ்சலி செலுத்தியதோடு குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்.

ரோயல் லங்கா விமானப் படையின் ஐந்தாவது பயிற்சி அதிகாரியாகத் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த மெண்டிஸ், பிரித்தானியாவில் விமானி ஆலோசகர் பதவி மற்றும் விமானப் பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சிகளைப் பெற்ற முதல் இலங்கையர் என்றும் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

1971ஆம் ஆண்டில், ரோயல் லங்கா விமானப் படையின் நான்காவது விமானப்படைத் தளபதியாக ஹரிப்பிரசாத மெண்டிஸ் நியமனம் பெற்றார். 1972ஆம் ஆண்டில், ரோயல் லங்கா விமானப் படையானது இலங்கை விமானப் படையாக மாற்றம் பெற்ற நிலையில், அதன் முதலாவது விமானப்படைத் தளபதியாக அவரே பதவி வகித்தார்.

ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜனத் அல்விஸ், விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரண உள்ளிட்ட பலரும் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.





# நஞ்சருந்தி உயிரை மாய்க்க முயற்சித்த கான்ஸ்டபிள்

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரி தகாத வார்த்தைகளால் ஏசியமையை தொடர்ந்து, அதே பொலிஸ் நிலையத்தை சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நஞ்சருந்தி தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

மாத்தளை, அலுவிகார பிரதேசத்தை சேர்ந்த ரொஷான் குணவர்த்தன (வயது 27) என்பவரே இவ்வாறு நஞ்சு அருந்தியமையை தொடர்ந்து அவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இப்பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக இருவாரங்களுக்கு முன்னர் பாலித செனவிரட்ண கடமையை பொறுப்பேற்றார். இந்நிலையில் சுகயீனம் காரணமாக ஒருவாரம் விடுமுறை தருமாறு கேட்ட கான்ஸ்டபிளையே, இவர் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விடுமுறை தர மறுத்ததால் ஆத்திரமடைந்த சார்ஜன்ட் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு பொலிஸார் கொல்லப்பட்ட சம்பவம் அம்பாறை மாவட்ட திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கான கட்டுவன் – மயிலிட்டி வீதியின் 400 மீற்றர் வீதி விடுவிப்பு

*(யாழ். நிருபர்)*

ஜனாதிபதியுடன் அங்கஜன் இராமநாதன் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கான கட்டுவன் - மயிலிட்டி வீதியின் 400 மீற்றர் வீதி விடுவிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியை விடுவிப்பது தொடர்பாக கடந்த நல்லாட்சி காலத்தில் பலரால் முயற்சியெடுக்கப்பட்டும் அது கைகூடாத நிலையில், ஆட்சி மாற்றத்தின் பின்னராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன், முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகம், இவ்விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம் அனுப்பியிருந்தனர்.

மேலும், கடந்த டிசம்பர் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டத்தில், அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இவ்வீதி விடுவிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்திருந்தார். அதன்போது ஜனாதிபதி இவ்விடயத்தை ஆராயுமாறு இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவிடம் கோரியிருந்தார்.





இதன்பலனாக இவ்வீதியின் கிழக்கு பகுதியில் இருந்த இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தின் முட்கம்பி வேலி பின்நோக்கி நகர்த்தப்படவுள்ளதுடன் வேலிக்குள் உள்ள வீதி விடுவிக்கப்படுவதுடன் அங்கு தற்போது இராணுவத்தினரின் பொறியியல் பிரிவினரால் புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்ததன் அடிப்படையில், குறித்த பகுதியில் 6 மீற்றர் தூரத்துக்கு பாதுகாப்பு வேலியை நகர்த்துவதன் ஊடாக, விடுவிக்கப்படும் 400 மீற்றர் நீளமான நிலப்பகுதி வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை, 1990ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்னர் இருந்த வீதியைபோல தற்போது முழுமையாக விடுவிப்பதற்கு 25 மீற்றர் பின்நகர்த்தவேண்டும் என ஒருசிலர் கூறுகின்றனர். ஆனால், தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டால் தற்போதைய நிலையில் இதற்கு சாத்தியமில்லாத தன்மையே அங்கு காணப்படுகின்றது.

அதாவது, கட்டுவன் - மயிலிட்டி வீதியின் 400 மீற்றர் சர்ச்சைக்குள்ள பகுதியின் கிழக்கு புறமாக இராணுவ உயர் பாதுகாப்பு வலய முட்கம்பி வேலி உள்ளது. அதற்கு பின்புறமாக விமானப்படையின் முட்கம்பி வேலி உள்ளது. அதற்கு பின்னால் விமான நிலையத்தின் சுற்று மண் அணை உள்ளது. இவ்வாறான நிலையில் 25 மீற்றர் தூரத்துக்கு வேலியை பின்நகர்த்துவதாயின் விமான நிலைய மண் அணை உள்ள பகுதியிலேயே வேலி நகர்த்த வேண்டும். தேசிய பாதுகாப்பு தொடர்பான கரிசனையின் அடிப்படையில் இவ்விடயம் சாத்தியப்படாத நிலையில், தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் 6 மீற்றர் வரை பாதுகாப்பு வேலையை பின்நகர்த்த முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்த 400 மீற்றர் வீதியானது புனரமைக்கப்பட்டு விமான நிலையத்துக்கு தற்போது செல்வதற்காக பாவிக்கப்படும் காபட் வீதியுடன் இணைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்ப்பாணம் விமான நிலையத்தை சென்றடைவதற்கான பயணத்தை இலகுபடுத்தும் விதமாகவும் மக்களின் நீண்டகால கோரிக்கையாகவும் அமைந்திருந்த கட்டுவன் - மயிலிட்டி வீதியின் 400 மீற்றர் பகுதியை விடுவிக்க நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கும் இவ்விடயத்தில் பணியாற்றிய அரச அதிகாரிகள் அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

LK Newspapers Viber Community

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜனவரி 20ஆம் திகதி, வியாழக்கிழமை

# ஏமாற்றும் இலங்கை அரசுகள்!

ஆவது நாடாளுமன்றத்தின் 2ஆவது கூட்டத்தொடரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஆரம்பித்துவைத்து ஆற்றிய உரை தொடர்பில் எதிர்க்கட்சிகள் விசனம் தெரிவித்துள்ளன.

''ஜனாதிபதியின் இந்தப் பேச்சு வெறும் குப்பை. உருப்படியாக இதில் எதுவுமில்லை. இதைப்போய் அவரிடம் சொல்லுங்கள். நான் தேநீர் உபசாரத்துக்கு வரவில்லை. வந்தால் இதை நானே அவருக்கு நேரடியாகக் கூறவேண்டியிருக்கும். அப்படி வேண்டாம் என்பதற்காகத்தான் தேநீர் உபசாரத்தையே தவிர்த்துக்கொண்டிருக்கின்றேன். எங்களுடைய நாட்டின் தேசிய பிரச்சினை குறித்து இந்தப் பேச்சில் எதுவும் சொல்லப்படவில்லை. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் உங்களுக்கு எதுவும் சரிப்பட்டு வராது. உருப்படவே மாட்டீர்கள் என்பதை அவரிடம் போய்ச் சொல்லுங்கள்'' என்று சம்பந்தன் ஜனாதிபதியின் சகோதரரும், நிதியமைச்சருமான பெசில் ராஜபக்ஷவிடம் முகத்துக்கு நேரில் காட்டத்துடன் தெரிவித்தாரென செய்திகள் வெளிவந்துள்ளன.

அதேசமயம், "அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை நடத்த தான் தயார்" என்ற ஒரு நிலைப்பாட்டை ஜனாதிபதி தன் கொள்கை உரையில் அறிவிப்பார் என்று கடந்த சில நாட்களாக வெளியிடப்பட்ட ஊகங்கள் பொய்த்ததாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"தேசிய இனப்பிரச்சினை" இருப்பதை ஏற்க ஜனாதிபதி தன் உரையில் தெளிவாக மறுக்கிறார். இந்நாட்டில் நிலவும் பிரச்சினைகளை "பொருளாதார" பிரச்சினையாக மட்டுமே அவர் இறுக்கமாகப் பார்க்கிறார். மக்களுக்கு குடிநீர், நீர்ப்பாசனம், வீடுகள், நெடுஞ்சாலைகள் ஆகிய வசதிகளை வழங்குவதே, நல்லிணக்கத்துக்கு அடிப்படை என்பதுவே தனது அரசாங்கத்தின் நல்லிணக்கக் கொள்கை என ஜனாதிபதி கூறி முடித்தார். மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய இலங்கையின் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் விசேட பிரச்சினைகள் பற்றிய தீர்வுகள் தொடர்பிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அடுத்த மூன்றாண்டுகளுக்கான கொள்கை உரையில் எதுவும் கூறப்படவில்லை.

அதிகாரப்பரவலாக்கல், 13ஆவது திருத்தம் ஆகிய விவகாரங்கள் பற்றி ஜனாதிபதி ஒரு வார்த்தையும் கூறாமல் இந்நாட்டு தமிழ் பேசும் மக்களை ஏமாற்றியுள்ளார் என்று நான் நினைக்கிறேன். வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தனது அரசினால் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலிருந்து மக்களால் தெரிவுசெய்யப்பட்ட எம்.பிக்கள் "ஒத்துழைப்பு" வழங்கவேண்டும் என்பதுவே அவரது அதிகபட்சக் கோரிக்கையாக இருந்தது. ஜனாதிபதியின் உரை நிறைவுபெற்ற பின்னர், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் எம்.பி. மிகவும் சலிப்புடனும், ஏமாற்றத்துடனும் இருந்ததை, அவருக்கு சமீபத்தில் அமர்ந்திருந்த நான் அவருடன் சற்று உரையாடியபோது அவதானித்தேன். அது எனக்கு மிகுந்த மனக்கவலையைத் தந்தது.

அதேவேளை, தான் நியமித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத குழுவினால் எழுதப்படும் புதிய அரசியலமைப்பிற்கான வரைவை தனது அமைச்சரவையில் சமர்ப்பித்து, அதன்பின் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்க முடிவுசெய்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறினார். இந்த புதிய அரசியலமைப்பு வரைவில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது கானல்நீராகவே இருக்கும் என்பதை ஜனாதிபதியின் உரை கோடிட்டுக் காட்டுவதாகவே நான் நினைக்கிறன்" என்றும் குறிப்பிட்டுள்ளார் மனோ.

இலங்கை அரசியல் வரலாற்றில் எப்போதும் இரு விடயங்கள் மட்டும் அரங்கேறி வருகின்றன. முதலாவது, தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்படுவதாக மேற்கொள்ளப்படும் நடிப்பு. இரண்டாவது, இருக்கும் உரிமைகளையும் தட்டிப்பறிப்பது. இந்த இரு விடயங்களையும் தற்போதைய அரசு கனகச்சிதமாக அரங்கேற்றி வருகிறது.

1936 முதல் மலையகத் தமிழர்களை வெளியேற்ற வேண்டும் என சிங்களத் தலைவர்கள் போராட்டங்களை நடத்தத் தொடங்கினர். 1830இலிருந்து ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் இலங்கை மலையகப் பகுதியில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக குடியேறிய தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 1939இல் 6 இலட்சமாகும். அது இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 14 சதவிகிதமாகும்.

1939இல் 15 ஆயிரம் மலையகத் தமிழர்களை வெளியேற்ற வேண்டும் என சட்டசபையில் தீர்மானம் கொண்டுவந்தனர். ஒட்டுமொத்தத் தமிழரின் எதிர்ப்பையும் மீறி இத்தீர்மானம் சிங்களத் தலைவர் சேனநாயக்காவால் நிறைவேற்றப்பட்டது. 1957இல் பண்டாரநாயக்க - செல்வநாயகம் இடையே உடன்பாடு ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் 1958இல் ஒருதலைப்பட்சமாக பண்டாரநாயக்காவால் இலங்கை நாடாளுமன்றத்துக்குள்ளேயே அனைவர் முன்னிலையிலும் கிழித்து வீசப்பட்டது.

1964இல் சிறிமாவோ - சாஸ்திரி உடன்பாடு இந்தியாவால் ஏற்பட்டது. இதன் காரணமாக நான்கரை இலட்சம் மலையகத் தமிழர்கள் இலங்கையை விட்டு வலுக்கட்டாயமாக நாடு கடத்தப்பட்டனர்.

1965இல் டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் உடன்பாடு ஏற்பட்டது. 1969இல் ஒப்பந்தம் கைவிடப்பட்டதாக ஒருதலைப்பட்சமாக டட்லி அறிவித்தார்.

1987இல் ராஜீவ் காந்தி - ஜயவர்தன ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தப்படியும் இலங்கை அரசு நடந்துகொள்ளவில்லை.

இப்படிப் பல்வேறு காலகட்டங்களில் பல ஒப்பந்தங்கள் சிங்களவர்களும், தமிழர்களும் சமமாக நல்லிணக்கத்துடன் வாழ்ந்திடும் நோக்கத்தில் செய்துகொள்ளப்பட்டு தமிழர்கள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால், சிங்கள அரசியல் தலைவர்கள் ஒருபோதும் நல்லிணக்க ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒப்பந்தங்கள் அனைத்துமே ஒருதலைப்பட்சமாக சிங்களவர்களால் மீறப்பட்டன.

2002இல் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் புரிந்துணர்வு உடன்பாடு மற்றும் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. அமெரிக்கா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட நாடுகள் நோர்வே மூலமாக முயற்சி எடுத்ததன் காரணமாக இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் 2008, ஜனவரி 8ஆம் திகதி ஒரு தலைப்பட்சமாக அப்போதைய அரசால் முறித்துக்கொள்ளப்பட்டது. வெளிநாடுகளின் நடுநிலையாளர்களையும் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களையும் அரசு வெளியேற்றியது. இப்படி ஏறத்தாழ ஒன்பது முறை தமிழர்களுடன் ஏற்பட்ட உடன்பாடுகளிலிருந்து சிங்களவர்கள் ஒரு தலைப்பட்சமாகவே விலகியுள்ளனர்.

2008இல் முள்ளிவாய்க்கால் பயங்கரத்திற்குப் பிறகு விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்குப் பின்னர் தமிழர்களுக்கு சம உரிமை, அரசியல் அதிகாரப்பகிர்வு, மீள்குடியேற்றம், நிவாரணப் பணிகள் என்பன பற்றி வாய்கிழியக் கூறிவரும் இலங்கை அரசுகள், தமிழர் பகுதிகளில் தொடர்ந்து சிங்கள மயமாக்குதல், பௌத்த மயமாக்குதல் ஆகியவற்றைத் திட்டமிட்ட முறையில் மேற்கொண்டு வருகின்றன.

இப்போதும் கூட கோட்டாபய ராஜபக்ஷ தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவில்லை. அதற்கான துளியளவு அக்கறையும் இவர்களிடம் இல்லை. ஆட்சிப்பொறுப்பேற்று இதுவரை தமிழர் பிரதிநிதிகளை சந்திப்பதை அரச மேல்மட்டம் தவிர்த்து வருகிறது. ஒற்றுமையாக செயற்படுவோம் அல்லது நல்லிணக்கமாக செயற்படுவோம் என்று அழைப்பு விடுக்கும் ஜனாதிபதி, இதுவரை காலம் தமிழர்கள் அவ்வாறுதான் நடந்துவருகிறார்கள் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். அரசின் செயற்பாடு 'பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை' என்பதாகவே இருக்கிறது. வரலாறுகளைபோல் தமிழர்கள் தொடர்ந்தும் இலவுகாத்த கிளியாகவே இருக்கப்போகின்றனர்.



# பன்றியின் இதயம் மனிதருக்குப் பொருந்தியது எப்படி?

கடந்த ஜனவரி 7இல் நவீன மருத்துவம் உலகிலேயே முதன்முறையாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயத்தை மனிதருக்குப் பொருத்தி சாதனை செய்துள்ளது. உறுப்பு மாற்று சிகிச்சைக்குத் தேவையான மனித உறுப்புகள் கிடைக்காமல், உலகெங்கும் இந்த அறுவை சிகிச்சைகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டிருந்த நிலையில், விலங்குகளின் உறுப்புகளையும் மனிதருக்குப் பயன்படுத்த முடியும் எனும் நம்பிக்கையை இது விதைத்துள்ளது.

அமெரிக்காவின் மேரிலேண்ட் நகரைச் சேர்ந்த 57 வயதான டேவிட் பென்னட் ஒழுங்கற்ற இதயத்துடிப்பு காரணமாக மேரிலேண்ட் மருத்துவப் பல்கலைக்கழக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். செயற்கை சுவாசக் கருவிகளுடன் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த பென்னட்டுக்குப் பன்றியின் இதயத்தை மருத்துவர் கிரிஃபித் பொருத்தினார். இன்றுவரை அந்த இதயம் சீராக இயங்குவதாக அவர் தெரிவித்துள்ளார். இச்செயல்முறையைச் சொல்வது எளிது. நடைமுறையில் கடினம்.

**உதவும் பன்றி உறுப்புகள்**

மற்ற விலங்குகளைவிடப் பன்றியின் உறுப்புகள் கிட்டத்தட்ட மனிதர்களின் உறுப்புகளை ஒத்திருப்பதால், உறுப்பு மாற்று சிகிச்சைக்குப் பொருத்தமானவையாக இவை தெரிவுசெய்யப்படுகின்றன. முதன்முதலில் 1838இல் பன்றியின் ஒளிப்படலம் (Cornea) மனிதக் கண்ணில் பொருத்தப்பட்டது. 1964இல் சிம்பன்சி குரங்கின் இதயம் மனிதருக்குப் பொருத்திப் பார்க்கப்பட்டது. அது தோல்வியில் முடிந்தது. 1984இல் ஆபிரிக்க/அரேபியக் குரங்கின் (Baboon) இதயம் ஃபாயி (Fae) எனும் குழந்தைக்குப் பொருத்தப்பட்டது. அது 21 நாட்களுக்கு உயிரோடு இருந்தது.

பொதுவாக, 'மாற்றின உறுப்பு மாற்றுச் சிகிச்சை'யில் (Xenotransplantation) பொருத்தப்படும் உறுப்புகளை மனித உடல் நிராகரித்துவிடும். அப்படியே ஏற்றுக்கொண்டாலும் எதிர்கால நிராகரிப்பைத் தடுக்கத் தடுப்பாற்றல் எதிர்வினையை மட்டுப்படுத்தும் வீரியமான மருந்துகளைப் பயனாளி வாழ்நாள் முழுவதும் சாப்பிட வேண்டும். அதனால்தான் இம்மாதிரியான அறுவை சிகிச்சைகள் வேகம் பெறவில்லை. ஆனாலும், சோதனை முயற்சியாகச் சென்ற ஒக்டோபரில் நியூயோர்க் மருத்துவமனை ஒன்றில் மூளை இறப்பு ஏற்பட்ட ஒருவருக்குப் பன்றியின் சிறுநீரகம் உடலுக்கு வெளியில் பொருத்தப்பட்ட அதிசயம் நடந்தது.

பன்றியின் சிறுநீரகச் செல்களில் சர்க்கரை வடிவில் 'எல்பா-1' நொதி இருக்கிறது. மனித உடலில் இது இல்லை. பன்றியிடமிருந்து பெறப்படும் சிறுநீரகத்தில் இந்த நொதியைக் கண்டுகொள்ளும் மனித உடல், இதை அந்நியனாகக் கருதி, மேற்படி உறுப்பை நிராகரித்துவிடுகிறது. கலிபோர்னியாவில் இருக்கும் 'சிந்தெட்டிக்ஸ் ஜீனமிக்ஸ்' நிறுவனம், மரபணு மாற்று உறுப்புகளை வளர்ப்பதில் புகழ்பெற்றது. இந்த நிறுவனம் 'எல்பா-1' நொதியில்லாத பன்றியை மரபணு மாற்று முறையில் வளர்த்துக் கொடுத்தது. அதன் சிறுநீரகத்தை மூளை இறப்பு நோயாளிக்கு நியூயோர்க் மருத்துவர்கள் பொருத்தினார்கள். அதனால், அதில் பிரச்சினை எழவில்லை. இதை ஒரு மைல்கல் நிகழ்வாக மருத்துவ உலகம் பார்த்தது. இப்போது பன்றியின் இதயத்தை மனிதருக்குப் பொருத்தி வியப்பில் ஆழ்த்தியுள்ளனர் மேரிலேண்ட் மருத்துவமனை மருத்துவர்கள்.



**சாத்தியமானது எப்படி?**

பன்றிகளில் மரபணு வரிசையைத் துல்லியமாக மாற்றியமைக்கும் ஆராய்ச்சியில் முன்னேறிக்கொண்டிருக்கும் மற்றொரு அமெரிக்க நிறுவனம் 'ரெவிவிகொர்' (Revivicor) ஆகும். இந்த நிறுவனத்தினர், பன்றி செல்களில் உறுப்பு நிராகரிப்புக்குக் காரணமாக இருக்கும் 4 வகை மரபணுக்களை 'கிரிஸ்பர்' (CRISPR/Cas9) எனும் மரபணுச் செதுக்கியால் செதுக்கி, அவற்றைச் செயலிழக்கச் செய்கின்றனர். அடுத்து, பன்றி செல்லின் மரபணு வரிசையில் புதிதாக 6 மரபணுக்களைப் புகுத்திவிடுகின்றனர்.

பிறகு, பன்றியின் கருமுட்டையிலிருந்து மரபணுவை நீக்கிவிட்டு, அதனுள் மேற்சொன்ன மாற்றியமைக்கப்பட்ட மரபணு உள்ள பன்றி செல்லைக் கலந்துவிடுகின்றனர். இப்போது இது கருக்கோளமாகிறது (Zygote). அதை 'வாடகைத்தாய்' பன்றியின் கருப்பையில் பதித்துவிடுகின்றனர். அதில் வளர்கருவாக (Embryo) வளர்ந்து சிசுவாகி 114 நாட்களில் மரபணு மாற்றமுள்ள பன்றிக்குட்டி பிறக்கிறது. படியாக்கம் (Cloning) மூலம் டோலி ஆடு பிறந்தது போன்றதுதான் இது. இதன் பலனாக, மனித உடல் இந்த உறுப்புகளை அந்நியனாகக் கருதும் வாய்ப்பு குறைந்துவிட, உறுப்பு நிராகரிப்பு தவிர்க்கப்படுகிறது.

சாதாரணமாகவே பன்றிகளின் மரபணுக்களில் ரீட்ரோ வைரஸ்கள் வசிப்பதுண்டு. இவை உறுப்பு மாற்றத்துக்குப் பிறகு பயனாளிக்குத் தொற்றை உண்டாக்கி, உறுப்பு நிராகரிப்பைப் பூதாகரமாக்கும். பன்றியின் மரபணுக்களிலிருந்து 12 வகையான ரீட்ரோ வைரஸ்களை நீக்கியதன் மூலம் இது சரிசெய்யப்படுகிறது. இப்படி, 'ரெவிவிகொர்' நிறுவனம் தயாரித்தளித்த மரபணு மாற்றுப் பன்றியின் இதயத்தையே பென்னட்டுக்கு மேரிலேண்ட் மருத்துவர்கள் பொருத்தியுள்ளனர்.

உறுப்பு நிராகரிப்பைத் தடுக்கும் புதிய மருந்தொன்றை பென்னட் இப்போது பயன்படுத்துகிறார். இதுவரை அந்த இதயத்தை அவரது உடல் நிராகரிக்கவில்லை. அவருக்குப் பொருத்தப்பட்டுள்ள பன்றியின் இதயம் மனித உடலுக்கு அந்நியமாகத் தெரியாத அளவுக்கு மரபணு மாற்றமுறையில் வளர்க்கப்பட்டது என்பதால், இந்த மருந்து இனியும் அவருக்குத் தேவைப்படுமா என்பது போகப்போகவே தெரியும்.

**இந்திய மருத்துவரின் சாதனையும், வேதனையும்**

பன்றியின் இதயத்தை மனிதருக்குப் பயன்படுத்த முடியும் என்பதை 25 ஆண்டுகளுக்கு முன்பே இந்திய அசாம் மாநில மருத்துவர் ராம் பருவா நிரூபித்திருக்கிறார். 1997, ஜனவரி 1இல் 32 வயதான ஒருவருக்குப் பன்றியின் இதயத்தை அவர் பொருத்தினார். அந்த நோயாளி 7 நாட்கள் உயிருடன் இருந்தார். அவருக்குப் பல தொற்றுகள் இருந்ததால், அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அரசிடம் இந்த சிகிச்சைக்கு முறையாக அனுமதி பெறவில்லை என்ற காரணத்துக்காக உறுப்பு மாற்றுச் சட்டம், 1994இன் கீழ் பருவா கைதுசெய்யப்பட்டார்.

**வரலாறு படைக்குமா?**

இன்றைக்கு அமெரிக்காவில் மட்டும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் மாற்று உறுப்புகளுக்காக காத்திருக்கின்றனர். இந்தியாவில் இதயச் செயலிழப்பால் 50 ஆயிரம் பேர் அவதிப்படுகின்றனர். இவர்களில் அதிகபட்சம் 15 பேருக்குத்தான் இதய மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. ஆண்டுதோறும் 1.8 இலட்சம் பேருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படும் நிலையில், 6 ஆயிரம் பேருக்குத்தான் மாற்று சிறுநீரகம் கிடைக்கிறது. வருடத்துக்கு 30 ஆயிரம் பேருக்குக் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. ஆனால், 1,500 பேருக்கு மாத்திரமே இது சாத்தியப்படுகிறது. இந்த நிலையில், மரபணு மாற்றுப் பன்றிகளின் உள் உறுப்புகளை மனிதருக்கும் பயன்படுத்துவது சாத்தியமானால், உயிருக்குப் போராடிவரும் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் காக்கப்படும். நவீன மருத்துவத்தில் புதிய வரலாறு படைக்கப்படும்.

• கு.கணேசன்,
பொதுநல மருத்துவர்,
*நன்றி - இந்து - தமிழ்*

## இன்றைய நாளில்...

- 1816 – இலங்கையில், கொழும்பில் மோர்பஸ் வாந்திபேதி நோய் முதல் தடவையாக அடையாளம் காணப்பட்டது.
- 1887 – பேர்ள் துறைமுகத்தை கடற்படைத் தளமாகப் பயன்படுத்த அமெரிக்க செனட் அனுமதியளித்தது.
- 1906 – வாரன்ஸ் சர்க்கஸ் யாழ்ப்பாணம் வந்திறங்கியது. இதுவே அந்நகரம் கண்ட முதலாவது வட்டரங்கு (சர்க்கஸ்) ஆகும்.
- 1913 – யாழ்ப்பாணம், உடுவிலில் இராமநாதன் பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1929 – வெளிப்புறக் காட்சிகளைக் கொண்ட முதலாவது முழு நீளத் திரைப்படமான 'இன் ஓல்ட் அரிஸோனா' (In Old Arizona) திரையிடப்பட்டது.
- 1995 – திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இரு நாட்கள் பயணமாக இலங்கை வந்து சேர்ந்தார் .
- 2009 – பராக் ஒபாமா அமெரிக்காவின் முதலாவது ஆபிரிக்க - அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

## நக்கல் நமசிவாயம்

*எல்லா ஹொஸ்பிட்டலுக்குள்ளயும் சூப்பர் மார்க்கட்கள திறக்கலாம். அப்போ ஒப்பரேஷன் செய்யமுதல் நோயாளிய ஒருக்கா அதுக்குள்ள கூட்டிவந்து சாமான் விலையள கேக்க வைக்கலாம்...! அதைக்கேட்டு நோயாளிக்கு மயக்கம் வரும்...! சும்மா மயக்க ஊசிக்கெல்லாம் காசு செலவளிக்கத் தேவையில்ல பாருங்கோ...!*



LK Newspapers Viber Community

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

## 18.01.2022 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்




**01. நகர அபிவிருத்திக்குச் சொந்தமான ஜாஎல, ஏக்கலயில் அமைந்துள்ள காணியை விநியோக வசதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நீண்டகால குத்தகையின் அடிப்படையில் வழங்கல்**

திட்டமிடல், நிர்மாணித்தல், நிதியிடல், உரிமை, தொழிற்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல் அடிப்படையில் நகர அபிவிருத்திக்குச் சொந்தமான ஜாஎல, ஏக்கலயில் அமைந்துள்ள 36 ஏக்கர் 01 ரூட் 27.6 பேர்ச்சர்ஸ் காணியொன்று விநியோக வசதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக போட்டி அடிப்படையில் தனியார்துறை முதலீட்டாளர்களிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய சமர்ப்பிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவுகளை மதிப்பீடுசெய்த பின்னர் தெரிவுசெய்யப்பட்டுள்ள அக்சஸ் லொஜிஸ்ரிக் பார்க் (தனியார்) கம்பனிக்கு குறித்த காணியை அரச பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பின் பிரகாரம் நீண்டகால ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்குவதற்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான களனி, முதுன்-எலயில் அமைந்துள்ள காணித்துண்டொன்றை மின்சார உப நிலையமொன்றை அமைப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு ஒப்படைத்தல்**

களனி பேலியகொட பிரதேசத்தில் மின்மாற்றித் தொகுதியை வலுப்படுத்துவதற்காக புதிய உப மின்நிலையமொன்றை அமைப்பதற்காக களனி பிரதேசத்தில் காணித்துண்டொன்றை வழங்குமாறு மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார தனியார் கம்பனி நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் கோரியுள்ளன. அதற்கமைய, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் முதுன்-எல அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ள காணியில் 02 ரூட் 26.5 பேர்ச்சர்ஸ் காணித் துண்டொன்றை அரச பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பின் பிரகாரம் நீண்டகால ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின்சார சபைக்கு ஒப்படைப்பதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள சோலைக்காடு எனும் பெயருடைய காணியை அரச அலுவலர்களுக்கான வீடமைப்புக் கருத்திட்டத்திற்காக தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு ஒப்படைத்தல்**

வவுனியா பிரதேச செயலகப் பிரதேசத்தில் ஓமந்தை கிராம அலுவலர் பிரிவில் 92.92 ஹெக்ரெயார் (234 ஏக்கர் 02 ரூட் 10 பேர்ச்சர்ஸ்) அளவுகொண்ட காணியில் அரச அலுவலர்களுக்கான வீடமைப்புக் கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. குறித்த கருத்திட்டத்தின்கீழ் அக்காணியில் 711 காணித் துண்டுகள் பிரதேச செயலாளரின் பரிந்துரைக்கமைய அடையாளங் காணப்பட்டுள்ள பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 215 குடும்பங்களுக்கு வீடமைப்புக்காக 5,00,000 ரூபா தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் கடன் வழங்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி 09 வருடங்கள் கடந்தாலும் குறித்த பயனாளிகளுக்கு இதுவரை அக்காணிகளுக்கான உறுதி வழங்கப்படவில்லை. அதனால், குறித்த பயனாளிகளுக்கு காணி உரிமமாற்று உறுதிப்பத்திரங்களை வழங்கும் வகையில் குறித்த காணியை தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. கொம்பனித்தெரு, கொழும்பு 02இல் அமைந்துள்ள மெட்ரோ ஹோம்ஸ் ரெசிடன்சீஸ் வீடமைப்புக் கருத்திட்டத்தின் வீட்டு அலகுகளை உரிமப் பரிமாற்ற அடிப்படையில் விற்பனை செய்தல்**

நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொம்பனித்தெரு மீள் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் முதற்கட்டத்தின் கீழ் அடையாளங் காணப்பட்ட காணித்துண்டில் ஆரம்பக் குடியிருப்பாளர்களுக்கான வதிவிட மற்றும் வர்த்தக அலகுகளின் கட்டுமானப் பணிகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன. அதன்கீழ் மூன்று கோபுரங்களுடன் கூடிய 626 வீட்டு அலகுகள் மற்றும் 115 வர்த்தக அலகுகளுடன் கூடிய கட்டிடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், அது மெட்ரோ ஹோம்ஸ் ரெசிடன்சீஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஆரம்பக் குடியிருப்பாளர்களைக் குறித்த வீட்டு அலகுகளில் குடியமர்த்திய பின்னர் எஞ்சிய 78 வீட்டு அலகுகள் அரச பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டுக்கமைய சமகால சந்தைப் பெறுமதிக்கு முன்னுரிமையை அடிப்படையாகக்கொண்டு விற்பனை செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய, தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்களில் சரியான பெறுமதியை செலுத்தியுள்ள கொள்வனவாளர்களுக்கு உரிமமாற்று உறுதிகளை வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. உருகுணை பல்கலைக்கழகம் மற்றும் இங்கிலாந்தின் நோர்த்தம்ப்ரியா பல்கலைக்கழகத்திற்கும் ( The Northumbia University, England ) இடையிலான கல்வி ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

உருகுணை பல்கலைக்கழகம் மற்றும் இங்கிலாந்தின் நோர்த்தம்ப்ரியா பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான கல்வி ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. நிபுணத்துவக் கருத்துப் பரிமாற்றல், தெரிவுசெய்யப்பட்ட பாடவிதானங்கள் தொடர்பான ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உருகுணை பல்கலைக்கழகத்தில் தகைமை பெற்ற மாணவர்களுக்கு நோர்த்தம்பியா பல்கலைக்கழகத்தின் நிகழ்ச்சி திட்டங்களுக்கான முற்கூட்டிய அனுமதிகளை வழங்கல் போன்ற துறைகள் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் அமைந்துள்ள காணியின் சட்டபூர்வமான உரித்தை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கல்**

கொழும்பு 07, டொரின்டன் சதுக்கத்தில் அமைந்துள்ள 3.37 ஹெக்ரெயார் காணியில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் இயங்கிவருவதுடன், குறித்த காணிக்கான சட்டபூர்வமான உரிமை கூட்டுத்தாபனத்திற்கு இதுவரை வழங்கப்படவில்லை. குறித்த காணியை கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் உடன்பாடு தெரிவித்துள்ளனர். அதற்கமைய, குறித்த காணியை விடுவிப்பு வழங்கல் பத்திரத்தின் மூலம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைப்பதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்பட்டு வரும் திருகோணமலை குச்சவெளி ஒலிபரப்பு நிலையம் அமைந்துள்ள காணியை ஒப்படைத்தல்**

இலங்கை அரசாங்கத்திற்கும் ஜேர்மன் அரசாங்கத்தின் ஒலிபரப்புச் சேவையான டொயிஸ்வெல் நிறுவனத்திற்கும் இடையில் 1980ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்திற்கமைய திருகோணமலை குச்சவெளிப் பிரதேசத்தில் ஜேர்மன் குரல் வானொலி சிற்றலை மற்றும் மத்திய அலைவரிசை ஒலிபரப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு குறித்த ஒலிபரப்பு நிலையத்தின் செயற்பாடுகள் மற்றும் உரிமை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த காணியின் 90 வீதமான பகுதி ஒலிபரப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒலிபரப்புச் சேவைகளுக்கு எதுவித பாதிப்புகளும் ஏற்படாத வகையில் சூரிய மின்னுற்பத்திக்கு குறித்த காணியைப் பயன்படுத்துவதற்கான இயலுமை காணப்படுகின்றது. அதற்கமைய, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வருமானம் கிடைக்கக்கூடிய வழிமுறையாக குறித்த காணியில் சூரிய மின்னுற்பத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமை கிட்டும் வகையில் குறித்த காணியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைப்பதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. மில்லனிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நயிகம பசுமைக் கைத்தொழில் பேட்டையில் மெக்சன்ஸ் (தனியார்) கம்பனிக்கு காணித்துண்டொன்றை வழங்கல்**

நாடு முழுவதும் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தொழிற்சாலைகளை நிறுவுதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டு வாய்ப்புகளை வழங்கும் விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2021 ஜூன் மாதம் 07 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 50 வருடங்கள் அனுபவம் வாய்ந்த, தரை ஓடுகள் (Tile ) தொழிற்றுறையில் முன்னணி கம்பனியாக திகழும் மெக்சன்ஸ் பாத்வெயார் (தனியார்) கம்பனி கிட்டத்தட்ட 6,000 மில்லியன் ரூபா முதலீட்டுடன் கூடிய தரை ஓடுகள் (Tile), குளியலறை உபகரணங்கள் மற்றும் துப்புரவாக்கல் உபகரணங்கள் உற்பத்திக்கான தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்காக கருத்திட்ட யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. களுத்துறை மாவட்டத்தில் மில்லனிய பிரதேச செயலகப் பிரிவில் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப வலயமொன்றை (நயிகம பசுமை கைத்தொழில் பேட்டை) நிர்மாணிப்பதற்காக தற்போது அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான நிவ் வெடல் தோட்டம் காணித்துண்டுடன் இணைந்துள்ளதும், அபிவிருத்தி செய்யப்படாததுமான காணித்துண்டில் 20 ஏக்கர் காணிகளை 35 வருடங்கள் நீண்டகால குத்தகை அடிப்படையில் முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்திற்காக மெக்சன்ஸ் (தனியார்) கம்பனிக்கு வழங்குவதற்காக கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. சிறு தேயிலைத் தோட்டங்கள் மற்றும் இறப்பர் தோட்டங்களைப் புத்துயிரூட்டும் கருத்திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நிதி வழங்கும் வேலைத்திட்டத்தின் காலப்பகுதியை நீடித்தல்**

விவசாய அபிவிருத்திகான சர்வதேச நிதியத்தின் நிதி அனுசரணையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் சிறு தேயிலைத் தோட்டங்கள் மற்றும் இறப்பர் தோட்டங்களைப் புத்துயிரூட்டும் கருத்திட்டத்தின்கீழ் இலக்காகக்கொண்ட பயனாளிகளின் வருமான ஈட்டலுக்காகவும், சந்தைப் பன்முகப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான கிராமிய நிதி வழங்கும் வேலைத்திட்டமொன்று 2019-2021 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையால் கருத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை பூர்த்திசெய்ய முடியாமல் போயுள்ளமையால், குறித்த கடன் வழங்கும் வேலைத்திட்டத்தின் காலப்பகுதியை 2022 டிசம்பர் மாதம் 31ஆம் திகதிவரைக்கும் நீடிப்பதற்காக பெருந்தோட்ட அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. ஹங்கேரி அரசாங்கம் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நிதி ஒத்துழைப்புகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்த சட்டகத்தின்கீழ் புதிய மேம்பாலங்களை நிர்மாணித்தல்**

எமது நாட்டில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஹங்கேரியாவின் எக்ஸிம் வங்கியின் மூலம் சலுகைக் கடன் வசதியளிப்பதற்கு ஹங்கேரி அரசாங்கம் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நிதி ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்கீழ் கொஹூவல மற்றும் கெட்டம்பே மேம்பாலங்களை நிர்மாணிக்கும் கருத்திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறித்த கருத்திட்டங்களுக்கு அப்பால் தேசிய வீதி வலையமைப்பில் முத்தெட்டுகல புகையிரதக் கடவை மற்றும் ஹிரிபிட்டிய சந்தி, பஸ்யால சந்தி, நீர்கொழும்பு மாரிஸ்டெலா சந்தி மற்றும் தலவத்துகொட சந்தி போன்ற இடங்களில் காணப்படும் போக்குவரத்து நெரிசல்களுக்கு தீர்வு வழங்குவதற்காக குறித்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த இடங்களில் மேம்பாலங்கள் 04இனை அமைப்பதற்காக நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 1934ஆம் ஆண்டு 19ஆம் இலக்க ஊழியர் இழப்பீட்டுக் கட்டளைச் சட்டம் (139ஆம் அத்தியாயம்) திருத்தம் செய்தல்**

கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது திடீர் விபத்துகளால் பாதிக்கப்படும் ஊழியர்களுக்கு செலுத்தப்படும் அனுகூலங்கள் சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் இற்றைப்படுத்துவதற்காக 1934ஆம் ஆண்டு 19ஆம் இலக்க ஊழியர் இழப்பீட்டுக் கட்டளைச்சட்டம் (139ஆம் அத்தியாயம்) திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளதுடன், குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. 2003ஆம் ஆண்டு 36ஆம் இலக்க புலமை சொத்து சட்டத்தை திருத்தம் செய்தல்**

2003ஆம் ஆண்டு 36ஆம் இலக்க புலமை சொத்து சட்டத்தை சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்வதற்காக 2020 ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளதுடன், குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 19.01.2022 நாணய மாற்று வீதம்

இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 030 1 73 | 036 1 10 |
| கனேடியன் டொலர் | 046 6436 | 052 56 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 8545 | 21 1162 |
| யூரோ | 113 1304 | 122 621 |
| ஜப்பான் யென் | 0 61 0 | 0 6740 |
| சிங்கப்பூர் டொலர் | 035 401 | 040 1140 |
| ஸ்ரேலிங் பவுன் | 157 5432 | 166 840 |
| சுவிஸ் பிராங்க் | 104 580 | 111 62 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 5002 |
| குவைட் | குவைட் தினார் | 556 7601 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 4125 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 3528 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 7134 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 87 |





பிரதமரின் செயலாளர்


நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர்

ஜனாதிபதியின் புதிய செயலாளரான காமினி செனரத் மற்றும் பிரதமரின் புதிய செயலாளர் டீ.எம்.அநுர திசாநாயக்க உள்ளிட்டோர் நேற்று (19) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து தமக்கான நியமனக் கடிதங்களை பெற்றுக்கொண்டபோது...

LK Newspapers Viber Community

# இந்தியாவின் செல்லப் பிள்ளையாக இருங்கள்; சீனாவின் செல்லப் பிராணியாக இருக்க வேண்டாம்

## சபையில் அரசாங்கத்திற்கு இராதா எம்.பி. அறிவுறுத்து

(யோ.தர்மராஜ்)

இலங்கைக்கு பல்வேறு உதவிகளை வழங்கும் இந்தியாவின் செல்லப் பிள்ளையாக இருங்கள். ஆனால், சீனாவின் செல்லப் பிராணியாக இருக்க வேண்டாம் என அரசாங்கத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ஆற்றிய உரை மீதான ஒத்திவைப்பு பிரேரணை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதி ஆற்றிய சிம்மாசன கொள்கை பிரகடன உரையானது, அவருடைய தேர்தல் கால மேடைகளில் ஆற்றிய உரையின் பிரதியாகவும் அரைத்த மாவை அரைத்தது போன்று நாட்டு மக்களுக்கு எவ்வித பிரயோசனமுமில்லாத, உப்புச்சப்பில்லாத உரையாகவுமே காணப்பட்டது.

குறுகிய காலப் பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொண்டு நிலையான அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும் என ஜனாதிபதி கூறினார். ஆனால், இன்று மக்கள் முகம் கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு எவ்விதத் தீர்வையோ



அல்லது நடவடிக்கையையோ எடுப்பதாக அவர் கூறவில்லை.

இன்னும் ஒரு சில நாட்களுக்கே எரிபொருள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. நாடு முகம் கொடுத்துள்ள எரிபொருள் பிரச்சினைக்கு இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்பதை இன்னும் ஒரு சில தினங்களில் தெரியக் கூடியதாக இருக்கும். அதற்கு முன்னர் எரிபொருள் கொண்டுவரப்படுமாக இருந்தால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

இன்று நாட்டில் பால்மா, எரிவாயு தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளதால் மக்கள் வரிசையில் காத்திருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. காலையில் எழுந்து வேலைக்குச் செல்வதா அல்லது அரிசி, பால்மா மற்றும் எரிவாயு பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்பதா என்ற பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலைகள் அகற்றப்பட்டுள்ளன. இன்று வியாபாரிகள் தங்களுக்கு ஏற்றவாறு பொருட்களை விற்பனை செய்கின்றனர். இந்த நிலையில், சந்தையில் பொருட்களுக்கு தட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, பின்னர் விலையை அதிகரிப்பதே அரசாங்கம் மற்றும் வியாபாரிகளின் திட்டமாக இருக்கின்றது. இவை ஜனாதிபதிக்கு தெரியவில்லையா?

இதேவேளை, நாட்டில் ஜனநாயகம் இருப்பது பற்றி ஜனாதிபதி பேசியுள்ளார். அவ்வாறாயின், ஏன் மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத்துக்கொண்டே செல்கின்றீர்கள். தேர்தலை நடத்தி, ஜனநாயகத்தை உறுதி செய்ய வேண்டும்.

மேலும், ஒரே நாடு ஒரே சட்டம் கொண்டு வரப்படுவதாகக் கூறப்பட்டது. ஆனால், அது நடைமுறையில் இருக்கின்றதா என்பது பெரும் கேள்விக்குறியாகியுள்ளது. ஒவ்வொரு மாகாணத்திற்கும் சட்டங்கள் வேறாக இருக்கின்றன. மலையகத்திற்கு வேறொரு சட்டமே காணப்படுகின்றது. இன்று அரசாங்க ஊழியர்களுக்கு 5 ஆயிரம் வழங்கப்பட்டாலும் பெருந்தோட்ட மக்களுக்கு 80 ரூபாவிற்கு கோதுமை மா வழங்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. இது எந்தளவிற்கு நியாயமானது. எனவே, இன்று அதிகளவிலான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனால், பேச்சளவில் கூட நாட்டில் ஜனநாயகம் இல்லை.

இதேவேளை, இலங்கை சுயாதீன நாடு என வீர வசனங்கள் பேசிக்கொண்டிருந்த ஜனாதிபதி முதலீடு என்ற பெயரில், நாட்டை முழுமையாக விற்பனை செய்வதையே ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. வெளிநாட்டவர்கள் இங்கு முதலிட வேண்டாம். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதனை மீட்போம் என பல்வேறு மேடைகளில் பேசிய அரசாங்கம், இன்று நாட்டை துண்டுபோட்டு விற்பனை செய்துள்ளது.

இன்று உள்நாட்டு உற்பத்திகூட மின்சாரம் இல்லை. பேக்கரி உற்பத்திகளை முன்னெடுக்க முடியாதுள்ளது. இவ்வாறான நிலையில் இந்திய அரசாங்கம் எமக்கு பல்வேறு உதவிகளை செய்கின்றதை காணக் கூடியதாக இருக்கின்றது. இலங்கைக்கு அதிக உதவிகளை வழங்குவதில் இந்தியாவே முதலிடத்திலுள்ளது. நெருக்கடிகளின்போது கூட, எரிபொருள் மருந்து உள்ளிட்ட உதவிகளையும் இலங்கையின் கடனையும் இந்தியா செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறான பல்வேறு உதவிகளை வழங்கும் இந்தியாவின் செல்லப் பிள்ளையாக இருங்கள். ஆனால், சீனாவின் செல்லப் பிராணியாக இருக்க வேண்டாம். ஒரு நாட்டின் அந்நிய நாடே முக்கியம். ஆகவே, இந்தியாவின் செல்லப் பிள்ளையாக இருங்கள். சீனாவின் செல்லப் பிராணியாக இருந்து உறவை சீரழித்துக்கொள்ள வேண்டாம் - என்றார்.

# மலையக அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறித்து அரவிந்தகுமார் எம்.பி. ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பு

(யோ.தர்மராஜ்)

மலையக அபிவிருத்திகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறித்து தான் திருப்தியடைவதாகவும் அதற்காக தான் நன்றி தெரிவிப்பதாகவும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார், ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக நேற்று (19) 'தமிழனி'டம் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரையாற்றிய பின்னர், நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற தேநீர் விருந்துபசாரத்தின் போதே அவர் இவ்வாறு ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சபையில் உரையாற்றிய பின்னர் அங்கு இடம்பெற்ற தேநீர் விருந்துபசாரத்தின் போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமாருடன் சிறிது நேரம் உரையாடியுள்ளார்.

இதன்போது, மலையகத்திற்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள நிதியுடன் தற்போதும் அபிவிருத்திகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது தொடர்பாக இருவரும்




கலந்துரையாடியுள்ளனர். இதன்போது, மலையகத்திற்கு தான் தொடர்ந்து பல அபிவிருத்திகளை முன்னெடுப்பதாக ஜனாதிபதி, அரவிந்தகுமார் எம்.பியிடம் தெரிவித்துள்ளார்.

இதன்போது, ஜனாதிபதியின் கருத்துக்கு பதிலளித்துள்ள அரவிந்தகுமார் எம்.பி. மலையக அபிவிருத்திகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறித்து தான் திருப்தியடைவதுடன், மகிழ்ச்சியடைவதாகவும் கூறியுள்ள அவர், ஜனாதிபதிக்கு நன்றியும் தெரிவித்துள்ளார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பண்டாரவளை வீதியில் சிறுத்தையின் உடல் மீட்பு



(பதுளை நிருபர்)

ஹப்புத்தளை – பண்டாரவளை பிரதான பாதையில் சிறுத்தையொன்று நேற்று (19) இறந்து கிடந்துள்ளது. இதுகுறித்து, அப்பகுதி மக்கள் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளனர்.

இறந்துள்ள சிறுத்தையை வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு எடுத்துச் சென்று, பரிசோதனை நடத்த, திணைக்கள உத்தியோகத்தர்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

# பதுளையில் 80ஆயிரம் ஆண்டுகள் பழைமையான காண்டாமிருகங்களின் எச்சங்கள் கண்டுபிடிப்பு



80ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டில் இருந்ததாக கூறப்படும் இரண்டு காண்டாமிருகங்களின் எச்சங்கள் பதுளை - மடுல்சீமை மற்றும் ரிலாவுலு பிரதேசங்களில் உள்ள வயல் நிலங்களில் இன்னும் உள்ளதாக விலங்கியல் நிபுணர் கெலும் நளிந்த மனமேந்திர ஆரச்சி தெரிவித்துள்ளார்.

சுமார் 26 வருடங்களுக்கு முன்னர் 1966ஆம் ஆண்டு புதையல் தோண்டும் தொழிலாளர்களால் காண்டாமிருகத்தின் எச்சங்கள் மீட்கப்பட்டு அவற்றின் மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன.

அந்த சந்தர்ப்பத்தில் குறித்த இரண்டு காண்டாமிருகங்களின் பற்கள் மாத்திரம் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதோடு அவை சுமார் 80ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்ததென தெரியவந்தது.

எவ்வாறாயினும், இதனைத் தொடர்ந்து குறித்த எச்சங்கள் அந்த சந்தர்ப்பத்தில் பெய்த கடும் மழை காரணமாக நீரில் மூழ்கியதோடு அங்கு மண்சரிவு ஏற்பட்டதாகவும் விலங்கியல் நிபுணர் கெலும் நளிந்த மனமேந்திர ஆரச்சி தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக குறித்த எச்சங்கள் இன்னும் 62 அடிக்குக் கீழாக மண்ணுக்குள் புதைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அக்குறணை நகரில் அப்புறப்படுத்தப்படும் பிளாஸ்ரிக் பொருட்களுக்கு கூடைகள் வைப்பு

(மாத்தளை நிருபர்)

ஆரோக்கியமான வாழ்விற்கு தூய்மையான சுற்றுச்சூழல் அத்தியாவசியமானது. அதனடிப்படையில் அக்குறணை பிரதேசத்திலுள்ள அரச நிறுவனம் என்கிற ரீதியில் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்கும் நோக்கில் திண்மக்கழிவு முகாமை, மீள்சுழற்சி பயன்பாடுகள் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை பல கட்டங்களாக அக்குறணை பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது.

அது தொடர்பாக, அக்குறணை பிரதேச சபை, அக்குறணை ஜப்பான் கம்யுனிட்டியுடன் இணைந்து நகரில் அப்புறப்படுத்தப்படும் பிளாஸ்ரிக் போத்தல்களை சேகரிக்கும் தொட்டிகளை நகரின் பல பகுதிகளிலும் நிறுவி வருகின்றது.

# ஆளுநர் தலைமையில் சப்ரகமுவ மாகாண தைப்பொங்கல் விழா கொண்டாட்டம்





(இரத்தினபுரி நிருபர்)

சப்ரகமுவ மாகாண தைப்பொங்கல் விழா நேற்று (19) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதியில் இடம்பெற்றது.

சப்ரகமுவ மாகாண தைப்பொங்கல் விழா சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் மூலம் வருடா வருடம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி இடம்பெற்ற சப்ரகமுவ மாகாண தைப்பொங்கல் நிகழ்வில் காவத்தை ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம், குருவிட்ட கீரகல தமிழ் வித்தியாலயம், இரத்தினபுரி ஹிதலன தமிழ் வித்தியாலயம், இரத்தினபுரி சென் ஜோக்கிம் தமிழ் வித்தியாலயம், இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம், இரத்தினபுரி அல்- மக்கியா மகா வித்தியாலயம், இரத்தினபுரி நாவலர் தமிழ் வித்தியாலயம், இரத்தினபுரி பிரின்ஸ் கல்லூரி ஆகிய பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையால் நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது

## தூக்கத்திலிருந்து விழித்தவர்போல் ஜனாதிபதி உரையாற்றுவதாக ஹலீம் எம்.பி. விசனம்

(கண்டி நிருபர்)

அரசு பின்பற்றும் தவறான பொருளாதாரக் கொள்கை காரணமாக நாடு இன்று வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

பொருட்களின் விலையை கட்டுப்படுத்த அரசினால் முடியாதுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் எதனையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் அமைச்சராக இருந்த தயா கமகே பூரணப்படுத்திய மத்திய அதிவேக வீதியின் ஒரு சில கிலோ மீற்றர்கள் மட்டும் அபிவிருத்தி செய்து விட்டு அவர்களே முழுப் பாதையையும் அபிவிருத்தி செய்ததாக கூக்குரலிடுகின்றனர்.

கடந்த ஆட்சியில் அமைச்சராக இருந்த சம்பிக்க ரணவக்க பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கண்டி பஸ்தரிப்பிட பணியை முன்னெடுத்தார். இன்று பொதுஜன முன்னணியே அதனை செய்து முடித்துள்ளதாக பெருமை கொள்கின்றனர்.

மத்திய வங்கி அதிகாரிகள் வெளியிடும் கருத்துகளுக்கும் மத்திய வங்கி ஆளுநர் வெளியிடும் கருத்துகளுக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன. எவ்வாறெல்லாம்



மக்களை ஏமாற்ற முடியுமோ அவ்வாறெல்லாம் ஏமாற்றப் பார்க்கின்றனர்.

ஒரு அரிசி மணி கூட வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படமாட்டாது என விவசாய அமைச்சர் பதவி ஏற்றபோது கூறினார். அப்படி இறக்குமதி செய்தால் நான் அமைச்சர் பதவியை மட்டுமல்ல அரசியலில் இருந்தே வெளியேறுவேன் என்றார். இன்று மியன்மாரில் இருந்து அரிசி இறக்குமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாய அமைச்சர் வாய்மூடி மௌனம் காத்து வருகிறார்.

இந்தியா மற்றும் சீனா ஆகிய இரண்டு நாடுகளை தவிர, சர்வதேச நாடுகள் எமக்கு கடன்தர முன்வரவில்லை. அக்கடனைக் கொண்டு அவர்களது நாட்டு உற்பத்திகளை மட்டுமே இறக்குமதி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையில் இந்தியாவும் சீனாவும் முன்வருகின்றன.

நல்லாட்சியில் நடந்த நல்ல விடயங்கள் பலருக்கு தற்போது மறந்து விட்டது. நாம் ஆட்சிக்கு வந்ததும் உடனடியாக பெற்றோல், எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றின் விலைகளைக் குறைத்தோம். தற்போதைய ஆட்சியாளர்கள் பதவிக்கு வந்ததும் தமது நண்பர்களுக்கு உதவி செய்யவும் தரகுப்பணம் பெற்றுக்கொள்ளவுமே தமது வேலைத்திட்டங்களை மேற்கொண்டனர். இதனால் நாடு வங்குரோத்து நிலைக்கு மாறியது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் புதிய ஜனாதிபதி பற்றி கற்பனைப் பாத்திரங்களை ஒருவருக்கு ஒருவர் உவமித்தனர். அவர் இதுவரை செய்த ஆக்கப்பணிகள் ஒன்றும் இல்லை. எனவே அடுத்த மூன்று வருடத்தில் சகல வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதாகக் கூறுகின்றார். இதுவரை நித்திரையில் இருந்து தற்போது விழித்தவர் போல் உரையாற்றுகிறார்.

எதிர்காலத்தில் நடக்கும் தேர்தல்களில் நாம் அமோக வெற்றியீட்டுவோம். தற்போதைய ஆட்சி இயல்பாகவே வீழ்ச்சியடையும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையின் சில தொகுதிகள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ள. அதுவும் நாம் போராடிப் பெற்றவை. ஆனால் பல தொகுதிகள் இன்னும் வெளியிடப்படவில்லை. அதில் இரகசியம் இருப்பதாகக் கூறுகின்றனர். அங்குதான் உண்மை உள்ளது. சூத்திரதாரி பற்றி அதில்தான் உள்ளது- என்றார்.









LK Newspapers Viber Community

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற "வீட்டுக்கொரு பட்டதாரியை தோட்டப்புறம் எங்கும் உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் விஞ்ஞான தீபம் செயற்றிட்டத்திற்கமைவாக, இரத்தினபுரி ஹப்புகஸ்தென்ன கல்லேல்ல கலைமகள் தமிழ்த் தேசியப் பாடசாலையில் அமைக்கப்பட்ட ஸ்மார்ட் போர்ட் வகுப்பறை கையளிக்கும் நிகழ்வும் பொங்கல் விழாவும் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். (தலவாக்கலை நிருபர்)

# மக்கள் வங்கியின் சுய வங்கிச்சேவை அலகுகள் 2021ஆம் ஆண்டில் 1.2 ட்ரில்லியன் ரூபா மதிப்புள்ள பரிவர்த்தனைகளுக்கு உதவியுள்ளன

2021ஆம் ஆண்டில் 1.2 ட்ரில்லியனுக்கும் அதிகமான பெறுமதியிலான 82.6 மில்லியன் பரிவர்த்தனைகளை மக்கள் வங்கி தமது ATMகள், CDMகள் மற்றும் சுய வங்கிச் சேவை அலகுகளின் நாடளாவிய வலையமைப்பின் மூலம் மக்களுக்கு வழங்கியுள்ளதாக மக்கள் வங்கி அண்மையில் அறிவித்தது. இலங்கையில் 2ஆவது பெரிய வணிக வங்கியான மக்கள் வங்கி, 741க்கும் அதிகமான தொடர்பு மையங்களைக் கொண்ட மிகப்பெரிய வலையமைப்புடன் 14 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களைக் கொண்ட, இலங்கையின் மிகப்பெரிய வாடிக்கையாளர் தளத்தையும் கொண்டுள்ளது. 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் வங்கியின் 797 ATMகள், ரூ. 800 பில்லியன் பெறுமதியிலான பரிவர்த்தனைகளை எளிதாக்கியுள்ளன. அதே வேளை, தமது 298 CDMகள் 460 பில்லியன் பெறுமதியிலான பரிவர்த்தனைகளை கண்டுள்ளன. மேலும், வங்கியின் புத்தாக்கமிக்க சுய வங்கிச் சேவை அலகுகளின் (SBU) மூலம் 5பில்லியன் ரூபா பெறுமதியிலான பரிவர்த்தனைகளை ஆதரிக்கின்றன. இந்த எண்ணிக்கைகள் மக்கள் வங்கியின் சுய வங்கிச் சேவை அலகுகள் நாட்டு



மக்கள் மத்தியில் பெற்றுள்ள பிரபலத்தின் அளவைக் காட்டுகின்றன. மக்கள் வங்கியின் SBUக்கள் ATMகள், CDMகள் மற்றும் வங்கி அலகுக் கூடங்களைக் கொண்டுள்ளன. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் வசதிக்கேற்ப வருடத்தில் 365 நாட்களும் 24 மணிநேரமும் வங்கிச்சேவைகளை அனுபவித்திட முடியும். 2022ஆம் ஆண்டு தொடங்கிடும்போது தடையற்ற டிஜிட்டல் வங்கிச் சேவைகளை வழங்குவதில் புதுப்பிக்கப்பட்ட கவனத்தை செலுத்தி, தேசத்தின் நிதித் தேவைகளுக்கு சேவை செய்வதற்கான தமது உறுதிப்பாட்டினை மக்கள் வங்கி புதுப்பித்துக்கொள்கிறது. SBUக்களின் பங்களிப்பு என்ற வகையில் அதன் டிஜிட்டல் வங்கிச் சேவை அப்களான People's Wave, People's Wyn மற்றும் People's Payஆகியவை இலங்கையில் டிஜிட்டல் வங்கியியல் அமைப்பை மாற்றியுள்ளன. 1 மில்லியனுக்கும் அதிகமான பயனர்களையும், நாட்டில் மிகவும் அதிகமாக பதிவிறக்கம் செய்யப்படும் வங்கியியல் அப் ஆக People's Wave விளங்குகிறது. மேலும் இது 50 வகையான வேறுபட்ட நிதிப் பரிவர்த்தனைகளுக்கு டிஜிட்டல் அணுகலையும் வழங்குகின்றது.

60ஆண்டு காலங்களுக்கும் மேலாக மக்களுக்கு நிதித்தீர்வுகளை வழங்கி வருபவர்களாக மக்கள் வங்கி விளங்குகின்றது. மேலும் அனைத்து இலங்கையர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் வங்கியியல்துறையில் ஒரு முன்னணி நிறுவனமாகவும் பரிணமித்துள்ளது. 2015ஆம் ஆண்டு முதல் இலங்கையின் வங்கித்துறையில் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாடு ஆகியவற்றில் மக்கள் வங்கி ஒரு முன்னோடி பங்கினை வகித்து வருகிறது. அப்போதிருந்து ஒவ்வொரு தொடுபுள்ளியிலும் வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட வசதி, வேகம் மற்றும் செயற்திறனை வழங்கும் பல்வேறு டிஜிட்டல் வங்கித் தீர்வுகளை வழங்க ஆரம்பித்துள்ளது.




மக்கள் வங்கி ISO/IEC 27001:2013 சான்றிதழுடன் அங்கீகாரம் பெற்ற இலங்கையின் முதலாவதும் ஒரே வங்கியாகவும் விளங்குகின்றது. இது தகவல் பாதுகாப்பிற்கான மிக உயர்ந்த சர்வதேச அங்கீகாரமாகவும் விளங்குகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.







# இலங்கையில் பால் உற்பத்தியை மேலும் மேம்படுத்த DIMO Plantseeds அறிமுகப்படுத்தும் Veera

இலங்கையின் முன்னணி பல்வகை கூட்டு நிறுவனமான DIMO, விவசாயிகளின் அன்றாட வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு, உள்ளூர் விவசாயத்துறையில் உற்பத்திகளை அதிகரிப்பதில் பங்களிப்புச் செய்யும் ஒரு பங்காளியாக, தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கிறது. அதன் துணை நிறுவனமான Plantseeds (தாவர விதைகள்), உள்ளூர் பால் தொழில்துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன், இலங்கை சந்தைக்கு கலப்பின (hybrid) வகை தீவன சோளம் விதையான Veera (வீரா) விதையை அறிமுகப்படுத்தியுள்ளது.

கறவை மாடுகளின் பால் உற்பத்தியை மேம்படுத்தும் வகையிலான, ஆரோக்கியமான உணவை Veera வழங்குவதுடன், கால்நடை தீவன பற்றாக்குறைக்கு இது ஒரு சிறந்த தீர்வாகவும் அமைகின்றது. Plantseeds ஆனது, உள்ளூர் சந்தையில் கலப்பின விதைகளை வழங்கும் நிறுவனமாகும். கலப்பின தர்ப்பூசணி விதைகள் பிரிவில் சந்தையில் முன்னோடியாகவும், நாட்டின் இரண்டாவது பெரிய விதை நெல் விநியோகஸ்தராகவும் Plantseeds திகழ்கின்றது.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சோள வகையானது, பால் பண்ணையாளர்கள் விலங்குகளுக்கு ஆரோக்கியமான உணவை வழங்குவதற்கும், பால் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துவதற்கும் உதவும். காரணம், கறவை மாடுகள் அதிக பாலை வழங்குவதற்கு, அவற்றிற்கு போதுமான போசாக்கினை வழங்கும் உணவுகள் அவசியமாகின்றது. பெரிய அளவிலான பால் பண்ணையாளர்கள் தங்கள் பசுக்களுக்கு பல்வேறு வகையான தாவர கலப்பு தீவனங்களை உணவாக வழங்க முடியும். இது கணிசமான உற்பத்தித்திறனுக்கு வழிவகுக்கிறது. தற்போது பெரும்பாலான விவசாயிகள் இலவச மேய்ச்சல் முறையை மட்டுமே பின்பற்றுகின்றனர். ஒரு பொருளாதாரத் தீர்வை வழங்கும் வகையில், விலங்குகளின் உச்ச பால் உற்பத்தி திறனை அடைய Veera விவசாயிகளுக்கு உதவும்.

இலங்கையின் பால் தொழில்துறையானது, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை அளிக்கிறது. தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவலுக்கமைய, 2015 முதல் நாட்டின் தற்போதைய வருடாந்த பசுப் பால் உற்பத்தி 400 மில்லியன் லீற்றரை எட்டியுள்ளது. DIMO Agribusinesses, பிரதான செயற்பாட்டு அதிகாரி பிரியங்க தெமட்டவெவ இது தொடர்பில் தெரிவிக்கையில், "பால் தொழில்துறையானது, போசாக்குள்ள கால்நடை தீவனம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன், இலங்கையில் பால் உற்பத்தித்துறையின் உற்பத்தித்திறனை மேலும் அதிகரிக்க, போசாக்கான விலங்கு உணவுகள் மற்றும் அதற்கான விநியோக தளத்தை அதிகரிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென நாம் நம்புகிறோம். இந்த அத்தியாவசியமான தேவையை அடையாளம் கண்டுள்ள DIMO Plantseeds, உள்ளூர் சந்தைக்கு Veera விதையை அறிமுகப்படுத்துவது தொடர்பான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது" என்றார்.

தாவர தீவன உற்பத்தியில் கவனம் செலுத்தும் நிறுவனங்கள், குறிப்பாக இலங்கையின் பாரிய மட்ட பால் விவசாயிகளை முக்கிய இலக்காகக் கொண்ட நிறுவனங்கள், Veera வகை விதைகளை எளிதில் பயிரிட முடியும். சிறிய மட்டத்திலான பால் விவசாயிகளும் தங்கள் கால்நடைகளுக்கு அவசியமான பொருளாதார தீர்வாக இதனை தங்கள் சொந்த நிலங்களில் வளர்க்கலாம்.

DIMO Plantseeds பிரதிப் பொது முகாமையாளர் ஹேமால் அத்தபத்து கருத்து வெளியிடுகையில், "அதிகளவான தொழில் முனைவோர் பால் வியாபாரத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளதை நாம் காண்கிறோம். நாம் அறிமுகப்படுத்தியுள்ள இந்த விதையின் மூலமான விளைச்சல், கால்நடை தீவனமாக பயன்படுத்தப்படுவதுடன், எந்தவொரு வானிலைக்கும் தாக்குப் பிடிக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது. புதிய வருமான வழிகளைத் தேடும் தொழில்முனைவோர், இதனை வறட்சியான பிரதேசங்களில் கூட வளர்க்கலாம். இது அந்நிலங்களை செழுமையான நிலங்களாக வெற்றிகரமாக மாற்றியமைத்து, பால் உற்பத்திக்கு அவசியமான கால்நடை தீவனத் தேவையை பூர்த்தி செய்யும். வணிக ரீதியான தாவர தீவன உற்பத்திக்காக Veera வினை வளர்ப்பதற்கான தொழில்நுட்ப அறிவை வழங்கும் பொருட்டு, தொழில்முனைவோருக்கு உரிய ஒத்துழைப்புகளை வழங்கவும் Plantseeds எதிர்பார்க்கின்றது" என்றார்.

Veera அதிக விளைச்சலைத் தரும் சோள வகையாகும் என்பதுடன், இது ஹெக்டேயருக்கு 80 தொன் வரையான விளைச்சலை வழங்குகிறது. இது விதைத்து 75-80 நாட்களுக்குள் பால் கொள்ளும் நிலையில், அதனை அறுவடை செய்யலாம். இலங்கையில் கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே சோள விதை வகையாக Veera உள்ளது. பூச்சிகள் மற்றும் கடுமையான வானிலை நிலைமைகளுக்கு ஈடுகொடுத்து வளரும் Veera, எந்தவொரு புவியியல் பிரதேசத்திலும் பயிரிடக் கூடியது. இந்த வகை சோளமானது, 9.02 கச்சா புரதம் (CP) (%) (DM), 67.92 Fiber-NDF (%) (DM), மொத்த கலோரி 4332.79 cal/gm (DM), 28.00 Fiber-ADF (%) (DM) போன்ற உயர் போசாக்கு அம்சங்களைக் கொண்டுள்ளது. அத்துடன், வயல் சோளம் (Field Corn), இனிப்புச் சோளம் (Sweet Corn), உள்ளூர் கலப்பின விதைச் சோளம் (Local Hybrid Seed Maize) போன்ற அனைத்து வகை சோளன் விதைகள் தொடர்பிலும், உள்ளூர் விவசாயிகளின் வலுவான சோள விதை பங்குதாரராகவும் DIMO Plantseeds விளங்குகின்றது.

DIMO, அதன் பல்வகை வணிகத் துறைகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில், கடந்த சில வருடங்களுக்கு முன்னர் விவசாயத்துறையில் நுழைந்தது. அதன் விவசாயப் பிரிவான DIMO Agribusbusiness மூலம், உள்நாட்டு விவசாயத்துறைக்கான எதிர்கால தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை அறிமுகப்படுத்தும் நோக்குடன் அது இப்பயணத்தில் இணைந்துள்ளது. சமூகங்களின் வாழ்வாதாரங்களில் பலன்தரக் கூடிய மாற்றத்தை ஏற்படுத்தி, இலங்கையின் வழக்கமான விவசாயத்தை, நவீன உயர் தொழில்நுட்பத் தொழில்துறையாக மாற்றும் பொருட்டு, அடுத்த தலைமுறை விவசாயம் எனும் அதன் தாரக மந்திரத்தின் மூலம் DIMO Agribusinesses முன்னோக்கிச் செல்ல முயற்சிக்கிறது.



திகதி 18.01.2022
செவ்வாய்க்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4651
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 10,958,910.00
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கங்கள்: 6 9 4 9 2 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 28,063,666.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2946
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 65,305,920.00
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 03 23 37 45
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 60,000,000.00

Mega POWER
மெகா பவர்
கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 999
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,856,320.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 167,715,234.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
E 21 02 18 41 47

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 681
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,708,120.00
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 31 52 62 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 93,054,759.20

செவன
சீட்டிழுப்பு இலக்கம் : 344
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,377,060.00
ஆங்கில எழுத்து: R
வெற்றி இலக்கங்கள்: 23 54 76 86
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 14,166,342.40

சுபீரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1671
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,895,920.00
சுப்பர் இலக்கம்: 15
வெற்றி இலக்கங்கள்: 05 13 36 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,644,430.40

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
தொலைநகல்: 0114 669 416

# வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com



# தைப்பூச திருநாளை முன்னிட்டு உலகப் பெருமஞ்சம் வீதியுலா


(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் இணுவில் அருள்மிகு கந்தசுவாமி கோவிலில் தைப்பூசத் திருநாளை முன்னிட்டு உலகப்பெருமஞ்சம் நேற்று முன்தினம் (18) வீதியுலா வந்தது. வள்ளி, தெய்வானை சமேத ஆறுமுகப்பெருமான் மஞ்சத்தில் பவனி வந்தார். இதனைக் காண்பதற்காக அடியவர்கள் பலர் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இணுவையம்பதி வந்துசேர்ந்தார்கள்.

அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன், கலை நேர்த்தியுடன் கட்டப்பட்ட உலகப்பெருமஞ்சம், இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்தில் அமைந்திருப்பது இந்துக்களுக்கு சிறப்பாகும்.

வருடத்தில் தைப்பூசம் மற்றும் வருடாந்த மகோற்சவத்தின் 12ஆம் திருவிழா ஆகிய இரண்டு தினங்களில் உலகப்பெருமஞ்சம் வீதியுலா வரும் என்பது குறிப்பிடத்தக்கது.





# சிறுமியொருவர் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழப்பு



சிறுமியொருவர் கிணற்றில் தவறி விழுந்து பரிதாபமாக உயிரிழந்த சம்பவமொன்று கரணவாயில் இடம்பெற்றுள்ளது.

கரணவாய், அண்ணாசிலையடிப் பகுதியில் நேற்று முன்தினம் (18) மாலை 6.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் 16 வயதான ஜெகன் கஜனிகா என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார். குறித்த சிறுமி வீட்டில் வளர்க்கப்படும் ஆட்டிற்கு குழை வெட்டுவதற்காக கிணற்றுக்கட்டில் ஏறி நின்று பூவரசம் குழை வெட்டியபோது அவர் கிணற்றில் தவறி விழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அவர் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ஹெரோயின் - கேரள கஞ்சாவுடன் மூவர் கைது

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டி பகுதியில் நேற்று முன்தினம் மாலை 300 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 9 கிராம் கேரள கஞ்சாவுடன் மூவர் மாங்குளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த நபர்கள் மூவரும் ஹெரோயின் மற்றும் கேரள கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற மாங்குளம் பொலிஸார் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் கைதான ஆசிரியருக்கு பிணை

முல்லைத்தீவில் பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்த ஆசிரியருக்கு கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கடந்த டிசம்பர் 24ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தார்.

பாடசாலை மாணவிகள் மீது ஆசிரியர் மேற்கொண்ட பாலியல் துஷ்பிரயோக முயற்சி தொடர்பில், சிறுவர் பெண்கள் பாதுகாப்புப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை தொடர்ந்து குறித்த தினத்தன்று முல்லைத்தீவு பொலிஸாரால் ஆசிரியர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கைதுசெய்யப்பட்ட ஆசிரியர் விசாரணைகளின் பின்னர் 25ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவரை ஜனவரி 04ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் கடந்த 04ஆம் திகதி வழக்கை விசாரணைக்கு எடுத்த முல்லைத்தீவு நீதிபதி, குறித்த ஆசிரியரை நேற்றுமுன்தினம் வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு வழக்கு விசாரணைகளை நேற்று 18ஆம் திகதி வரை தவணையிட்டிருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் குறித்த வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், ஆசிரியர் ஐந்து இலட்சம் ரூபாபெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும், 25ஆயிரம் ரூபா பிணையிலும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் 9 தொடக்கம் 12 மணிக்குள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிடுமாறும், சாட்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது உள்ளிட்ட கடும் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளதோடு வழக்கு விசாரணைகள் மீண்டும் ஏப்ரல் 05ஆம் ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

# வடமாகாணத்தில் அரச உத்தியோகத்தர்கள் - பொதுமக்களின் குறைநிறைகளைக் கேட்டறியும் வேலைத்திட்டம் உருவாக்கப்படும்

## ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு



(யாழ். நிருபர்)

வடமாகாணத்தில் அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்களின் குறைநிறைகளைக் கேட்டறியும் வேலைத்திட்டம் விரைவில் உருவாக்கப்படும் - என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே ஜீவன் தியாகராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண ஆளுநராக நான் கடமைகளை பொறுப்பேற்று மூன்று மாதங்களுக்கு மேலாகிறது. எனக்கு ஒவ்வொரு நாளும் 20இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கின்றன. சிலர் நேரிலும் வந்து என்னை சந்திக்கின்றார்கள். என்னை சந்திக்க வருபவர்கள் சிறுசிறு பிரச்சினைகளோடு வருகின்றார்கள்.

அந்தப் பிரச்சினைகள் அனைத்தும் சாதாரண மட்ட பிரச்சினைகள். அதாவது கிராம சேவையாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக தீர்க்கப்படவேண்டிய விடயங்கள். ஆனால், அவர்களால் தீர்க்கப்படாதவிடத்து என்னிடம் வருகின்றார்கள்.

நான் என்னிடம் வருபவர்களை திருப்பியனுப்ப முடியாது. அவர்களுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கின்றேன். இதற்குப் பிறகு நான் ஒரு முடிவு எடுத்துள்ளேன். அதாவது அரச உத்தியோகத்தர்கள் இனிமேல் அலுவலகங்களில் மட்டும் கடமை புரியாது மக்களிடம் சென்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து எனக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்ற வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளேன் - என்றார்.







கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகன் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகத்தினது ஆதரவில் இயங்கும் குட்டிச்சுட்டி முன்பள்ளியின் வருடஇறுதி கலைவிழா அண்மையில் நடைபெற்றது. (யாழ். நிருபர்)

# தேசகீர்த்தி - சமூகஜோதி விருதுகள் வழங்கி கௌரவிப்பு



(சாவகச்சேரி நிருபர்)

இலங்கை முதலுதவிச் சங்கத்தின் 46ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு இலங்கைத் திருநாட்டில் இன, மத, பேதங்களைக் கடந்து சமூக சேவையாற்றியோருக்கு அண்மையில் தேசகீர்த்தி, சமூகஜோதி, மக்கள் திலகம் ஆகிய விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கை முதலுதவிச் சங்க தேசிய ஆணையாளர் சிவத்திரு வை.மோகனதாஸ் தலைமையில் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் முதலுதவிச் சங்கத்தின் தேசிய கண்காணிப்பாளரும், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினருமான வை.ஜெகதாஸுக்கு தேசகீர்த்தி மற்றும் சமூகஜோதி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# மன்னார் பொது வைத்தியசாலையில் கருவள சிகிச்சை நிலையம் திறந்துவைப்பு







(மன்னார் நகர் நிருபர்)

உள்நாட்டுப் போரின் வடுக்களினால் வறுமையில் இருக்கும் தாயகமக்களின் நலனை கருத்திற்கொண்டு மன்னார் மாவட்டத்தில் குழந்தைப்பேறு தாமதமடைபவர்களுக்காக பல இலட்சம் ரூபா பெறுமதியான கருவள சிகிச்சை நிலைய உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த நிலையம் வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

புலம்பெயர் தமிழர் கூட்டமைப்பின் நிதி உதவியுடன், நிறுவப்பட்ட குழந்தைப்பேறு தாமதமடைபவர்களுக்கான கருவள சிகிச்சை நிலையம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (18) காலை 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேறு பிரிவுடன் இணைந்து ஓர் அலகாக குறித்த நிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் க.செந்தூர்பதிராஜா ஆகியோர் கலந்துகொண்டு திறந்துவைத்த நிலையில், குறித்த நிலையம் பெண் நோயியல் மற்றும் மகப்பேறு விசேட வைத்திய நிபுணர் எ.யோ.புஸ்பகாந்தன் மற்றும் பொறுப்பு தாதிய சகோதரி ரி.விமலேஸ்வரன் ஆகியோரிடம் பயனாளர் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த கருவளர்ச்சி நிலைய அங்குரார்ப்பணம் மன்னார் மாவட்டத்தில் குழந்தைப்பேறு தாமதமாவதற்கு தகுந்த சிகிச்சை வசதியில்லாத குறையை நீக்குவதற்கும், வறுமை மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகளால் பிற மாவட்டங்களுக்கு சென்று சிகிச்சை பெற முடியாத குழந்தைப்பேறு தாமதமடைந்த தம்பதிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையவுள்ளது.

இந்நிலையத்தில் ஆண்களுக்கான விந்து பரிசோதனை, பெண்களுக்கான ஸ்கான் பரிசோதனை, லேப்ராஸ்கோபி (கெமரா) பரிசோதனை மற்றும் முட்டை வளர்ச்சி சிகிச்சை என்பன இலவச சேவையாக வழங்கப்படவுள்ளன.

மேலும் விந்தை சுத்தப்படுத்தி செறிவாக்கி கருப்பையில் செலுத்தி கருத்தரித்தலை வேகப்படுத்தும் சிகிச்சை முறையும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச்சிகிச்சை முறையானது குழந்தைப்பேறு தாமதமடைந்த தம்பதியினருக்கு குழந்தை ஒன்றை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினை அதிகரிக்கின்றது.

உள்நாட்டுப் போரின் வடுக்களினால் வறுமையில் இருக்கும் தாயக மக்களின் நலனைக்கருதி சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணத் தொகுதிகளை புலம்பெயர் தமிழ்க் கூட்டமைப்பு எனும் அமைப்பு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

LK Newspapers Viber Community

# ஐக்கிய இராச்சியத்தின் இராஜாங்க அமைச்சர் தரிக் அஹமட் – பிரதமர் இடையே சந்திப்பு




ஐக்கிய இராச்சியத்தின் தெற்காசிய மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் தரிக் அஹமட் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (18) பிற்பகல் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

இலங்கையுடன் தற்போது காணப்படும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்நாட்டிற்கு விஜயம் செய்துள்ள இராஜாங்க அமைச்சர் தரிக் அஹமட் மூன்று தினங்களுக்கு நாட்டில் தங்கியிருக்கவுள்ளார்.

உயர்மட்ட இராஜதந்திர சந்திப்புகளுக்கு மேலதிகமாக இராஜாங்க அமைச்சர் தரிக் அஹமட் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

சுற்றுலாத்துறைக்கு ஒத்துழைப்பு நல்குதல், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்தல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் கல்வித்துறையின் அபிவிருத்தி தொடர்பில் முன்னெடுக்கக்கூடிய செயற்பாடுகள் தொடர்பில் இச்சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டது.

குறித்த சந்திப்பின்போது நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹுல்டன், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயனாத் கொலம்பகே உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# அரசாங்கம் மனித உயிர்களை பொருட்படுத்தவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



அரசாங்கத்திற்கு மனிதாபிமானம் என்ற பெயரே கிடையாது எனவும் அவ்வாறான உணர்வு இருந்தால் இவ்வாறு உணர்வற்ற விதமாக நடந்துகொள்ள மாட்டார்கள் எனவும் எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எரிவாயு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை எதிர்க்கட்சித் தலைவர் நேற்று முன்தினம்(18) சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எரிவாயு வெடிப்புச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இன்று நிதியுதவியும் வழங்கினார்.

நாடு முழுவதும் எரிவாயு வெடித்ததில் பல உயிர்கள் பலியாகியுள்ளன என்பதோடு மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவித்தார். நாட்டை எரிவாயு வெடிக்கும் நிலைக்கு கொண்டுவந்ததற்கு பொறுப்பான அனைவரும் பதவி விலக வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தொடர்புடைய எரிவாயு வெடிப்பினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி இலவச சட்ட உதவிகளை பெற்றுத்தருவதாகவும் எதிர்கால ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின்கீழ் நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள் கொண்டுவரப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ஒக்கம்பிட்டி பிரதேசத்தில் யானையொன்று உயிரிழப்பு

(கெலும் குணதிலக்க)

ஒக்கம்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புக்கன்ன, ஒக்கம்பிட்டி வீதியில் இரண்டாம் கட்டைக்கு அருகில் விவசாய நிலமொன்றில் விழுந்து உயிரிழந்த நிலையில் இருந்த யானையொன்று நேற்று (19) காலை மீட்கப்பட்டுள்ளது.



20 வயது மதிக்கத்தக்க இந்த யானை 20 அடி உயரமானது என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். இந்த யானை எவ்வாறு உயிரிழந்திருக்கும் என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்று மொனராகலை வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த யானையின் உயிரிழப்பு தொடர்பான மரண பரிசோதனைகள் நேற்று இடம்பெற்றன. இதுதொடர்பில் ஒக்கம்பிட்டி பொலிஸார் மற்றும் மொனராகலை வனஜீவராசிகள் காரியாலயம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

# மைத்ரி உடனடியாக அரசிலிருந்து வெளியேற வேண்டும்

## செஹான் சேமசிங்க பகிரங்க அறிவிப்பு

(அநுராதபுரம் நிருபர்)



முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அரசாங்கத்தில் இருந்துகொண்டே அரசாங்கத்தை விமர்சித்து எதிர்க்கட்சியினது எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதென்றால் உடனடியாக அரசாங்கத்திலிருந்து விலகிச் செல்லவேண்டும் - என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்சமயம் மைத்ரிபால சிறிசேன தூக்கத்திலிருந்து திடீரென கண்விழித்தவனைப் போன்று அரசாங்கத்தை விமர்சிக்கிறார். எதிர்க் கட்சியினது பொறுப்புகள் அனைத்தையும் மேற்கொள்கின்றார். அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் கூட கொவிட் நோயிலிருந்து தப்பியிருப்பதும் கூட ஜனாதிபதி கோட்டாபயவால்தான்.

அரசு கொவிட் தொற்றினை தலைதூக்க விடாது தடுப்பூசி ஏற்றுதலுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படும்போதுகூட சில அரசியல் கட்சிகள் குறுகிய அரசியல் இலாபமடைய செயற்படுகின்றன.

மைத்ரிபால சிறிசேன அதிருப்தியான நிலையில் அரசாங்கத்தில் இருப்பதானால் அவர் அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியில் அமர்ந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிக்க முடியுமென இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார்.

# காரைநகரில் இடம்பெற்ற பனைசார் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி

(யாழ் நிருபர்)



பனைசார் உற்பத்தி பயிற்சி நெறியை நிறைவுசெய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி, அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் பனைசார் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி நிகழ்வும் நேற்று (19) யாழ்ப்பாணம் - காரைநகர் பிரதேச சபையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

பனைசார் உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக பனைசார் உற்பத்தி பயிற்சிநெறியானது பிரதேச சபையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது. பயிற்சிநெறியின் நிறைவில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது. இதன்போது முதல் மூன்று இடங்களிலுள்ள உற்பத்திப் பொருட்களை செய்த மூவர் கௌரவிக்கப்பட்டனர்.

காரைநகர் பிரதேச சபையின் செயலாளர் கி.விஜயேஸ்வரனின் தலைமை இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச சபையின் தவிசாளர் ம.அப்புத்துரை, பிரதேச சபையின் உறுப்பினர்கள், பிரதேச சபையின் ஊழியர்கள், பனைசார் உற்பத்தி பயிற்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல்போன பெண் சடலமாக மீட்பு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் சாலியாவெவ பகுதியில் காணாமல் போயிருந்த பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாலியாவெவ 17ஆம் கட்டை, அளுத்கம பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 15ஆம் திகதி குறித்த பகுதியைச் சேர்ந்த பெண், காணாமல்போயிருந்தார். இதுதொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய, சாலியாவெவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

காணாமல்போன குறித்த வயோதிபப் பெண்ணை சாலியாவெவ பொலிஸாருடன் இணைந்து பொதுமக்களும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், 15ஆம் திகதி காணாமல் போன குறித்த பெண் அதே பிரதேசத்தில் உள்ள கற்குவாரிக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம்(18) இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக சாலியாவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை இரு வருடங்களுக்குள் நடைமுறைப்படுத்தப்படும்

## அமைச்சர் காமினி லொக்குகே உறுதியளிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது கொள்கை விளக்க உரையில் முன்வைத்த வேலைத்திட்டங்கள் இன்னும் இரண்டு வருடங்களுக்குள் சிறப்பாக நடைமுறைப் படுத்தப்படுமென மின்சார அபிவிருத்தித் துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ ஆற்றிய கொள்கை விளக்க உரை தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், காலத்துக்குப் பொருத்தமான மிகச்சிறந்த கொள்கை விளக்க உரையை ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் நிகழ்த்தினார். நாட்டுக்காக அவர் மேற்கொண்டுள்ள மற்றும் மேற்கொள்ளவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் அவர் இந்த உரையின்போது தெளிவாக விளக்கியுள்ளார்.


இன்னும் இரண்டு வருடங்களில் அந்த வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படும் அதனைத் தொடர்ந்து நாடு செழிப்பாக முன்னேற்றமடையும் என்பதே எமது நம்பிக்கை என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# முகமாலையில் மனித எச்சம் மீட்பு!

(மு.தமிழ்ச்செல்வன்)



பளை, முகமாலை பகுதியில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் பணியின்போது மனித எச்சம் ஒன்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.



கிளிநொச்சி மாவட்ட

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலை பகுதியில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மனித எச்சம் அடையாளப்படுத்தப்பட்டதையடுத்து பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவானுக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த பகுதிக்கு நேற்று (19)வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட நீதவான் குறித்த பகுதியை பார்வையிட்டிருந்தார்.

இதனையடுத்து நீதவானின் அனுமதியுடன் இன்று குறித்த பகுதியில் மேலும் அடையாளப்படுத்தபட்ட இடங்களில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் சுற்றுலா இந்தோனேசியாவில் ஊக்குவிப்பு




இந்தோனேசியாவிலுள்ள இலங்கைத் தூதரகம் மேற்கொண்ட பொருளாதார இராஜதந்திர முயற்சிகளின் ஒரு பகுதியாக இலங்கையை எம்.ஐ.சி.இ. தலமாக ஊக்குவிப்பதற்கான இணையத்துடனான கலந்துரையாடல் அண்மையில் இலங்கை மாநாட்டுப் பணியகத்துடன் இணைந்து நடத்தப்பட்டது. இந்த ஒன்றரை மணிநேர அமர்வில் 25 இந்தோனேசிய பயண முகவர்கள் பங்குபற்றியதுடன், இலங்கையின் எம்.ஐ.சி.இ. சுற்றுலாவிற்கு அவர்கள் அதிக ஆர்வம் காட்டினர்.

இந்தோனேசியா மற்றும் ஆசியானுக்கான இலங்கைத் தூதுவர் யசோஜா குணசேகர தனது ஆரம்ப உரையில், நேரடி விமானங்கள் இருப்பதால் கூட்டங்கள், ஊக்கப் பயணம், மாநாடுகள் மற்றும் நிகழ்வுகளை ஏற்பாடுசெய்வதற்கு இந்தோனேசியர்களுக்கு இலங்கை சிறந்த இடமாக உள்ளது என வலியுறுத்தினார். விமானப் பயண நேரம் வெறும் 4 மணிநேரம் மட்டுமேயாவதுடன் இலங்கை பலவிதமான அனுபவங்களையும் வழங்குகின்றது.

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் பொது முகாமையாளர் கிருஷாந்த பெர்னாண்டோ இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் செயற்பாடுகள் குறித்து விரிவான விளக்கமொன்றை வழங்கினார்.

இந்தோனேசியக் கண்காட்சி நிறுவனங்களின் சங்கத்தின் தலைவர் ஹோசியா அன்ட்ரியாஸ் ருங்கட், பரஸ்பர நன்மை பயக்கும் ஈடுபாட்டின் மூலம் எம்.ஐ.சி.இ. சுற்றுலாவை ஊக்குவிப்பதில் இலங்கையின் சக நிறுவனங்களுடன் ஒத்துழைப்பதற்கு விருப்பம் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுனில் திசாநாயக்க, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தை எம்.ஐ.சி.இ. இடமாக சிறப்பித்துக் கூறினார். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் இந்தோனேசியாவிற்கான முகாமையாளர் அமில விஜேசேகர, எம்.ஐ.சி.இ. துறையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வழங்கும் பல்வேறு வசதிகளை விவரித்தார். இலங்கை தொழில்சார் சம்மேளனத்தின் குழு உறுப்பினர் கலாநிதி ஷெஃபாத் அமிடன் இலங்கையின் எம்.ஐ.சி.இ. தொழிற்துறை குறித்த விளக்கக்காட்சியை வழங்கினார்.

ஹில்டனின் வர்த்தகப் பணிப்பாளரும், இலங்கை ஹோட்டல் சங்கத்தின் உறுப்பினருமான சுமல் பெர்னாண்டோ எம்.ஐ.சி.இ. சுற்றுலாவை நடத்துவதற்கான இலங்கை ஹோட்டல் துறையின் தயார்நிலை குறித்து விளக்கினார்.

அதனைத் தொடர்ந்து, இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் சிரேஷ்ட முகாமையாளர் திருமதி அச்சினி தண்டுன்னகே இலங்கையில் நடைமுறையிலுள்ள தற்போதைய பயண வழிகாட்டுதல்கள் குறித்து விளக்கமளித்தார். இலங்கையின் உள்வரும் சுற்றுலா நடத்துனர்களின் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய பேடி போல் இலங்கையின் எம்.ஐ.சி.இ. தொழிற்துறையை ஊக்குவிப்பதற்காக இந்தோனேசியாவில் உள்ள வாய்ப்புகளை ஆராய்ந்தார்.

இதன்முடிவில் இந்தோனேசியப் பயண முகவர்கள் இலங்கையின் எம்.ஐ.சி.இ. சுற்றுலாத் துறை குறித்த தமது கேள்விகளை கேட்டறிந்து கொள்வதற்கான ஊடாடும் கேள்வி - பதில் அமர்வு நடத்தப்பட்டது.

# மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சூரிய பொங்கல்

(மன்னார் நிருபர்)



மன்னார் மாவட்ட செயலக அலுவலர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சூரிய பொங்கல் மற்றும் உழவர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று (19) காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட செயலகத்தின் அலுவலர் நலன்புரி சங்கத்தின் தலைவரும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளருமான கே.திலீபன் தலைமையில் நடைபெற்றது.



நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. ஸ்ரான்லி டி மெல் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

மேலும் மாவட்ட செயலகத்தின் உதவி மாவட்ட செயலாளர்களும் முப்படை அதிகாரிகளும் மாவட்ட செயலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இயற்கை முறையில் விவசாய செய்கையினை மேற்கொண்டுவரும் 5 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர்.

மேலும் சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்திற்கான உதவித்தொகையும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரால் வழங்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

LKNewspapers Viber Community

# இலங்கைக்கான கனடா பயண ஆலோசனையிலுள்ள தகவல்களை ஏற்றுக்கொள்ள முடியாது

## முழுமையான மறுப்பை வெளியிட்டது வெளிநாட்டு அமைச்சு

இலங்கை தொடர்பான கனடா பயண ஆலோசனையிலுள்ள தகவல்களை இலங்கை அரசாங்கம் முழுமையாக மறுப்பதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் கனடா அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளித்து அந்த அமைச்சு வெளியிட்டு ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தவறான மற்றும் காலாவதியான தகவல்களை உள்ளடக்கிய மற்றும் இலங்கையின் உண்மையான நிலைமையை பிரதிபலிக்காத வகையில் 2022 ஜனவரி 13ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான கனேடிய பயண ஆலோசனை தொடர்பில் வெளிநாட்டு அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. நாட்டின் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு நிலைமை குறித்த தவறான குறிப்புகள், பெண் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டினரைத் துன்புறுத்துதல் தொடர்பான தவறான தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே, நாட்டில் நிலவும் உண்மைகளை கனேடிய அதிகாரிகளுக்கு பின்வருமாறு தெரிவிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கொவிட் தொற்றுநோயால் முன்வைக்கப்பட்ட சவால்களை இலங்கை வெற்றிகரமாக முறியடித்துள்ளதுடன், கொவிட் தொடர்பான சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு இணங்க, அனைத்து பொதுச் சேவை, நிறுவன, வணிக மற்றும் கல்விச் செயற்பாடுகள் இடையூறுகளின்றி சாதாரணமாக செயற்படும் வகையில் தற்போது இயல்புநிலையில் உள்ளது. எமது நாடுதழுவிய தடுப்பூசித் திட்டம் உலக சுகாதார நிறுவனத்தால் பாராட்டப்பட்ட அதே வேளை, தகுதியான மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 90 வீதமானோர் கொவிட்-19 தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர். 20 வயதுக்கு மேற்பட்ட மக்களுக்கு பூஸ்டர் டோஸ் வழங்குவதற்கான பிரசாரம் தொடங்கப்பட்டுள்ளது.

தொற்றுநோய் நிலைமையின்போதிலும் சி.என்.என்னின் 2022இல் பயணம் செய்யவேண்டிய இடம், குளோபல் வெல்னஸ் இன்ஸ்டிட்யூட், கொண்டே நாஸ்ட் டிரவலர் 2021 வாசகர் விருப்பு விருதுகள் மற்றும் லோன்லி பிளேனட் மற்றும் நெஷனல் ஜியோகிராபிக் டிரவல் ஆகியவற்றால் இதற்கு முன்பு பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய அங்கீகாரங்கள் உட்பட சுற்றுலாத்துறையில் பல சர்வதேச பாராட்டுகளை இலங்கை பெற்றுள்ளது. உலகளவில் பயணத்தைப் படிப்படியாக இயல்பாக்குவதன் மூலம் கனடா மற்றும் ஏனைய இடங்களிலிருந்து இலங்கைக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் விஜயம்செய்வதனை இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.



இலங்கையின் பொருளாதாரம் கொவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், விவேகமான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், இந்த ஆண்டு தனது பொருளாதாரத்தை புத்துயிர் பெறச்செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் இலங்கை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. உணவுப் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியவை அரசாங்கத்தின் முதன்மையான முன்னுரிமைகளாகும் அதேவேளை, அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் கிடைக்கச் செய்வது அரசாங்கத்தின் செயற்பாடுகளின் முக்கிய பகுதியாகக் கருதப்படுகின்றது. அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் பொதுமக்களுக்கு எல்லாநேரத்திலும் தொடர்ந்தும் கிடைப்பதையும், போதுமான அளவு உணவுப்பொருட்கள் கையிருப்பில் இருப்பதையும் உறுதிசெய்வதற்கு அதிகமான முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு நிலைமையைப் பொறுத்தமட்டில், இலங்கை அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்கில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்காக குறைந்தபட்ச இராணுவப் பிரசன்னத்தைப் பேணிவருகின்றது. பொலிஸ் அல்லது பாதுகாப்புப் படையினரால் தன்னிச்சையாகக் கைதுசெய்து, தடுத்து வைக்கப்படும் செயற்பாடுகள் எதுவும் இடம்பெறுவதில்லை. 2009இல் பயங்கரவாத மோதல் முடிவுக்கு வந்ததிலிருந்து, பல வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆதரவுடன், வடக்கு மற்றும் கிழக்கில் விரிவான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

டிசம்பர் 2014 நிலைவரப்படி கண்ணிவெடி அகற்றும் பணி 94 சதவீதம் நிறைவடைந்திருந்த நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை 98.7 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளது என்றும், மேலதிக தாக்குதல்கள் இடம்பெறுவதை நிராகரிக்க முடியாது என்றும் அறிவுரை கூறப்பட் டுள்ளது.

2019 நவம்பரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து, பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதைத் தடுப்பதற்காக, நாடு முழுவதும் பொதுமக்கள் பாதுகாப்பையும், தேசிய பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் மேம்பட்ட விழிப்புணர்வு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக இக்காலப்பகுதியில் இலங்கையில் பயங்கரவாதம் தொடர்பான ஒரு சம்பவம் கூட நிகழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பல இனங்கள், பல மதங்கள் மற்றும் பல கலாசாரங்களைக்கொண்ட நாடான இலங்கை, பல்வேறு சமூகங்கள் பல நூற்றாண்டுகளாக சமாதானமாக இணைந்து வாழ்ந்து வரும் வளமான, பரந்த நோக்குள்ள பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. நாட்டில் உள்நாட்டுக் கலவரங்கள் எதுவும் இடம்பெறுவதில்லை. வலுவான அமைப்புகள் மற்றும் துடிப்பான சிவில் சமூகத்துடன் கூடிய நீண்ட ஜனநாயகப் பாரம்பரியத்தை இலங்கை கொண்டுள்ளது. தாராளவாத ஜனநாயக நெறிமுறைகள் மற்றும் மரபுகள் நிலவும் ஏனைய எந்தவொரு நாட்டையும் போலவே இலங்கையிலும் அமைதியான ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதன் மூலம் ஒன்றுகூடல் சுதந்திரம் பாதுகாக்கப்படுகின்றது.

இதுபோன்ற அமைதியான போராட்டங்கள் தடையின்றி நடைபெறுவதற்கு பொலிஸார் அனுமதி அளித்ததுடன், தொடர்ந்து அனுமதி அளித்தும் வருகின்றனர். இந்த ஆர்ப்பாட்டங்கள் சுற்றுலாப் பயணிகளின் வசதி, நடமாட்டம், பாதுகாப்பு அல்லது செயற்பாடுகளுக்கு எந்த வகையிலும் தடையாக இருக்காது.

நாடளாவிய ரீதியில் அனைத்து பிரதேசங்களிலும் சுற்றுலா சார்ந்த பொலிஸார் உட்பட பொலிஸாரின் பிரசன்னத்தைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் பெண் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், பொலிஸ் நிலையங்களில் பெண் பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம், நாட்டின் அனைத்து பிரபலமான சுற்றுலாத்தலங்களிலும் பொலிஸாரின் இருப்பு அதிகரிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு விஜயம்செய்யும் பயணிகள் இலகுவாக அணுகிக்கொள்ளும் வகையில், சுற்றுலா சார்ந்த பொலிஸ் பிராந்தியப் பிரிவுகள், உள்ளூர் பொலிஸ் மற்றும் மருத்துவமனைகள் போன்ற ஏனைய அவசரகாலப் பிரிவுகளின் அவசர தொடர்பு இலக்கங்கள் இணையவழியில் காணப்படுகின்றன.

உயர்தரமான கல்வி, ஆங்கில அறிவு மற்றும் கல்வியறிவு கொண்ட நட்புறவான மக்களைக்கொண்ட ஒரு தீவு நாடான இலங்கையில் சுற்றுலாப் பயணிகள் அல்லது வெளிநாட்டவர்களுக்கு எதிரான துன்புறுத்தல் அல்லது வன்முறைச் சம்பவங்கள் மிகவும் அரிதானதாகக் காணப்படுவதாக தெரிவித்துள்ளது.





இலங்கை அல்-நூர் அறக்கட்டளை அமைப்பானது குவைத் நாட்டின் நிதி அனுசரணையில் இலங்கை பாதுகாப்புப் படையினருடன் இணைந்து முதன்மை மேஜர் ஜெகப். ஜெயவர்தன முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, இலங்கை பாதுகாப்புப் படையின் பதுளை தம்பவின்னை, வெலிமடை இராணுவ முகாமிற்கு இலவச குடிநீர் தாங்கிகள் மற்றும் நீர் விநியோகத்தை அம் முகாமின் பாதுகாப்பு அதிகாரிகளிடம் கையளிக்கும் நிகழ்வு அல்-நூர் அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ரிபிகி ரம்ஸான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் [illegible] ரகு இந்திரகுமார் மற்றும் மட்டக்களப்பு இணைப்பாளர் ஏ.எம்.நளீம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(படங்கள் -அஷ்ரப். ஏ .சமத்)

## துறைமுக அதிகாரசபைக்கு புதிய தலைவர் நியமனம்



இலங்கை துறைமுக அதிகாரசபையின் புதிய தலைவராக கலாநிதி பிரசன்ன ஜயமான்ன நேற்று (19) நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவித்தலை துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.


இதற்கு முன்னர் இவர் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதி தலைவராக பணியாற்றியுள்ளார்.

இதுவரையில் துறைமுக அதிகார சபையின் தலைவராக நிஹால் கெப்பட்டிபொல பணியாற்றிக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பேராசிரியர் அல்லாமா ம.மு.உவைஸ் நூற்றாண்டு விழா

(அஷ்ரப் ஏ சமத்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் அல்லாமா ம.மு. உவைஸ் நூற்றாண்டு விழா நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் நடைபெற்றது.





பிரதம அதிதியாக கல்வி உயர்கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன கலந்துகொண்டார். கௌரவ அதிதியாக பல்கலைக்கழக ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்கவும் ஊடக அமைச்சின் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பழீல் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தபால் திணைக்களத்தின் பிரதி மா அதிபரினால் பேராசிரியர் உவைஸின் நூற்றாண்டு ஞாபகார்த்த நினைவு முத்திரையும் முதல் தபால் உறையும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவிடம் கையளிக்கப்பட்டது. பின்னர் அது அல்லாமா உவைஸின் [illegible] வழங்கப்பட்டது.

அத்துடன், பேராசிரியர் அல்லாமா உவைஸ் பற்றி தென்கிழக்குப் பல்கலைக்கழகம் வெளியிட்ட மாக்சின் எனும் இதழ்கள் ம.மு.உவைஸின் புத்திரர்களுக்கும் வழங்கப்பட்டது.

ம.மு.உவைஸ் பற்றி பேராசிரியர் எஸ். தில்லைநாதன், பேராசிரியர் ஏ. சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.ஜோகராஜ், பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், காத்தான்குடி பௌஸ் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இந் நிகழ்வில் பேராசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பதிவாளர்கள், இலக்கியவாதிகள், ம.மு.உவைஸின் குடும்ப உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

## புகையிரதத்தில் மோதி நபரொருவர் பலி

புகையிரதத்துடன் மோதி நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுத்துறை புகையிரத நிலையத்துக்கு அருகில் அளுத்கமயிலிருந்து மருதானை வரை பணித்த புகையிரதத்தில் மோதியே இவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகளை ஆரம்பித்துள்ளனார்.

உயிரிழந்தவர் யார் என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன் சடலம் நாகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## 258 கிலோ கஞ்சாவுடன் மூவர் அதிரடியாக கைது!

அம்பேகமுவ பிரதேசத்தில் 258 கிலோ 714 கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் மூவர், விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



நேற்று முன்தினம் இந்தப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

விசேட அதிரடிப்படை உடவலவ்வ முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, அம்பேகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொகுனுதென்ன பிரதேசத்தில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களிடமிருந்து 250 கிலோ 714 கிராம் கஞ்சா, 70 பேர்ச்சஸ் பயிர்ச்செய்கை நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா தோட்டம் மற்றும் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட துப்பாக்கி என்பன சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேகநபர்கள் அம்பேகமுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

அம்போகமுவ, பலாங்கொடை மற்றும் தனமல்வில ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25, 30 மற்றும் 44 வயதுடைய நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்களை வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அம்பேகமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




### போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

**பேலியகொட**

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்கொழும்பு வீதி, பொறியியலாளர் கூட்டுத்தாபனத்துக்கு முன்பான பேலியகொட குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் (18) முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 01 கிலோ 760 கிராம் கேரள கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டு பேலியகொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

மோதரை மற்றும் மட்டக்குளி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 19 மற்றும் 22 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

**அங்குலானை**

அங்குலானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சயுரபுர தொடர்மாடி குடியிருப்புக்கு அருகில் நேற்று முன்தினம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு பிலியந்தலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டு நேற்று முன்தினம் மொரட்டுவை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், சந்தேகநபரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**பிலியந்தலை**

பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீலரத்தன மாவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் வலான குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 10 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டு பிலியந்தலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**வத்தளை**

வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலகந்த பிரதேசத்தில் வத்தளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரெருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எந்தல, வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**கல்கிசை**

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படோவிட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் கல்கிசை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 07 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கைக்குண்டுடன் நபரொருவர் கைது - கெஸ்பேவ

கெஸ்பேவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதர்ஷன மாவத்தை பிரதேசத்தில் கெஸ்பேவ பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த பயன்படுத்தப்படாத கைக்குண்டுடன் நபரொருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

மொரட்டுமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### சட்டவிரோதமாக தங்கியிருந்த நைஜீரியர்கள் இருவர் கைது - நாவின்ன

குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகளினால் நேற்று முன்தினம் நாவின்ன பிரதேசத்தில் அனுமதிக்கப்பட்ட விசா இன்றி நாட்டில் தங்கியிருந்த நைஜீரிய பிரஜைகள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மஹரகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

### விபசார விடுதி சுற்றிவளைப்பு - கல்கிசை

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெடிகந்தர வீதி, இரத்மலானை பிரதேசத்தில் கல்கிசை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, ஆயுர்வேத மருத்துவ மத்திய நிலையம் என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்டுவந்த விபசார விடுதி சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது, விபசார விடுதியை முகாமைத்துவம் செய்வதற்காகவும், விபசார தொழிலை முன்னெடுப்பதற்காகவும் அங்கிருந்த பெண் சந்தேகநபர்கள் 07 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொட்டவை, பொலன்னறுவை, நாரம்பனாவ, மித்தெனிய, இரத்மலானை மற்றும் பணந்துறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 34 தொடக்கம் 51 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

LK Newspapers Viber Community

# நாட்டின் டொலர் பற்றாக்குறையை நிவர்த்திக்க உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கவேண்டும்

## கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்





(திருகோணமலை நிருபர்)

நாட்டில் தற்போது நிலவும் டொலர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்த வேண்டும் - என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக நாட்டில் இறக்குமதி செய்யப்படும் அனைத்து அத்தியா வசியமற்ற பொருட்களும் நிறுத்தப் படுவதாகவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கந்தளாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய CO-OP FRESH விற்பனை நிலையத்தை திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் உரையாற்றிய ஆளுநர் அனுராதா யஹம்பத்,

"நாங்கள் இன்று டொலர் நெருக்கடியைப் பற்றி பேசுகிறோம். 1977இலிருந்து தினமும் கடன் வாங்கி வருகிறோம். ஒரு நாடாக நாங்கள் அதைத் தொடர்ந்து செய்தோம். இப்போது இந்த டொலர் நெருக்கடியால் அத்தியாவசியப் பொருட்களை மட்டுமே இறக்குமதி செய்கிறோம். தேவையற்ற பொருட்களை நாங்கள் இறக்குமதிசெய்ய மாட்டோம், எனவே, எங்கள் உள்ளூர்த் தயாரிப்புகளை மேம்படுத்தவேண்டும். நான் அதை ஒரு வரமாக பார்க்கிறேன்.

கொவிட் தொற்று நோய் தற்போதைய அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளை பாதித்துள்ளது. இது உலகின் அனைத்து நாடுகளையும் பாதித்தது. ஆனால், நம் நாட்டில் மட்டும் பல போராட்டங்கள் நடந்தன. இந்த தொற்றுநோய்க்கு அரசாங்கம் காரணமல்ல. மாறாக அரசாங்கத்தையே விமர்சிக்கிறார்கள்.

மேலும், கொவிட் தொற்றுநோயால் நாடு சிதைந்தபோது, கூட்டுறவுத்துறை மதிப்புமிக்க சேவையை செய்தது. கிழக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களும் மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்க மொபைல் வாகனங்களைப் பயன்படுத்தியது.

மேலும் நமது மக்களின் புதிய உள்ளூர் உற்பத்திகளுக்கு முன்னுரிமை அளித்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, விவசாய அமைச்சின் செயலாளர் கலமதி பத்மராஜா, மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# கிண்ணியா மயிலத்தீவு பாலத்தை உரிய அதிகாரிகள் புனரமைத்துத் தருமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை



(கிண்ணியா)

கிண்ணியா பிரதேச சபை எல்லைக்குட்பட்ட காக்காமுனை கிராமசேவகர் பிரிவிலுள்ள மயில்தீவு பிரதான வீதியிலுள்ள பாலம் பல மாதங்களாக உடைந்து சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

இப்பாலமானது உடைந்து பல மாதங்கள் கடந்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியூடாக தினமும் பிரயாணம் செய்கின்ற பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், வயோதிபர்கள், பெண்கள் ஆகியோர் சிரமப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

அதிகமாக இவ்வீதியை விவசாயிகள் பயன்படுத்துவதால் இயந்திரங்கள், உழவு இயந்திரங்களை, விதைகளை எடுத்து செல்வதில் சிரமங்களுக்குள்ளாகுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பாதையானது காக்காமுனை மயில்தீவு ஊடாக சூரங்கல், மணியரசன்குளம், கற்குழி, வட்டமடு, தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை, கந்தளாய் போன்ற பிரதேசங்களுக்கு செல்லும் பிரதான பாதையாக காணப்படுகிறது.

இதனை புனர்நிர்மாணம் செய்து தருமாறு அதிகாரிகளிடம் கோரியும் எந்த பயனும் கிட்டவில்லையென கவலை தெரிவிக்கின்றனர். எனவே, இவ்வீதியில் உடைந்து கிடக்கும் பாலத்தை புனரமைத்துத் தருமாறு உரிய அதிகாரியிடம் பிரதேச மக்கள் கோருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

## போடியார் புலம்பல்.!



வடக்கு, கிழக்கு எம்.பி.மாரிட உதவிய நாடப்போறாராமே நாட்டுத் தலைவர்..

ஏற்கனவே அவங்க சேத்து வைத்திருக்கிற சொத்துகள் அறிஞ்சித்து கடன் கேட்கப்போறாரோ புலிகளிட காலத்தில சுருட்டி எடுத்து சுவீஸ் வங்கில வைச்சிருக்கிற எம்.பி. தம்பியும் இருக்கான் எலுவா.!

# அம்பாறை மாவட்டத்தில் வசதிகுறைந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கிவைப்பு




(பெரியநீலாவணை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் வசதி குறைந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (19) பாண்டிருப்பு கலாசார மத்திய நிலையத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி துணைச் செயலாளர் ஏ.நிதான்சன் தலைமையில் நடைபெற்றது.

பொருளாதார ரீதியாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்கியிருக்கின்ற மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு அந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவும் நோக்கோடு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில், அக்கரைப்பற்று, நாவிதன்வெளி, கல்முனை, பாண்டிருப்பு போன்ற பிரதேசங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு இந்த சைக்கிள்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த சைக்கிள்களை வழங்குவதற்கு கனடாவில் வாழும் தமிழ் உறவுகள் அனுசரணை வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் தலைவர் கே.சேயோன், சமூக ஆர்வலர் வை.கே.நாதன் உட்பட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக றிபாஸ் பதவியேற்பு



(சர்ஜுன் லாபீர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் நேற்று(19) தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய டாக்டர் ஜி. சுகுணன் நேற்று முன்தினம் (18) மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே டாக்டர் றிபாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடியினைச் சேர்ந்த இவர் தற்போது பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பதவியேற்பு நிகழ்வில் முன்னாள் கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஜி.சுகுணன் உட்பட வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# சம்பூரில் மோட்டார்குண்டுகள் மீட்பு

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு மோட்டார்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.



சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைபறிச்சான் அம்மன் நகர்ப் பகுதியில் பற்றைக்காட்டுக்குள் மோட்டார்குண்டுகள் நேற்று (19) காலை மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை சர்தாபுர பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த இடத்துக்குச் சென்று மோட்டார்குண்டுகளை மீட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மீட்கப்பட்ட மோட்டார்குண்டுகளை செயழிலக்க செய்வதற்கு மூதூர் நீதிமன்றத்தின் அறிக்கையை கோரியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# திருமலை தலைமையக கடற்படை முகாமில் தூக்கில் தொங்கிய சிப்பாய் சடலமாக மீட்பு

(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை தலைமையக கடற்படை முகாமில் தூக்கில் தொங்கிய நிலையில் கடற்படை சிப்பாய் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று (19) அதிகாலை இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் கடற்படை சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட கடற்படை சிப்பாய் நவ வத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த என்.எம்.கே.எஸ்.நவரத்ன (வயது 26) எனவும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு தற்கொலை செய்துகொண்டதற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

திருகோணமலை கடற்படை முகாம் வைத்தியசாலையிலிருந்து திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக சடலம் கொண்டுசெல்லப் பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாழைச்சேனையில் திருடிய மோட்டார்சைக்கிளை விபத்துக்குள்ளாக்கிவிட்டு தப்பிச்சென்ற திருடன்

(மீராவோடை நிருபர்)



வீடொன்றில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த மோட்டார்சைக்கிளை திருடன் ஒருவன் திருடிச் சென்று அதனை விபத்துக்குள்ளாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ள சம்பவமொன்று நேற்று (19) அதிகாலை இடம் பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பிறைந்துறைச்சேனை ரயில்வே வீதியிலுள்ள வீடொன்றிலே மோட் டார்சைக்கிள் இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

மோட்டார்சைக்கிளின் உரிமையாளர் தனது வீட்டின் கதவை திறந்து பார்த்தபோது மோட்டார்சைக்கிள் காணாமல்போயுள்ள சம்பவம் தெரியவந்துள்ளது.


மோட்டார்சைக்கிளை தேடி அலைந்த சைக்கிள் உரிமையாளர் முகநூல் பதிவொன்றின் உதவியுடன் மோட்டார்சைக்கிளை சேதமடைந்த நிலையில் மீட்டுள்ளார்.

மோட்டார்சைக்கிளை திருடன் திருடிச் சென்றபோது அது விபத்துக்குள்ளானதில் திருடன் மோட்டார்சைக்கிளை விட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மோட்டார் சைக்கிள் உரிமையாளர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவுசெய்துள்ளதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முன்னாள் கிழக்கு ஆளுநருடன் முஷாரப் எம்.பி. சந்திப்பு

(காத்தான்குடி நிருபர்)



கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் முதுநபீனுக்குமிடையிலான சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை (17) முன்னாள் ஆளுநரின் காத்தான்குடி காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது சமகால அரசியல், சமூக நிலைவரங்கள் தொடர்பாகவும், எதிர்கால முன்னெடுப்புகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# அம்பாறை மாவட்ட நல்லிணக்க குழுக்களின் பிரதேச இணைப்பாளர்களுக்கான செயலமர்வு

(கல்முனை நிருபர்)

சமாதானம் மற்றும் சமூகப் பணி நிறுவனத்தின் (PCA) அனுசரணையில் இயங்கிவரும் அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலகப் பிரிவில் காணப்படும் 20 பிரதேச நல்லிணக்கக் குழுக்களின் இணைப்பாளர்கள் மற்றும் 20 பிரதேச பிரிவுகளிலுள்ள இளைஞர் நல்லிணக்க குழுக்களின் இணைப் பாளர்களுக்கான அமர்வு அம்பாறையில் நேற்று (19) புதன்கிழமை இடம்பெற்றது.





அம்பாறை மாவட்டத்தில் குறித்த நல்லிணக்க குழுக்களின் மூலம் மேற்கொள்ளவேண்டிய நல்லிணக்க செயற் பாடுகள் மற்றும் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பாக கேட்றியப்பட்டு எதிர்காலத்தில் மாவட்ட, பிரதேச சமூக மட்டத்தில் மேற்கொள்ளவுள்ள நல்லிணக்க முன்னெடுப் புகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

சமாதானம் மற்றும் சமூகப் பணி நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் ரீ.தயாபரன், முகாமையாளர் டி.இராஜேந்திரன், அரச சார்பற்ற நிறுவனங்களின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஐ.எல்.எம்.இர்பான், சமாதான சமூகப் பணி அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்களான எம்.எல்.ஏ.மாஜீத், கே.டி.ரோகிணி, எச்.எஸ்.ஹசனி, சுரேகா அத்தநாயக்க, மாவட்ட நல்லிணக்க மன்றத்தின் இணைப்பாளர் எஸ்.எல்.ஏ.அஸீஸ் மற்றும் பிரதேச நல்லிணக்க மன்றங்கள், இளைஞர் நல்லிணக்க மன்றங்களின் இணைப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவியிடம் பாலியல் இலஞ்சம் கோரிய விரிவுரையாளர்

## கலை, கலாசார பீட மாணவர் ஒன்றியம் கண்டனம்

(கனகராசா சரவணன்)

தென்கிழக்குப் பல்கலையில் மாணவி ஒருவரிடம் பாலியல் இலஞ்சம் கோரிய விரிவுரையாளரை பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவர் ஒன்றியமானது வன்மையாகக் கண்டிப்பதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அரபுமொழி மற்றும் இஸ்லாமிய கற்கை பீடத்தைச் சேர்ந்த முதலாம் வருட மாணவியிடம் பல்கலைக்கழக விரிவுரையாளர் பாலியல் லஞ்சம் கோரியுள்ளார். இதில் பாதிக்கப்பட்ட மாணவி தனது பல்கலைக்கழக கற்கையை இடைநிறுத்தும் நோக்கோடு பல்கலைக்கழக விடுதியிலிருந்தும் வெளியேறியுள்ளதுடன், இது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகிகளுக்கும் அறியப்படுத்தியுள்ளார். குறித்த மாணவிக்கு இழைக்கப்பட்ட அநீதியை உறுதிப் படுத்தும்படியாக விரிவுரையாளர் மாணவியோடு பேசிய குரல் பதிவுகள் முக்கியமான ஆதாரங்களாகக் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறான பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பல்கலைக்கழகங்களில் தொடர்ந் தேர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக் கின்றபோதும் அவை வெளிவருவதென்பது அரிதாகவே உள்ளது. அவ்வாறு வெளிவருகின்ற போதும் போதிய ஆதாரங்கள் இன்மையின் காரணமாக உரிய முறையில் நீதியினைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. இதனால் பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்தும் தப்பித்துக் கொண்டே உள்ளதோடு அச்சமின்றியும் செயற்படுகின்றனர்.

குறித்த மாணவிக்கு நடந்த அநீதிக்கான உடனடித் தீர்வினை வழங்கவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம். இவ்வாறான பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவர் ஒன்றியமானது வன்மையாகக் கண்டிக்கின்றது.

SL Newspapers Viber Community

# கல்முனையில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு;

## சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் இறுக்கமாக பேணவேண்டும்



### கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி கோரிக்கை

(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நாளுக்கு நாள் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது. கடந்த டிசம்பர் மாதம் இறுதி வாரம்முதல் இதுவரை (ஜனவரி மாதம்) கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 27 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் மேலும் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் சுகாதார நடைமுறைகளை மிகவும் இறுக்கமாகப் பேணி நடந்து கொள்ள வேண்டுமெனவும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி தெற்கு சுகாதாரப் பிரிவில் வசிக்கும் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை மிகவும் கண்டிப்பான முறையில் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். நாளுக்கு நாள் தொற்றுக்குள்ளாவோர் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக, சமூக இடைவெளி, முகக்கவசம் என்பவற்றை முறையாக அணிந்துகொள்ள வேண்டும். இதன்மூலம் நாம் தொற்று நிலையினைக் கட்டுப்படுத்த முடியும். பொதுமக்கள் தங்களின் ஒத்துழைப்புகளை வழங்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

அத்துடன், தற்போது தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதுவரை தடுப்பூசி பெறாதவர்கள் மற்றும் முதலாவது, இரண்டாவது தடுப்பூசி பெற்றவர்களுக்கான மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணிகள் தடுப்பூசி நிலையங்கள் மற்றும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் இடம்பெற்று வருகின்றன.

பொதுமக்கள் தங்களின் நலன்கருதி தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தடுப்பூசியை பெற்றுக்கொண்டாலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டுமென கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி மேலும் தெரிவித்தார்.

# கிழக்கில் பட்டதாரி பயிலுனர் நியமனம் புதிய தேசிய பாடசாலைகளுக்கு அநீதி

## கிழக்கு கல்வி நிர்வாக அதிகாரிகள் சங்கம் கவலை

(சாய்ந்தமருது நிருபர்)

பட்டதாரி பயிலுனர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் விடயத்தில் புதிதாக தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய பயிலுனர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.முஹம்மது முக்தார் மேலும் தெரிவிக்கையில்;

கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி பயிலுனர்களில் பெரும்பாலானோர் அவரவர் கடமையாற்றும் பாடசாலைகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல் கிழக்கு மாகாணத்திலுள்ள தேசிய பாடசாலைகளில் பயிலுனர்களாக கடமையாற்றிய பட்டதாரி பயிலுனர்களில் பெரும்பாலானோர் அப்பாடசாலைகளிலேயே அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஆனால், ஆயிரம் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தும் வேலைத் திட்டத்தின்கீழ் அண்மையில் கிழக்கு மாகாணத்தில் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய பட்டதாரி பயிலுனர்கள் மட்டும் அங்கிருந்து அகற்றப்பட்டு, வேறு திணைக்களங்களுக்கு நிரந்தர நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இது இவர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் பெரும் அநீதியாகும்.

மாகாண பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்துவது தொடர்பான கல்வியமைச்சின் நிலையியல் கட்டளை 50இற்கு அமைவாக தேசிய பாடசாலையாக்கப்பட்டு மூன்று வருடங்களுக்குப் பின்னரே அவை முழுமையான தேசிய பாடசாலை வலையமைப்பிற்குள் கொண்டுவரப்படும் என அறிவித்துள்ளது. அதுவரை தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகள் அனைத்தும் மாகாண கல்வி திணைக்களத்தினாலேயே நிர்வாகம் செய்யப்படும்.

இதனடிப்படையில் கிழக்கில் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றி வந்த பட்டதாரி பயிலுனர்கள் அப்பாடசாலைகளிலேயே நிரந்தரமாக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் விரும்பினால் மாத்திரமே வேறு திணைக்களங்களுக்கு இணைக்கப்படல் வேண்டும். ஏனைய மாகாணங்களில் இந்நடைமுறை பின்பற்றப்பட்டுள்ள நிலையில், கிழக்கு மாகாணத்தில் மட்டும் இதற்கு மாற்றமான நடைமுறையை பின்பற்றப்பட்டிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 15 மாணவர்களுக்கு கொரோனா

(சியாத் எம். இஸ்மாயில்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடந்த இரு நாட்களில் 15 மாணவர்கள் கொரோனா தொற்று காரணமாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

காய்ச்சல், இருமல் காரணமாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு வருகை தந்தபோது மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையின் மூலம் தொற்று உறுதிசெய்யப்பட்டதாக வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம். ஹனிபா தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மீண்டும் கொரோனா தொற்று பரவி வருவதால், மீண்டும் கொத்தணிகள் உருவாகுவதற்கு வாய்ப்புள்ளதால் மக்கள் தடுப்பூசி ஏற்றிக்கொண்டாலும் தொடர்ந்து முகக்கவசம் அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல் போன்ற சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவது கட்டாயமாகும். இதன் காரணமாக கொரோனா தொற்று மேலும் பரவுவதைத் தடுக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று வைத்தியசாலையில் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்றுவரை 45 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுணதீவு வயல் பகுதியிலிருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு



(மட்டக்களப்பு நிருபர்)


மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாங்கேணிச்சேனை பிரதேசத்திலுள்ள வயல்வெளியிலிருந்து முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் (18) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நாவற்காடு, மாவடித்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 76 வயதுடைய தம்பியப்பா சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் பொன்னாங்கேணிச்சேனை பிரதேசத்தில் வாடியமைத்து அங்கிருந்து தனது வயல் மற்றும் மாடுகளை நீண்டகாலமாக பராமரித்து வருவதாகவும் இடையிடையே தனது வதிவிடத்திற்கு சென்று வருவதாகவும் சம்பவ தினத்தன்று உறவினர் ஒருவர் குறித்த பிரதேசத்திற்கு சென்றவேளை தனது வாடிக்கு அருகிலுள்ள வயல் பிரதேசத்தில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வானின் உத்தரவிற்கமைய சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றிணைந்த பிரவேசம்

## மட்டு. மாவட்ட ஊடகர்களுக்கு பயிற்சி





(மண்முனை நிருபர்)

'மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றிணைந்த பிரவேசம்' என்ற தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான செயலமர்வு நேற்று (19) மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ. (YMCA) கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் முன்னேற்றம் தொடர்பான பிரவேசம் பற்றி ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு பயிற்றுவிக்கும் நோக்குடன் இச்செயலமர்வு இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் ஊடக பயிற்றுவிப்பாளரும் ஊடகவியலாளருமான சீ.தொடாவத்த, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இணைப்பாளர் ஊடகவியலாளர் பிரதீபன், ஆய்வாளர் லஹிரு கித்தரகம உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் சுதந்திர ஊடக இயக்கம் போன்ற அமைப்புகள் இணைந்து மேற்படி செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தன.

இதில், மனித உரிமைகள் வளர்ச்சியும் தகவலுக்கான உரிமையும், மனித உரிமைகள் பற்றிய அறிக்கையிடலும் எதிர்நோக்கும் சவால்களும், மனித உரிமை மீறல் கண்காணிப்பு நடவடிக்கை போன்ற விடயங்கள் தொடர்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன், கையேடுகளும் வழங்கப்பட்டன.

# வியாபாரிகளுக்கு தரச்சான்றிதழ் பெறுவது குறித்து ஓட்டமாவடியில் விழிப்பூட்டும் வேலைத்திட்டம்





(மீராவோடை நிருபர்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஏற்பாட்டில் நாடுபூராகவும் வியாபாரிகளுக்கு எஸ்.எல்.எஸ். சான்றிதழ் பெற்றுக்கொள்வது தொடர்பாக விழிப்பூட்டும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தவகையில், ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களிலுள்ள 119 வியாபார நிலையங்களுக்கு இவ்விழிப்பூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் (18) இடம்பெற்றது.

நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் கிழக்கு மாகாண உதவி பணிப்பாளர் ஆர்.எல்.அன்வர் சதாத் தலைமையில், மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் இவ்விழிப்பூட்டல் நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, எவ்வாறான பொருட்களுக்கு இலங்கை தர நிர்ணய கட்டளை நிறுவனத்தினால் வழங்கப்படும் எஸ்.எல்.எஸ். சான்றிதழ்கள் பெறப்பட வேண்டும் என்பன பற்றி வியாபாரிகளுக்கு அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யுத்தத்தின் தாக்கங்கள் இலங்கையின் குரல்வளையை நெருக்குகிறது

## மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன்



(வீரமுனை நிருபர்)

யுத்தத்தில் வென்றுவிட்டோம் என்று சிங்கள ஆட்சியாளர்கள் மார்தட்டிக்கொண்டனர். தம்மைச் சரித்திர நாயகர்களாகவும் காட்டிக் கொண்டனர். இப்போது யுத்தத்தின் தாக்கங்கள் இலங்கையின் குரல்வளையை நெருக்க ஆரம்பித்துவிட்டன - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறீநேசன் தெரிவித்தார்.

வல்லரசுகளின் போட்டிக்களமாக - மோதல்களமாக இலங்கை மாறி வருவதனால் பாதிக்கப்படப்போவது நாடும் மக்களுந்தானே என வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இனப்பிரச்சினை, யுத்தம் என எதுவாக இருந்தாலும் சொந்தக்காலில் நின்று தீர்த்திருக்க வேண்டும். அதனை விடுத்து பிறநாடுகளின் அரசியல் பொறி, கடன் பொறி, இராஜதந்திரப் பொறி, பொருளாதாரப் பொறி போன்றவற்றில் விழுந்து எமது பிரச்சினைகளைத் தீர்க்க விளைந்ததனால் பிரச்சினை தீர்ந்ததுபோல் மாயை ஏற்பட்டாலும் முள்ளைப் பிடுங்கி ஆப்பை அடித்ததுபோல் பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுத்துள்ளன. அதாவது சீனாவின் கடன்பொறிக்குள் இலங்கை சிக்கிக்கொண்டதனால் மீளமுடியாத நிலையில் நாட்டின் இறைமை பலவீனப்படுத்தப்பட்டுள்ளது.

போர்ட் சிற்றி, அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்புத் துறைமுக முனையம் என்று தென்னிலங்கையில் வலுவாகக் காலூன்றிய சீனா தற்போது வடஇலங்கை நோக்கி அதாவது இந்தியாவுக்கு மிக அண்மையாக நகர்ந்துகொண்டிருக்கிறது. மன்னார் தாழ்வாடி இராணுவ முகாம், பருத்தித்துறை, இராமர் அணை என்ற வகையில் இந்தியாவுக்கு அண்மையில் வியூகம் அமைப்பதற்கான நடவடிக்கை மிக கச்சிதமாக நடைபெறுகின்றது.

இதற்காக வட பகுதித் தமிழ் மக்களை அணைப்பதற்காக உளவியல், பொருளாதார நடவடிக்கைகளும் நகர்கின்றன. நூலக உதவி, மீனவர் நிவாரணம், ஆலய தரிசிப்பு என்று மக்கள் மனங்களைக் கவர்வதற்கான நடவடிக்கைகள் நடக்கின்றன.

இலங்கையில் புலிகளை அழிப்பதற்கும் யுத்தத்தை வெல்வதற்கும் தாமேதான் உதவியதாக சீனா வெளிப்படையாகக் கூறிவிட்டது. அதாவது, தாம் இல்லாதுவிட்டால் இலங்கை ஆட்சியாளர்களால் போரை வென்றிருக்க முடியாது என்பதை சீனத் தூதுவர் வெளிப்படையாகக் கூறியுள்ளார். அதேவேளை, பல்வேறு உதவிகளைச் செய்வதுபோல் பாவனைசெய்து இலங்கையை சீனப் பொறியிலும் வலையிலும் வீழ்த்தியுள்ள அதேவேளை, கொழும்புத் துறைமுக மேற்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்காமலும் சீனா மறைமுகமாகத் தடுத்துள்ளது.

அதேவேளை, சீன வல்லரசிலிருந்து இந்தியாவின் ஜனநாயகத்தினையும் நாட்டையும் பாதுகாக்கவேண்டிய கடப்பாடு குவாட் அமைப்பு நாடுகளுக்கு இருப்பதனால் அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா என்பன இந்தியாவுடன் இணைந்து கூட்டு வியூகத்தினை அமைக்கவேண்டியுள்ளது. அதனால் அமெரிக்கா செவ்வெப்பிட்டி யுகதனவி மின்திட்டத்திற்கு 40 வீதப் பங்குகளை எடுத்துள்ளது.

ஜப்பான் தொலைக்காட்சி நிகழ்வுகளை எண்ணியப்படுத்தல் (டிஜிட்டல் மயமாக்கம்) என்னும் திட்டத்தினுள் இறங்கவுள்ளது. அவுஸ்ரேலியாவும் இலங்கைக்குள் காலடி வைக்கும் நிலையும் உள்ளது.

இலங்கை என்னும் மரத்தில் கட்டப்பட்ட குளவிக்கூட்டினை கலைப்பது எப்படி என்ற நிலையில் குவாட் அமைப்பு நாடுகள் உதவிகள், ஒத்துழைப்புகள், அபிவிருத்திகள் என்ற ரீதியில் வியூகங்களை அமைத்துள்ளன.

உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நாட்டுப் பிரச்சினைகளை தீர்க்காமல் அயல்நாடுகளிடம் கொண்டுசென்றதன் விளைவே இன்றைய நிலையாகும். யுத்தத்தில் வெல்வதற்காக அயல்நாடுகளிடம் உதவிகள், கடன்களை அபரிமிதமாகப் பெற்றதன் விளைவே இலங்கை கடன்பொறிக்குள் சிக்கும் நிலைக்கு காரணமாகியுள்ளது.

இந்த ஆண்டில் 7.3 பில்லியன் டொலர்களை இலங்கை கடனாக வெளிநாடுகளுக்கு செலுத்தவேண்டியுள்ளது. அதாவது 1,46,000 கோடி ரூபாவை செலுத்தவேண்டியுள்ளது. ரூபாவாக வழங்குவதென்றால் இலங்கையில் வரையறைகளை மீறி அச்சடித்தாவது கொடுத்துவிடுவார்கள். என்ன செய்வது டொலரில் கொடுக்க வேண்டும். டொலரை அச்சடிக்க முடியாது. அது ஒருபுறம் இருக்க, பொதுவுடைமை சித்தாந்த நாடான சீனாவையும் ஜனநாயக நாடுகளான அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற கூட்டு நாடுகளையும் எப்படித்தான் இந்த ஆட்சியாளர்கள் கையாளப் போகின்றார்கள் என்று தெரியவில்லை.

இருதலைக்கொள்ளி எறும்புபோல் இலங்கையின் நிலை மாறியுள்ளது. மோதல் களம், சாதல் களமான நாடு மீண்டும் சர்வதேச மோதல் களமாக மாறாமல் இருக்க வேண்டும் என்பதே அப்பாவி மக்களின் பிரார்த்தனையாகும் - என்றார்.

LK Newspapers Viber Community

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மை அறுவடைப் பணிகள் ஆரம்பம்



அம்பாறை மாவட்டத்தில் பெரும் போக வேளாண்மை அறுவடைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, நிந்தவூர், அம்பாறை, இறக்காமம், நற்பிட்டிமுனை, மத்திய முகாம் ஆகிய இடங்களில் பயிரிடப்பட்ட வேளாண்மை விவசாயிகளினால் நெல் அறுவடை இயந்திரங்கள் மூலமாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், விளைச்சல் கடந்த போகங்களை விட குறைவடைந்தபோதிலும் நெல்லுக்கான கேள்வி அதி உச்சத்தில் காணப்படுகின்றது.

அறுவடை செய்யப்படும் நெல்லினை கொள்வனவு செய்வதில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளர்களைவிட வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகளும், அரிசி ஆலை உரிமையாளர்களுமே அதிகளவில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்துவருகின்றனர்.

இப் பெரும்போக வேளாண்மைச் செய்கை இரசாயன உரமின்றி சேதனப் பசளையினை பிரயோகித்து செய்கை பண்ணப்பட்டதனால் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியான மழை பெய்ததன் காரணமாக அறுவடை இயந்திரங்கள் வயல் நிலங்களில் மழைநீர் தேங்கி நிற்பதனால் நெல் அறுவடையில் ஈடுபடுவது சிரமமாக உள்ளது.

ஏனைய போகங்களைவிட இப் பெரும்போகத்தில் விளைச்சல் குறைவ டைந்துள்ளதால் பாரிய நட்டத்தினை எதிர்நோக்கியுள்ளதாகவும் அடுத்த சிறுபோகத்தில் மீண்டும் எவ்வாறு நெற்செய்கையில் ஈடுபடுவதென்பது பற்றி பிரதேச விவசாயிகள் பெரும் கவலையினை தெரிவித்தனர்.

# முச்சக்கரவண்டி விபத்தில் இருவர் படுகாயம்





(பதுர்தீன் சியானா)

திருகோணமலை - ஹொரவப்பொத்தானை பிரதான வீதி பம்மதவாச்சி பகுதியில் முச்சக்கரவண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் (18) மாலை 5.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கோமரங்கடவல பகுதியிலிருந்து திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு நோயாளர் ஒருவரை பார்வையிடச் சென்றபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் கோமரங்கடவல - மதவாச்சி பகுதியைச் சேர்ந்த 56 மற்றும் 52 வயதுடைய இருவர் படுகாயமடைந்துள்ள நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளான காட்டுப்பகுதியில் இருப்பதுடன், விபத்து தொடர்பில் மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் 49ஆவது பொதுக் கூட்டம் கல்முனையில்!



(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் 2022ஆம் ஆண்டுக்கான (49ஆவது) வருடாந்த பொதுக் கூட்டமும், நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை கூட்ட மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (23) காலை 10.00 மணியளவில் கல்முனை மாநகர சபையின் உறுப்பினரும், சங்கத்தின் பொதுச் செயலாளருமான எம்.ஐ.எம். அப்துல் மனாப்பின் நெறிப்படுத்தலில் முன்னாள் கல்முனை மாநகர சபையின் உறுப்பினரும் சங்கத்தின் தலைவருமான வை.கே.றஹ்மான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள், சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களின் தலைவர், செயலாளர் மற்றும் அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட நடுவர் சங்கத்தின் தலைவர், செயலாளர் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் கொவிட்-19 காரணமாக தடைப்பட்டிருந்த விளையாட்டு மற்றும் சுற்றுப் போட்டி தொடர்களை ஆரம்பிப்பது தொடர்பாகவும், சங்கத்தின் யாப்பில் ஏதாவது மாற்றங்கள் செய்யவேண்டுமாயின் அதனை மிக விரைவில் சீர்செய்வது எனவும், மைதானங்களில் ஏதாவது குறைகள் இருந்தால் அதையும் மிக விரைவில் சீர்செய்து தருவதாகவும் மற்றும் இரண்டாம் நிலையிலுள்ள கழகங்களை முதலாம் நிலைக்கு கொண்டுசெல்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது தொடர்பாக பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாகவும், வாக்கெடுப்பின்றி ஏனைய பதவிகளுக்கானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில் பொருளாளர் மற்றும் உப தலைவர் பதவிகளுக்கான வாக்கெடுப்புக்கும் அன்றையதினம் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.ஐ.எம்.அப்துல் மனாப் தெரிவித்தார்.

# மாவடி பேர்ல்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் மாணவர்கள் கௌரவிப்பு




(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேச மாவடிப்பள்ளி மாவடி பேர்ல்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தை முன்னிட்டு அக்கழகத்தினால் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சைக்கான முன்னோடி பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவ மாணவிகளை நினைவுச்சின்னம், சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கி பாராட்டும் நிகழ்வு ஒலுவில் பரன்தோட்ட வளாகத்தில் கழகத்தின் தலைவர் அஷ்ரப் பாவாஹி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்களான எம்.ஜலீல், எம்.என்.எம்.றணீஸ் மற்றும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் பிரத்தியேகச் செயலாளர் நௌபர் ஏ பாவா மற்றும் மாவடிப்பள்ளி அல்-அஷ்ரப் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் ஏ.எல்.எம்.றஜாப்டீன் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களான யாக்கூப் எஸ்.ஹசன், வை.ஏ.மனாப் மற்றும் ஆசிரியர் ஏ.எல்.எம்.பஸ்மீன் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பொலிவேரியன் குடியேற்ற கிராமத்தில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் பொது விளையாட்டு மைதானம்



சாய்ந்தமருது பொலிவேரியன் குடியேற்ற கிராமத்தில் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானம் விளையாட்டு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் செப்பனிடப்பட்டு வருகின்றது.

சாய்ந்தமருது கிரிக்கெட் சங்கத்தின் மேற்பார்வையில் இடம்பெற்றுவரும் இம்மைதான அபிவிருத்திப் பணியின் முதற்கட்டமாக பள்ளமான இடங்களுக்கு மண் இட்டு நிரப்பும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சாய்ந்தமருது பிரதான வீதியில் அமையப்பெற்றிருந்த தாமரை விளையாட்டு மைதானம் சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்திற்கும், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கும் வழங்கப்பட்டதனால் இம் மைதானம் சாய்ந்தமருது பொலிவேரியன் குடியேற்ற கிராமப் பகுதிக்கு மாற்றப்பட்டது.

இம்மைதானம் மழை காலங்களில் நீர் நிறைந்து காணப்படுவதால் பிரதேச விளையாட்டு வீரர்களினால் பயிற்சியில் ஈடுபடவோ, போட்டி நிகழ்ச்சிகளை நடத்தவோ முடியாத நிலையொன்று தோன்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாயில் நான்காவது எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம்

(கந்தளாய் நிருபர்)


திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நான்காவது எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் ஒன்று கந்தளாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று (19) இடம்பெற்றுள்ளது.

கந்தளாய், இரண்டாம் கொலனி பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தில் எந்தவிதமான உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லையெனவும் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

கந்தளாய் பிரதேசத்தில் ஏற்கனவே மூன்று இடங்களில் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்



# அக்கரைப்பற்றில் பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி



(அட்டாளைச்சேனை)

அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக, அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை அதிபர் ஏ.பி.முஜீனின் வழிப்படுத்தலின்கீழ் நேற்று (19) இடம்பெற்றது.

அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளில் அமைக்கப்பட்ட விசேட மத்திய நிலையங்களில் இவ்வாறு கொவிட் தடுப்பூசிகள் மாணவர்களுக்காக வழங்கப்பட்டு வருகின்றன. பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அப்துல் காதரின் வழிகாட்டலின்கீழ் இத்தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 15 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட களுவாஞ்சிக்குடி பாலம் மக்கள் பாவனைக்கு

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனால் திறந்துவைப்பு



மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மிகவும் பாதிப்புற்ற நிலையில் காணப்பட்ட கொக்கட்டிச்சோலையிலிருந்து களுவாஞ்சிக்குடி செல்லும் பிரதான வீதியில் காணப்பட்ட பாலம் கடந்த காலங்களில் சீரற்ற காலநிலைகளால் அவ்வப்போது ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டு உடைந்து காணப்பட்டது.

குறித்த பாலத்தை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைத்து மக்களின் பாவனைக்கு கையளித்தார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின்பால் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின்கீழ் எமது நாட்டின் ஒன்பது மாகாணங்களுக்கும் சரிசமமாக நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு, பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் பாரியளவில் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இதில் கிராமங்களின் உள்ளக வீதிகள், பிரதான வீதிகள், பாலங்கள், நீர்த்தேக்கங்கள், நீர் வழங்கும் வடிகால் திட்டங்கள், கிராமங்களைச் சார்ந்த நகர கடைத் தொகுதிகள் அபிவிருத்தி என்பன பாரிய அளவில் அனைத்து சமூகத்தினரும் பயன்பெறும் வகையில் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. இவ்வனைத்து வேலைத்திட்டங்களும் கிராமங்களை அபிவிருத்தி செய்வதையே இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசத்தைச் சார்ந்த கிராமங்களில் விவசாயம், நன்னீர் மீன்பிடி, மேட்டுநில பயிர்ச்செய்கை, கால்நடைகள் வளர்ப்பு உற்பத்தி பொருளாதார



மையமாக இந்த படுவான்கரைப் பிரதேசம் காணப்படுகின்றது. இந்த உற்பத்தித் துறையை மேலும் பலப்படுத்துவதற்கு பிரதேசங்களுக்கான வீதிகள் அபிவிருத்தி செய்வது மிக முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது. பாலங்கள், நீர்த்தேக்கங்கள் என்பன அபிவிருத்தி மற்றும் நீர்த்தேக்கங்களின் ஒருங்கிணைப்பு என்பன அவசியமான ஒன்றாகும். இவ்வாறு அபிவிருத்தி செய்யும்போது கிராமங்கள் பொருளாதார ரீதியாக தன்னிறைவு பெறும் கிராமங்களை அபிவிருத்தி செய்வதையே இலக்காகக்கொண்டு பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன - என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

LK Newspapers Viber community

# இந்திய செய்திகள்

# மோடி உயிருக்கு ஆபத்து? உளவுத்துறை எச்சரிக்கை



இந்திய குடியரசு தின விழாவைக் கொண்டாட நாடு தயாராகிவரும் நிலையில், பாகிஸ்தான் மற்றும் காலிஸ்தான் பயங்கரவாதிகளால் பிரதமர் நரேந்திர மோடியின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதையடுத்து டில்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் 73ஆவது குடியரசு தின விழா எதிர்வரும் 26ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக டில்லியில் நடக்கும் விழாவில் வெளிநாட்டுத் தூதர்கள், சிறப்பு விருந்தினர்கள் என குறைந்தளவிலான பார்வையாளர்கள் மட்டுமே பங்கேற்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கப்பட்டுள்ள ராஜபாதையில் நடக்கும் முதல் குடியரசு தின விழாவாக இது அமையவுள்ளது. முப்படைகளின் வலிமை, நாட்டின் பாரம்பரியம், கலாசாரத்தை உலகுக்கு உணர்த்தும் வகையில் அணிவகுப்பு நடக்கவுள்ளது. கொரோனா பரவலால் கடந்தாண்டை போலவே சிறப்பு விருந்தினராக வெளிநாட்டுத் தலைவர்கள் எவரும் இந்த முறையும் கலந்துகொள்ளவில்லை.

அதனால் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தேசியக் கொடியை ஏற்றி அணிவகுப்பு மரியாதை ஏற்கவுள்ளார். பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளனர். இதற்காக டில்லியில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. டில்லி பொலிஸாருடன் துணை இராணுவப் படையினர், இராணுவத்தினர் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், குடியரசு தின விழாவின்போது தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளதாகவும், பிரதமர் மோடியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் உளவுத்துறை எச்சரித்துள்ளது. இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சுக்கு ஒன்பது பக்க அறிக்கையை உளவுத்துறை அனுப்பிவைத்துள்ளது.

### அச்சுறுத்தல்

அதில் பிரதமர் மோடி மற்றும் குடியரசு தின விழாவில் பங்கேற்கும் முக்கிய பிரமுகர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அண்டைநாடான பாகிஸ்தான் அல்லது ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாத அமைப்புகள் இந்த சதியில் ஈடுபட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது. மேலும், பல முக்கிய நகரங்களில் மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் தாக்குதல் நடத்தப்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது, ஹர்கத்-உல்-முஜாகிதீன், ஹிஸ்புல் முஜாகிதீன் போன்ற அமைப்புகள் இதன் பின்னணியில் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுள்ளது.

பிரதமர் மோடி சமீபத்தில் பஞ்சாப் மாநிலத்துக்கு சென்றபோது பாதுகாப்பில் குளறுபடி ஏற்பட்டது. பிரதமர் செல்லவேண்டிய வீதியில் திடீரென சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் பிரதமர் மோடி பாதி வழியிலேயே திரும்பினார். இந்தச் சம்பவத்துக்கு பிரிட்டனைச் சேர்ந்த சீக்கியருக்கு நீதி என்ற காலிஸ்தான் பயங்கரவாத ஆதரவு அமைப்பு பொறுப்பேற்றது.

தற்போது உத்தரப்பிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல் நடக்கவுள்ளது. அதனால் குடியரசு தினம் மற்றும் சட்டசபை தேர்தல்களை சீர்குலைக்கும் வகையில், காலிஸ்தான் ஆதரவு அமைப்புகள் தாக்குதல் நடத்தலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்புகளுக்கு பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ., ஆதரவளித்து வருவதாகவும் உளவுத்துறை தெரிவித்துள்ளது. பிரதமரின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக உளவுத்துறை எச்சரித்துள்ளதால், டில்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அனைத்து மாநிலங்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### புதிய அதிரடிப் படை அமைப்பு

டில்லியில் பயங்கரவாதிகள் தாக்குதல் அல்லது தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தினால் உடனடியாக களமிறங்கும் வகையில் 50 வீரர்கள் அடங்கிய க்யூ.ஏ.டி., எனப்படும் உடனடி நடவடிக்கை குழு எனப்படும் அதிரடிப் படை அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது ஜம்மு - காஷ்மீர் மற்றும் நக்சலைட் பிரச்சினைகள் உள்ள சத்தீஸ்கரில் சி.ஆர்.பி.எவ். எனப்படும் மத்திய ரிசர்வ் பொலிஸ் படை சார்பில் அதிரடிப் படை அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பு பயிற்சி பெற்ற கொமாண்டோக்கள் அடங்கியது இந்தக் குழு.

இந்நிலையில், தலைநகர் டில்லியின் பாதுகாப்புக்காக தனி அதிரடிப் படைக் குழுவை சி.ஆர்.பி.எவ்., அமைத்துள்ளது. சிறப்பான பயிற்சிபெற்ற 50 இளம் வீரர்கள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். இவர்களுக்கு அதிநவீன ஆயுதங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. பயங்கரவாத சம்பவம் நடந்தால் அடுத்த சில நிமிடங்களில் களமிறங்கும் வகையில் இந்தக் குழு எப்போதும் தயார் நிலையில் இருக்கும் என மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குடியரசு தினத்தையொட்டி டில்லியின் பாதுகாப்புப் பணியில் இந்தக் குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### ட்ரோன்களுக்குத் தடை

குடியரசு தின விழா பாதுகாப்பு ஏற்பாடு குறித்து டில்லி பொலிஸ் ஆணையாளர் ராகேஷ் அஸ்தானா வெளியிட்டுள்ள அறிக்கையில்:

குடியரசு தின விழாவில் பொதுமக்கள், விருந்தினர்கள் மற்றும் முக்கிய கட்டடங்களுக்கு பயங்கரவாதிகளால் அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புள்ளதாக உளவுத்துறை அறிக்கை தெரிவிக்கிறது.

எனவே இன்றுமுதல் அடுத்த மாதம் 15ஆம் திகதிவரை டில்லியில் பாரா கிளைடர்கள், ட்ரோன் எனப்படும் ஆளில்லா குட்டி விமானங்கள், இராட்சத பலூன்கள் உள்ளிட்ட அனைத்து விதமான சிறிய ரக பறக்கும் சாதனங்களுக்கும் தடை விதிக்கப்படுகிறது.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சபரிமலையில் இன்று நடையடைப்பு



மகரவிளக்கு கால பூஜைகள் முடிந்து சபரிமலை ஐயப்பன் ஆலய நடை இன்று சாத்தப்படுகிறது.

சபரிமலையில் டிசம்பர் 30ஆம் திகதி தொடங்கிய மகரஜோதி கால பூஜைகள் இன்றுடன் நிறைவுபெறுகின்றன. ஜனவரி 14ஆம் திகதி பொன்னம்பலமேட்டில் மகரஜோதி தரிசனம் நடைபெற்றது. அதன் பின்னர் மாளிகைப்புறத்தம்மன் கோயிலிலிருந்து தினமும் இரவு 9.00 மணிக்கு 18ஆம் படிக்கு முன் சுவாமி எழுந்தருளினார்.

இந்நிலையில், சரங்குத்திக்கு எழுந்தருளும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனையடுத்து நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியுடன் நெய்யபிஷேகம் நிறைவு பெற்றது. நேற்று காலை முதல் வழக்கம்போல் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டாலும் நெய் அபிஷேகம் நடைபெறவில்லை. இரவு 9.00 மணிக்கு மாளிகைப்புறத்தம்மன் கோயிலில் குருதி பூஜை நடைபெற்றது. இதன் பின்னர் நடை சாத்தப்பட்டது..

இந்நிலையில், இன்று காலை 5.00 மணிக்கு நடை திறக்கப்பட்டு பந்தளம் மன்னர் பிரதிநிதி சங்கர்வர்மா, சன்னதி முன்பு வந்து தரிசனம் நடத்தினார். அவருக்கு பிரசாதம் கொடுத்த பின்னர் மேல்சாந்தி பரமேஸ்வரம் நம்பூதிரி நடை சாத்தி அவருடன் 18ஆம் படிக்கு கீழே வருவார். கோயில் சாவி மற்றும் இந்த ஆண்டுக்கான வருமானம் என்று கூறி பண முடிப்பையும் ஒப்படைப்பார். அதை பெற்றுக்கொண்ட மன்னர் பிரதிநிதி மீண்டும் அதை மேல்சாந்தியிடம் கொடுத்துவரும் நாட்களிலும் பூஜைகள் தவறாமல் நடத்தவேண்டும் என்று கூறி திருவாபரணங்களுடன் பந்தளம் புறப்படுவார். இந்த நிகழ்வுடன் இந்த ஆண்டுக்கான மகரஜோதி பூஜைகள் நிறைவு பெறுகின்றன.

# விண்வெளியில் ராஜாவின் இசை

தனது இசையின் மூலம் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் சினிமாவில் கோலோச்சிவருபவர் இளையராஜா. புத்தாண்டு என்றாலும் இளையாராஜா பாடல், பொங்கல் என்றால் இளையராஜா பாடல் என நம் வாழ்வுடன் கலந்துவிட்டது அவரது இசை.

அவருக்குப் பிறகு தமிழ் சினிமாவில் எத்தனையோ இசையமைப்பாளர்கள் வந்துவிட்டார்கள். இருப்பினும் அவர்களுக்கு எந்தவிதத்திலும் சளைக்காமல் இரசிகர்களுக்கு தற்போதுவரை இசை விருந்து படைத்து வருகிறார். தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குநரான வெற்றிமாறன் இயக்கிவரும் 'விடுதலை' படத்துக்கு அவர்தான் இசை.

இப்படி நம் தாத்தா, அப்பா தொடங்கி நம் காலத்திலும் இசையால் நம்மை ஆட்கொண்டு வருகிறார். இந்நிலையில், இளையராஜாவின் பாடல் இனி விண்வெளியிலும் கேட்கவிருக்கிறது. இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இஸ்ரோ உதவியுடன் மாணவர்கள் குழு வடிவமைத்துள்ள எடை குறைவான செய்மதியொன்று (சொட்லைட்) விண்ணில் செலுத்தப்படவுள்ளது.



இதில் இளையராஜா இசையில் அமைந்துள்ள ஹிந்தி பாடலும் இடம்பெறவுள்ளது. இந்தியாவில் 75 ஆண்டுகளில் நிகழ்ந்த புதுமைகளை உள்ளடக்கிய பாடலாக இது இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

# உத்தரப்பிரதேசம் உட்பட ஐந்து மாநில சட்டசபைத் தேர்தல்: சமூக ஊடகங்களில் பிரசாரம்; சூடுபிடிக்கும் தேர்தல் களம்

தேர்தல் பிரசாரக் கூட்டங்கள், பேரணிகள் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், ஐந்து மாநிலங்களில் சமூக ஊடகங்கள் வாயிலாக கட்சிகள் தீவிர பிரசாரத்தில் இறங்கியுள்ளன.

உத்தரப்பிரதேசம் உட்பட ஐந்து மாநில சட்டசபைகளுக்கு பெப்ரவரி 10ஆம் திகதி தொடங்கி மார்ச் 7ஆம் திகதிவரை தேர்தல் நடைபெறவுள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தேர்தல் பிரசாரக் கூட்டங்கள், பேரணிகள், தெருமுனை கூட்டங்களுக்கு தேர்தல் ஆணைக்குழு தடை விதித்துள்ளது.

இந்நிலையில், சமூக ஊடகங்கள் வாயிலாக அரசியல் கட்சிகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. இதற்காக மக்களை கவரும் வகையிலும், எதிர்க்கட்சிகளை கிண்டல் செய்யும் வகையிலும் கட்சிகள் புதிய புதிய கோஷங்களை உருவாக்கியுள்ளன. சில கட்சிகள் வீடியோக்கள் வெளியிட்டு வருகின்றன. இதனால்



ஐந்து மாநிலங்களிலும் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

## நேர்த்திக்கடன் நிகழ்வில் விபரீதம்:

# ஆட்டுக்கு பதில் வெட்டப்பட்டது ஆட்டைப் பிடித்தவரின் தலை



ஆந்திராவில் கோவிலுக்கு நேர்த்திக்கடன் செலுத்த பலி கொடுக்கும்போது எதிர்பாராதவிதமாக ஆட்டுக்குப் பதிலாக அதை பிடித்திருந்தவரின் தலை வெட்டப்பட்டது.

ஆந்திராவில் சித்தூர் மாவட்டம் வலசப்பள்ளி கிராமத்தில் மகர சங்கராந்தி விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஏராளமானோர் எல்லம்மா கோவிலுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினர். இதற்காக நேர்த்திக்கடன் வைத்திருந்த ஆடு மற்றும் கோழிகளை கோவில் வளாகத்தில் பலி கொடுக்கும் நிகழ்ச்சி மாலையில் இடம்பெற்றது.

சலபதி என்பவர் ஆடுகளை ஒவ்வொன்றாக வெட்டத் தொடங்கினார். அப்போது அவர் அளவுக்கு அதிகமாக மது அருந்தியிருந்தார். நேர்த்திக்கடன் செலுத்தும் ஒவ்வொருவரும் வரிசையாக தங்கள் ஆடுகளை அழைத்து வந்தனர். சலபதி அவற்றின் தலையை வெட்டித் தள்ளினார். நள்ளிரவிலும் இந்த நிகழ்வு தொடர்ந்தது.

அப்போது பலி ஆட்டை பிடித்திருந்த சுரேஷ் (வயது 35) என்பவரது தலையை ஆடு என தவறாக நினைத்து சலபதி ஓங்கி வெட்டினார். தலை துண்டிக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் சுரேஷ் உயிரிழந்தார். இச்சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# தொலைத்த இடத்தில் வாழ்க்கையை தேடு; நடிகர் தனுஷுக்கு எஸ்.ஏ.சி. அட்வைஸ்



நடிகர் தனுஷ் - ஐஸ்வர்யா விவாகரத்து செய்தி கனவாக இருக்கக்கூடாதா என்று ஆதங்கம் தெரிவித்துள்ள இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகர், தொலைத்த இடத்தில் வாழ்க்கையை தேடுமாறு நடிகர் தனுஷுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

நடிகர் தனுஷ் - ஐஸ்வர்யா தம்பதியர் 18 ஆண்டுகள் திருமண வாழ்க்கையை முறித்துக்கொண்டு தனிமனித சுதந்திரத்துடன் நிம்மதியை தேடுவதாக அறிவித்திருந்த நிலையில், நடிகர் விஜய்யின் தந்தையும், இயக்குநருமான எஸ்.ஏ.சந்திரசேகர் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் ''இந்தச் செய்தி கனவாகவோ, பொய்யாகவோ இருக்கக்கூடாதா'' என்று ஆதங்கப்பட்டுள்ளார்

''வாழ்க்கையென்றால் ஆயிரம் இருக்கும்... வீடுதோறும் வேதனை இருக்கும்... உனக்கும் கீழே உள்ளவர் கோடி... நினைத்துப் பார்த்து நிம்மதி தேடு...'' என்று கண்ணதாசனின் பாடல் வரியை நடிகர் தனுஷுக்கு சுட்டிக்காட்டியுள்ளார் எஸ்.ஏ.சி.

''தி.நகர்ல பர்ச தொலைச்சிட்டு திருவல்லிக்கேணியில் தேடக்கூடாது; வாழ்க்கையை தொலைத்த இடத்தில்தான் தேட வேண்டும்'' என்று தனுஷின் நடவடிக்கையை மறைமுகமாக சாடியுள்ள எஸ்.ஏ.சந்திரசேகர், இது அட்வைஸ் அல்ல, ரசிகனின் குரல் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், விவாகரத்து குறித்து நடிகை கஸ்தூரி, ''விவாகரத்து முடிவு பெற்றோருக்கு எவ்வளவு சரியானதாக இருந்தாலும் குழந்தைகளுக்கு அது எப்போதும் தவறாகும். குழந்தைகளின் நலனுக்காக ஒன்றாக இருக்கவேண்டும். குடும்பத்திற்கே முதலிடம் தர வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

மேலும் நடிகை ஆர்த்தி, ''18 ஆண்டுகால அன்பான வாழ்க்கை வீணாகக்கூடாது. எல்லா கருத்து வேறுபாடுகளும் விவாகரத்தில்தான் முடியும் என்பது உண்மை அல்ல. இந்த சின்ன பிரிவும், உங்களை நீங்கள் ஆராய்ந்து, விட்டுக் கொடுத்து, உங்கள் குழந்தைகளுக்காக இருவரது பாதையும் வெவ்வேறாக ஆகாமல் ஒன்றாகும் என்று நம்புகிறேன். இறைவனை வேண்டுகிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

# மீண்டும் இந்தியாவை மிரட்டும் கொரோனா

## ஒரேநாளில் 2.82 இலட்சம் பேருக்கு தொற்று



இந்தியாவில் மீண்டும் கொரோனா தொற்று பரவல் வேகம் அதிகரித்துள்ளது. அந்தவகையில் ஓரேநாளில் 2.82 இலட்சம் பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் நேற்று ஓரேநாளில் 2,82,970 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன் 441 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியா முழுவதும் இதுவரை கொரோனாவால் 3,79,01,241 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 4,87,226 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், கொரோனாவால் பாதிக்கப்பட்ட 1,830,976 பேர் இந்தியா முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன் அவர்களில் 8,944 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தியாவில் இதுவரை 8,961 பேருக்கு ஓமிக்ரொன் தொற்று பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# உலக செய்திகள்

# கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்த கண்மூடித்தனமான கட்டுப்பாடுகளை அரசுகள் விதிக்கக்கூடாது

## உலக சுகாதார அமைப்பு அதிகாரி

"கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக மக்களின் போக்குவரத்துக்குத் தடை விதிப்பது உள்ளிட்ட கண்மூடித்தனமான கட்டுப்பாடுகளை அரசுகள் விதிக்கக் கூடாது." - இவ்வாறு உலக சுகாதார அமைப்பின் அதிகாரி ரோட்ரிகோ ஆப்ரின் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அவர், "கொரோனா தொற்று பரவல் காலத்தில் மக்களின் உயிரையும் வாழ்வாதாரத்தையும் காக்கவேண்டிய பொறுப்பு அரசுக்குள்ளது.

மக்களின் போக்குவரத்துக்கும் வாகனப் போக்குவரத்துக்கும் கண்மூடித்தனமாகக் கட்டுப்பாடுகள் விதிக்க உலக சுகாதார அமைப்பு பரிந்துரைக்கவில்லை. பெரும்பாலான சமயங்களில் அத்தகைய கட்டுப்பாடுகள் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்" - என தெரிவித்துள்ளார்.



## கின்னஸில் இடம்பிடித்த உலகின் மிக வயதான நபர் காலமானார்



உலகின் மிக வயதான நபர் என கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த முதியவர் காலமானார்.

அவருக்கு வயது வயது 112. 1909ஆம் ஆண்டு ஸ்பெயினில் பிறந்த சட்டுர்னினோ டி லா ஃபுயன்டே அப்போது 5 கோடி பேர் உயிரிழக்கக் காரணமான ஸ்பானிஷ் காய்ச்சல் என்ற பெருந்தொற்றிலிருந்து தப்பிப் பிழைத்துள்ளார்.

13 வயதுமுதல் காலணி தொழிற்சாலையில் பணியாற்றி வந்த ஃபுயன்டேவுக்கு 8 குழந்தைகள், 14 பேரக்குழந்தைகள் மற்றும் 22 கொள்ளுப் பேரப்பிள்ளைகள் உள்ளனர். கடந்த செப்டெம்பர் மாதம் உலகில் வாழும் வயதான நபர் என கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த ஃபுயன்டே தன் வீட்டிலேயே காலமானார்.

# கனடாவில் கடும் பனிப்புயல்: மக்களின் இயல்பு வாழ்க்கை முடக்கம்







கனடாவில் வீசிய கடும் பனிப்புயல் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை அடியோடு முடங்கியுள்ளது.

டொரோன்டோவில் வீசிய பனிப்புயலால் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. வீதிகள் முழுவதும் பனி கொட்டிக் கிடந்ததால் வாகனங்களை இயக்க முடியவில்லை. விமானப் போக்குவரத்தும் இரத்துச் செய்யப்பட்டது. திடீரென உருவான பனிப்புயலால் வழக்கத்தைவிட அதிகளவு பனி கொட்டியதாக டொரோன்டோ மேயர் தெரிவித்தார்.

வானிலை சற்று சீரானதையடுத்து வீதிகளில் கொட்டிக் கிடந்த பனிக்குவியல்கள் அகற்றப்பட்டன. அருவி ஒன்றும் பனிக்கட்டியாகி உருமாறி காணப்பட்டது.

## தலிபான் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை: துருக்கி சென்றார் பாக். உளவுத்துறை அதிகாரி



ஆப்கானிஸ்தானின் தலிபான் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் உளவுத்துறை அதிகாரியொருவர் துருக்கிக்குச் சென்றுள்ளார்.

ஆப்கானில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் தலிபான் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர், அங்குள்ள அரசியலை வடிவமைப்பதில் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. அமைப்புக்கு முக்கிய பங்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனை நிரூபிக்கும் வகையில் கடந்த டிசம்பர் மாதம் துருக்கி சென்ற சயீஃப் என்ற ஐ.எஸ்.ஐ. அதிகாரி பல ஆப்கான் தலைவர்களை நேரடியாக சந்தித்துப் பேசினார். இதில் இந்தியாவுக்கு ஆதரவான தலைவர்களும் தலிபானை எதிர்க்கும் தலைவர்களும் அதிகளவில் இடம்பெற்றனர்.

அவர்களுக்கு தலிபான் தலைவர்களுடன் சமரசம் செய்துவைக்க பாகிஸ்தான் முயற்சித்து வருகிறது. ஆப்கான் விவகாரத்தில் இந்தியாவை தலையிடாமல் தடுப்பதற்கான முயற்சிகளை பாகிஸ்தான் மேற்கொண்டு வருகிறது.

## லண்டனிலுள்ள மல்லையாவின் பங்களாவை கைப்பற்ற பிரிட்டன் நீதிமன்றம் உத்தரவு



கடன் பாக்கிக்காக லண்டனிலுள்ள விஜய் மல்லையாவின் பங்களாவை கைப்பற்ற பிரித்தானிய நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து மல்லையாவின் குடும்பத்தினர் அங்கிருந்து வெளியேற்றப்படவுள்ளனர்.

பிரிட்டிஷ் விர்ஜின் ஐலேண்ட் என்ற நிறுவனத்திற்கு சொந்தமான பங்களாவில் மல்லையா குடும்பத்தினர் தங்கியுள்ளனர். இந்த பங்களா கடந்த 2012ஆம் ஆண்டு 20 மில்லியன் பவுண்டுகளுக்காக ஸ்விட்சர்லாந்தின் UBS என்ற வங்கியில் அடமானம் வைக்கப்பட்டிருந்தது.

இதற்கான காலக்கெடு கடந்த 2017ஆம் ஆண்டு முடிவடைந்தது. இதையடுத்து நிலுவைத்தொகை செலுத்தப்படாததால் தொடரப்பட்ட வழக்கில் பங்களாவை கைப்பற்ற இங்கிலாந்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வங்கிக் கடன் மோசடி வழக்கில் விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு அழைத்துவருவதற்கான விசாரணை லண்டன் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மிக நீண்டதூரம் சென்று தாக்கும் ஏவுகணை தடுப்பு அமைப்பை பரிசோதித்த இஸ்ரேல்



மிக நீண்டதூரம் சென்று தாக்கும் ஏவுகணை தடுப்பு அமைப்பை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

The Arrow Weapon System என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த அமைப்பு பூமியின் வளிமண்டலத்திற்கு வெளியே பொலிஸ்டிக் ஏவுகணைகளை இடைமறிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதாகும்.

ஈரான் அல்லது லெபனான் ஹிஸ்புல்லாஹ் அல்லது காசா பகுதியிலுள்ள பலஸ்தீனிய ஹமாஸ் போன்ற போராளிக் குழுக்களுடனான எந்தவொரு மோதலிலுமிருந்து பாதுகாத்துக்கொள்ளும் வகையில் இதனை உருவாக்கியுள்ளதாக இஸ்ரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சர் பென்னி காண்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

### கடலில் மூழ்கும் ஜகார்த்தா

# தலைநகரை மாற்றுகிறது இந்தோனேஷியா




இந்தோனேஷிய தலைநகரை போர்னியோ தீவிலுள்ள காளிமன்டன் என்னுமிடத்திற்கு மாற்றுவதற்கான மசோதாவுக்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

புதிய தலைநகருக்கு 'நுசன்டாரா' என பெயர் சூட்டப்பட்டுள்ளது. பருவநிலை மாற்றத்தால் இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தா மிக வேகமாக கடலில் மூழ்கி வருகிறது. இதனால் போர்னியோ தீவிற்கு தலைநகரை மாற்ற கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி



விடோடோ அறிவிப்பை வெளியிட்டிருந்தார். பெருந்தொற்றால் இதற்கான நடைமுறை தொடர்வதில் தாமதம் நிலவி வந்தது.

இந்நிலையில், தலைநகரை மாற்றும் சட்ட மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. மசோதா நிறைவேறியதும் நாடாளுமன்றத்தில் பேசிய திட்டமிடல்துறை அமைச்சர் சுஹர்சோ, புதிய தலைநகர் தேசத்தின் அடையாளமாக திகழும் என்றார். புதிய தலைநகருக்கு 'நுசன்டாரா' என்று ஜனாதிபதி ஜோகோ விடோடோ பெயர் சூட்டியுள்ளார்.

ஆசியாவின் மிகப்பெரிய தீவான போர்னியோவில் 32 பில்லியன் டொலரில் புதிதாக தலைநகர் அமையவுள்ளது.

காடுகள் நிறைந்த காளிமன்டன் பகுதியில், மருந்து, ஆரோக்கியம், தொழில்நுட்பம் சார்ந்த, குறைந்த கரியமில வாயுவை வெளியேற்றும் தொழிற்சாலைகளை அமைக்க முக்கியத்துவம் அளிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

# எரிமலை சாம்பலால் டொங்கா தீவில் நிவாரணப் பணிகளுக்கு முட்டுக்கட்டை



கடலடி எரிமலைச் சீற்றம் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள டொங்கா தீவு விமானநிலையத்தில் எரிமலை சாம்பல் படர்ந்துள்ளதால் அங்கு நிவாரணப் பொருட்களை அனுப்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து நியூசிலாந்து இராணுவம் தெரிவிக்கையில்,

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள டொங்கா தீவுக்கு நிவாரணப் பொருட்களை எடுத்துச்சென்று வழங்க முயன்றோம்.

ஆனால், அந்நாட்டின் விமான நிலைய ஓடுபாதையில் எரிமலைச் சாம்பல் படர்ந்துள்ளது. இதன் காரணமாக அங்கு நிவாரணப் பொருட்களை ஏற்றிச்சென்ற விமானங்கள் தரை இறங்க முடியாத நிலையுள்ளது. எனவே, அங்கு நிவாரணப் பணிகளைத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

பசுபிக் பெருங்கடல் தீவு நாடான டொங்காவின் தலைநகரம் நுகுஅலோஃபாவுக்கு 65 கி.மீ. தொலைவிலுள்ள ஹுங்கா டொங்கா-ஹுங்கா ஹபாய் எரிமலையில் சனிக்கிழமை சீற்றம் ஏற்பட்டது.

அதையடுத்து, எரிமலையைப் பிழம்பும் நெருப்பு மற்றும் சாம்பலும் கடலுக்கு வெளியே எழுந்தன. கண்களைப் பறிக்கும் அந்தக் காட்சியை டொங்கா தீவிலிருந்து பார்க்க முடிந்தது. இந்த எரிமலைச் சீற்றத்தின் விளைவாக டொங்காவிலும், பிஜி தீவிலும் சுனாமி அலை எழுந்தது.

ஒரு மீற்றருக்கு மேல் உயரத்தில் எழுந்த அந்த சுனாமி அலையால் டொங்கா தீவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளமை செயற்கைக்கோள் புகைப்படங்கள் மூலம் தெரியவந்துள்ளது. இந்தச் சூழலில், அங்கு நிவாரணப் பணிகளைத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.



சுனாமிக்கு முன்....



சுனாமிக்கு பின்..

# உக்ரைனுக்கு பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்களை வழங்கும் பிரிட்டன்

உக்ரைனுக்கு ஆதரவாக கனடா தனது சிறப்புப் படைகளை அனுப்பியுள்ள நிலையில் பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்களை பிரித்தானியா வழங்கவுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்க வாய்ப்புள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதற்கேற்ப உக்ரைன் எல்லையில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான துருப்புகளை ரஷ்யா நிறுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்கத்தேய நாடுகள் தங்களுக்கு உதவி செய்யவேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதையடுத்து பிரித்தானிய



நாடாளுமன்றத்தில் பேசிய பாதுகாப்புத்துறைச் செயலாளர் பென் வேலஸ், உக்ரைனுக்கு சிறிய ரக பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்களை வழங்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

LK Newspapers Viber Community

# லெஜெண்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பம்

## முதல் போட்டியில் ஆசிய லயன்ஸ் – இந்திய மஹாராஜாஸ் பலப்பரீட்சை

கிரிக்கெட் உலகில் இருந்து ஓய்வுபெற்ற வீரர்கள் பங்கேற்கும் "லெஜெண்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடர் - 2022" இன்று ஓமானில் ஆரம்பமாகிறது. குறித்த லெஜெண்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடரில் ஆசிய லயன்ஸ், இந்திய மஹாராஜாஸ், வேல்ட் ஜயண்ட்ஸ் ஆகிய மூன்று அணிகள் பங்கேற்கின்றன.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் மிஸ்பா உல் ஹக் தலைமையிலான ஆசிய லயன்ஸ் அணியின் குழாமில் சனத் ஜயசூரிய, முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ், ரொமேஸ் களுவிதாரண, திலகரத்ன டில்சான், உபுல் தரங்க, நுவான் குலசேகர, அஜந்த மெண்டிஸ் மற்றும் தில்ஹார பெர்னான்டோ ஆகிய 9 இலங்கை வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இன்று ஆரம்பமாகும் குறித்த தொடரானது எதிர்வரும் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொடரில் மொத்தமாக 7 போட்டிகள் நடைபெறவுள்ளன. லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் எதிரணிகளை தலா இரண்டு போட்டிகள் வீதம் மொத்தமாக நான்கு போட்டிகளில் விளையாடும். இதில் புள்ளிப்பட்டியலின் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் 29ஆம் திகதி நடைபெறுகின்ற இறுதிப்போட்டியில் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இலங்கை நேரப்படி இன்று




இரவு 8.00 மணிக்கு நடைபெறுகின்ற முதல் போட்டியில் இந்திய மஹாராஜாஸ் அணியை எதிர்த்து ஆசிய லயன்ஸ் அணி மோதுகிறது.



# பாகிஸ்தானில் தங்கம் வென்ற முல்லைத்தீவு யுவதி

(கே. குமணன்)

தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வந்து குத்துச்சண்டையில் சாதித்து பாகிஸ்தானில் இடம்பெறும் சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் பங்குகொண்ட முல்லைத்தீவு யுவதியான கணேஷ் இந்துகாதேவி தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு புதியநகர் கிராமத்தில் தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து குத்துச் சண்டையில் சாதித்து வரும் கணேஷ் இந்துகாதேவி, பாகிஸ்தானில் இடம்பெறும் சர்வதேச போட்டியில் பங்குகொள்ள தெரிவாகி பாகிஸ்தான் சென்றிருந்தார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் லாகூரில் இடம்பெற்ற 25 வயதுக்குட்பட்ட 50-55 கிலோகிராம் எடைப்பிரிவில் இடம்பெற்ற குத்துச்சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் வென்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமை தேடிக்கொடுத்த இவரை பல்வேறு தரப்பினரும் பாராட்டி வருகின்றனர்.

# சானக்கவின் சதம் வீண்; சிம்பாப்வேயிடம் வீழ்ந்த இலங்கை

சிம்பாப்வே அணியுடனான இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இலங்கை அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்த நிலையில், இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 302 ஓட்டங்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் கிரேக் ஏர்வின் 91 ஓட்டங்களையும் சிக்கன்டர் ராஸா 56 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜெப்ரி வென்டர்ஸே 3 விக்கெட்களையும் நுவான் பிரதீப் 2 விக்கெட்களையும்



அதிகபட்சமாக வீழ்த்தினர். 303 என்ற கடின வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணிக்கு அணித்தலைவர் தசுன் சானக்கவின் சதம், கமந்து மெண்டிஸின் அரைச்சதம் என்பன வீணானது.

இறுதியில் இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்து 280 ஓட்டங்களை மாத்திரம் பெற்று போட்டியில் தோல்வியைத் தழுவியது. இதனைத் தொடர்ந்து மூன்று போட்டிகள் கொண்ட தொடர் 1-1 என்ற அடிப்படையில் சமநிலை பெற்றிருக்கும்நிலையில் தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கின்ற இறுதிப்போட்டி நாளை கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.



# ஆண்டின் சிறந்த உதைபந்து வீரரான லெவன்டோவ்ஸ்கி

2021ஆம் ஆண்டுக்கான பிபா சிறந்த உதைபந்து வீரருக்கான விருதை போலந்தைச் சேர்ந்த ரொபர்ட் லெவன்டோவ்ஸ்கி வென்றார். சுவிட்ஸர்லாந்தில் அமைந்துள்ள பிபா தலைமையகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற பிபா விருது வழங்கும் நிகழ்வில் 2021ஆம் ஆண்டின் சிறந்த வீரருக்கான பரிந்துரையில் நட்சத்திர வீரரான அர்ஜென்டினாவின் மெஸ்சி, எகிப்தின் முஹமட் சாலா ஆகியோர் இருந்த நிலையில் அவர்களை பின்தள்ளி அதிக வாக்குகள் பெற்று லெவன்டோவ்ஸ்கி விருது வென்றார்.

இவர் இந்த விருதை வென்றது இது 2ஆவது முறையாகும். கடந்த ஆண்டும் சிறந்த வீரராக தேர்வானார். கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு பின் 2ஆவது முறையாக இவர் இந்த விருதை வென்றார். பார்சிலோனா மகளிர் அணியின் தலைவியும் ஸ்பெய்ன் வீராங்கனையுமான அலெக்ஸியா புட்டெல்லாஸ் சிறந்த மகளிர் வீராங்கனைக்கான விருதைப் பெற்றார்.

நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ பிபா சிறப்பு விருதை பெற்றார். சிறந்த ஆடவர் கோல் காப்பாளராக செனகலை சேர்ந்த எட்வார்ட்மெண்டி, மகளிர் பிரிவில் சிலியின் எண்ட்லர் ஆகியோர் விருது பெற்றனர்.

# இன்று கென்யாவை எதிர்கொள்ளும் இலங்கை மகளிர் அணி



இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவின் மகளிர் கிரிக்கெட் போட்டிக்கான எஞ்சிய ஒரு அணியை தேர்வுசெய்யும் தகுதிகாண் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மலேஷியாவில் நடைபெற்றுவரும் நிலையில், இலங்கை மகளிர் அணி தனது இரண்டாவது போட்டியில் இன்று கென்ய மகளிர் அணியை எதிர்கொள்கிறது. இந்தப் போட்டி இலங்கை நேரப்படி காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

முன்னதாக ஸ்கொட்லாந்து மகளிர் அணியை 109 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மிக இலகுவாக வீழ்த்திய இலங்கை மகளிர் அணி, இன்று கென்யாவை வீழ்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. 5 அணிகள் பங்கேற்கின்ற இந்த தகுதிகாண் போட்டியில் சம்பியனாகும் அணிக்கு மாத்திரமே 2022 பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்கு பெறக்கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்த திருகோணமலை லயன்ஸ் வி.க

(ரவ்பீக் பாயிஸ்)

ரத்மலை கிங்ஸ் இலவன் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் வெற்றிக்கிண்ணத்தினை திருகோணமலை லயன்ஸ் விளையாட்டுக்கழகம் தனதாக்கி கொண்டது.

திருகோணமலை ரத்மலை ரஹ்மானியா இளைஞர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அணிக்கு எட்டு பேர் கொண்ட ரத்மலை கிங்ஸ் இலவன் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி மூன்றாவது நாளாக நேற்று முன்தினம் ரத்மலை முஸ்லிம் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.



மட்டுப்படுத்தப் பட்ட நான்கு ஓவர்களைக் கொண்ட இவ் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 24 அணிகள் பங்குபற்றின. நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை லயன்ஸ் அணியினர் 4 ஓவர்கள் முடிவில் இரண்டு விக்கெட் இழப்பிற்கு 35 ஓட்டங்களை பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அக்கர சீய அணியினர் 4 ஓவர்கள் முடிவில் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்து துரதிர்ஷ்டவசமாக தோல்வியடைந்தனர். இச்சுற்றுப்போட்டியின் ஆட்ட நாயகனாக திருகோணமலை லயன்ஸ் அணியின் நட்சத்திர விளையாட்டு வீரர் நாசர் தெரிவு செய்யப்பட்டதுடன் வெற்றிபெற்ற அணிகளுக்கு கிண்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சம்பியன் அணிக்கு ரூபா 25,000 மற்றும் இரண்டாம் நிலை அணிக்கு ரூபா 15,000 என பணப்பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# அஷ்ரஃப் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றிய காரைதீவு ரைடர்ஸ்




(சியாத் எம். இஸ்மாயில்)

அஷ்ரஃப் இளைஞர் கழகம் ஏற்பாடு செய்த மின்னொளி கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி அட்டாளைச்சேனை அக்/அல்-அர்ஹம் வித்தியாலய மைதானத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது. 12 அணிகள் பங்கு கொண்ட இச்சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டிக்கு அட்டாளைச்சேனை ப்ளூ இலவன் அணியும் காரைதீவு ரைடர்ஸ் அணியும் தெரிவாகின.

இறுதிப் போட்டியில் காரைதீவு ரைடர்ஸ் அணி 25:21, 25:23, 25:18 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றியை தனதாக்கிக் கொண்டது. சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட காரைதீவு ரைடர்ஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் ரூ. 15,000 பணப் பரிசும் வழங்கப்பட்டதுடன் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட அட்டாளைச்சேனை ப்ளூ இலவன் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் ரூ. 5,000 பணப் பரிசும் வழங்கப்பட்டது.

அஷ்ரஃப் இளைஞர் கழகத்தின் தலைவரும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.எம். சர்பான் தலைமையில் இடம்பெற்ற இறுதி நிகழ்வுகளில் பிரதம அதிதியாக பெஸ்ட் கெயா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.எம். முனாஸ்டீன் கலந்து கொண்டார்.




அதிதிகளாக அதிபர் ஏ.எம்.எம். இதரீஸ், அக்கரைப்பற்று உதைபந்தாட்ட சம்மேளனத் தின் பொருளாளர் எஸ்.எம். நிஸாம் (ஜே.பி), சம்மாந்துறை ஜின்னா செலூலர் நிறுவனத்தின் உரிமையாளர் எம்.ஜே.எம். இர்பான், அட்டாளைச்சேனை ஐ.பி.எல் சமூக சேவைகள் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.எச். சபீக், அட்டாளைச்சேனை ஐ.பி.எல். சமூக சேவைகள் ஒன்றியத்தின் செயலாளர் ஏ. நிபாஸ் மற்றும் எஸ் டெக்ஸ் என்ஜினியரிங் பிரைவேட் லிமிடட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.ஐ.எம். சிஹான் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

போட்டியின் சிறந்த வீரருக்கான விருது காரைதீவு ரைடர்ஸ் அணியின் தனுஜனுக்கு வழங்கப்பட்டது.








KK Newspapers Viber Community

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7